இப்பொழுது
muhavary.com இலும்
படிக்கலாம்


முகவரி
MUHAVARY

மாதாந்த சஞ்சிகை எண்: 9 பாதை: 1 ஜுன்-ஜுலை 2015

சட்டமும் ஒழுங்கும் மீண்டும் வருமா?




MMUCC
URGENT CARE
Markham McNicoll Urgent Care Centre (MMUCC)
விரைவு மருத்துவ நடுவம்
மார்க்கம்–மக்நிகொல்
* Walk-In Clinic
* Urgent Care
* Lab Services (For our patients)
* X Ray & Ultrasound, Pharmacy & Physiotherapy (In the same building)
*Monday - Friday : 8am - 9pm
*Sat, Sun & Holidays: 9am - 4pm
Our staff can speak English, Hindi, Tamil, Malayalam & other languages.
Unit - 11, 2901 Markham Road, Scarborough, ON M1X 0B6
Call:. 416-609-3333


The Courier Source
We Deliver the Promise
LOCAL SERVICES - NATIONWIDE - GLOBAL SERVICES
905-761-7979
E: sales@thecouriersource.com
8600 Keele Street, Unit 10, Concord, ON.
www. thecouriersource.com


www.idhayamfm.com
இதயம் FM
உற்சாகத்தின் உற்ற நண்பன்



JAI SAI FLORIST
Available for Wedding, Pooja and other Occasions
Wedding Flower, Wedding Bouquet, Funeral Wreaths
Casket Adornment, Casket Spray, Standing Sprays
www.jaisaiflorist.com
416-396-9888/ 416-505-1252/ 647-707-0369
5215 Fish Ave East. # 123 GTA Square, Scarborough, ON


For your life Insurance, RESP, Critical Illness & Super Visa Coverage
Vany Jeganmohan
Insurance Advisor
416.670.7436
vany@megafinancial.ca
www.vanyfinancial.ca


TEL: (647) 706-8231
NATHAN TRADERS
பூசைப் பொருட்கள்
சுவாமிப் படங்கள் மற்றும்
வீட்டுப் பாவனைப் பொருட்கள்
Textiles, Fancy, Utensils, ect...
5215 Finch Ave East. UNIT #:156 Scarborough, ON, M1S 0C2


Yoga Health Center
RAJI
Yoga Instructor / Yoga Therapist
5215 Finch Ave East
Toronto, ON M1S 0C2
UNIT 207
(416)-780-7699
chandraleka28@gmail.com


சென்னையில்......
24512276
Call: 9841094150
VIMALAN TRAVELS
CAR QUALIS OPERATORS
H-53/F3, 57th Steet,
Marutham Apartment,
Thiruvalluvar Nagar, Thiruvanmiyur,
Chennai - 600 041.
N. GANESAN
Proprietor


INEEKA JEWELLERY & GIFTS
இனிகா ஜூவல்லரி & கிவ்ற்
நகைத் திருத்த வேலைகளை உடனுக்குடன் செய்துகொள்ளவும்,
பழைய நகைகளிற்கு அதிக விலையினைப் பெற்றிடவும்
5215 Finch Ave E. UNIT #111
Scarborough, ON, M1S 0C2
BUS: 416-293-0440
CELL: 647-924-5153



பான் ஆம்

பாடசாலைகள் தேவையற்றனவா?

நிலாவில பணக்காரர்...

மக்களின் போராட்டங்கள் வன்முறையா?

வைத்தீசுவரக் குருக்கள்



ஆப்கானிஸ்தானில் சீனா

13+

அந்த ஓவியம்



ஆத்ம நிவேதனம்

சீதக்காதி


உங்கள் ஆரோக்கியச் சிரிப்பு - என்றென்றும்
HEALTHY SMILE - FOREVER
Dr.Baheerathan Thurairajah
&
Associates
சகல பல் வைத்திய
சேவைகளுக்கும்
For all your dental needs
Including braces
416-291-1085
Kennedy & Finch
3852 Finch Ave E. Suite 207 & 208
Scarborough, ON. M1T 3T9

முகவரி

Special Editor
Kalasoori A. Sivanesaselvan MA, MSc.

Chief Editor
Ratnam

Editor
Vaanan

Montreal Bureau Chief
N. Satchithananthan (+1 514-827-8392)

Sri Lanka Bureau Chief
SP. Bala (+94 21 205 2240)

Advertisements
George Subramaniam, Masil

Public Relations
T. Sivanesan

Technology
Gnanavathanan V R M

Layout & Design
Muhavary, S.Kaja

Contact
5215, Finch Ave. E., Unit 218,
GTA Square,
Toronto, Ontario.
M1S 0C2
Canada.

Canadian College of Professional Studies (CAPS)
52, Palaly Road,
Thirunelvely,
Jaffna,
Sri Lanka.

e-mail: info@muhavary.com
phone: (+1) 416 628 6214
fax: (+1) 416 619 0335
web: muhavary.com

முகவரி

சட்டத்தின் ஆட்சி

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மட்டும்
தேர்ந்துசெய் வ∴தே முறை.

குறள் 541-பொருட்பால்-அரசியல்-செங்கோன்மை

குற்றம் இன்னதென்று ஆராய்ந்து எந்தப் பக்கமும் சாயாமல் நடுவு நிலைமை தவறாமல் வழங்கப்படுவதே நீதியாகும் என்பது இதன் பொருள்.

சட்டத்தின் ஆட்சி பற்றிய அடிப்படை தமிழர் சமூகத்தில் ஈராயிரம் வருடங்களுக்கு முன்னரே உணரப்பட்டதன் அடையாளம் இது.

சட்டத்தின் முன் யாவரும் சமம். சட்டத்தின் மேன்மைக்கு மேலான அதிகாரம் எவருக்கும் இல்லை என்ற சட்டவாட்சியின் மேன்மையை நிலைநிறுத்திய 'மக்னா காட்டா' விற்கு இந்த ஆண்டு எண்ணூறு வயதாகி இருக்கிறது. இந்திய மண்ணில் அரச அதிகாரங்கள் அதிகரிக்கப்பட்டு இந்திய ஆட்சிப் போக்கிலே அடிப்படை மாற்றங்களை ஏற்படுத்திய 'அவசரநிலைப் பிரகடனம்' அறிவிக்கப்பட்டு நாற்பது வருடங்கள் ஆகியிருக்கின்றன. உலகளாவிய ரீதியில் சட்டத்தின் ஆட்சி பற்றிய விழிப்புணர்வு அண்மைக்காலங்களில் மிகச் சாமானியர்களிடத்திற் கூட அதிகரித்து வருகிறது. இந்த வரலாற்று நிகழ்வுப் போக்கிலே நமது சமூகம் எங்கே நிற்கிறது? ஈழத்தமிழர் சமூகம் நிலத்திலும் புலத்திலும் இவ்வாறான முற்போக்கான சமூக மாற்றங்களைத் தன்னகத்தே உள்வாங்கி வளர்ச்சி கண்டிருக்கிறதா? மாண்புமிக்க மனித உயிர்களைக் கொத்துக் கொத்தாக பலிகொண்ட எமது கடந்த காலத்திலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடங்கள் என்ன? இந்தக் கேள்விகளுக்கான பதில்கள் நிச்சயமாகத் திருப்திகரமானதாக இருக்க முடியாது.

சில தசாப்தங்களுக்கு முன்னர் வரை சட்டத்தையும் சமூக ஒழுக்கத்தையும் முன்னிறுத்தி வாழ்ந்த எமது சமூகத்தில் அரசியல் வியாபாரிகளினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சட்ட மறுப்பு வியாபாரம் இன்றுவரை தொடர்கிறது. புரட்சிகர அரசியலில் ஆதிக்க வர்க்கத்தின் ஆயுதமாகப் பயன்படுகின்ற சட்டங்களை எதிர்ப்பதென்பதும் அதற்காகப் போராடுவதென்பதும் சாதாரண மனித வாழ்வில் 'சட்டமும் ஒழுங்கும்' என்ற விடயத்துடன் குழப்பப்பட்டு சட்டத்தை மதிக்காத சமூகமாக எம்மை மாற்றியிருக்கிறது.

தனிமனித ஒழுக்கத்திலும் சமூக ஒழுக்கத்திலும் கடவுளைப் பிரதியீடுசெய்த 'சட்டம்' மதிக்கப்படாத நிலை சமூகத்தின் ஒட்டுமொத்த சீரழிவுக்கு இட்டுச் செல்லும்.

நீண்ட வன்முறை சார்ந்த சூழலுக்குப் பழக்கப்பட்டதனால் சட்ட மறுப்புக்குப் பழக்கப்பட்டுப்போன நமது சமூகம் பயணிக்கிற திசையை மாற்றி சமூகத்தை நல்வழிப் படுத்தவேண்டிய பொறுப்பு உள்ள நமது அரசியற் தலைமைகள் தமது கடமை மறந்து. மறுத்து அந்தச் சூழலையே பயன்படுத்திப் பிழைப்பு நடாத்துவதிலிருந்து இன்னும் விடுபடுவதாயில்லை. இந்த அபாயகரமான சூழலில் சமூகப் பொறுப்பற்று இயங்குகின்ற அரசியல் தலைமைகளிடத்திலிருந்து சமூகத்தை மீட்டு நல்வழிப்படுத்தும் பொறுப்பை அரசியலுக்கு அப்பாற்பட்டுச் செயற்படத் துணிந்த கல்விசார் அறிவுசார் சமூகம் பொறுப்பேற்க முன்வரவேண்டும். தமிழ் மக்களின் பல்கலைக்கழகச் சமூகங்கள் அதன்மீது அளப்பரிய பங்கையும் தாக்கத்தையும் ஏற்படுத்தலாம் என்பது முகவரியின் தாழ்மையான கருத்து.

'முகவரி' ஈழத்தமிழர் சமூகத்தில் புதிய சிந்தனைப் பண்பாட்டை வேண்டிநிற்கின்ற சஞ்சிகை. புலத்தில் மட்டுமன்றி நிலத்திலும் அதன் பணி இன்றியமையாதது என்பதை உணர்ந்து. அதற்கான தயாரிப்பில் ஈடுபட்டதனால் அதன் தொடர்ச்சியான வருகையில் சிறிய இடைவெளி ஏற்பட்டுவிட்டது. மகிழ்ச்சியான செய்தி என்னவென்றால் இந்த இதழிலிருந்து 'முகவரி' ஈழத்திலும் மலர்கிறது.

ஆசிரியர்.



நன்றி: பிரகீத் ஏக்நேலியகொட



Pan Am Games 2015

ரொரண்டோவில் 17வது Pan Am விளையாட்டுப் போட்டிகள் 2015 ஜூலை 10ம் திகதி ஆரம்பமாகின. அமெரிக்க் கண்டத்திலுள்ள நாடுகள் பங்குபற்றும் இந்தப் போட்டிகளில் 6000 ற்கும் மேற்பட்டட வீர வீராங்கனைகள் பங்குபற்றுகின்றனர். போட்டிகள் நடைபெறும் இடங்கள் சொந்த இருமாக இருப்பதால் கனடாவிற்கு அதிகப்படியான போட்டியாளர்கள் பங்குபற்றுகின்றனர். இதற்காக இரு வருடங்களுக்கு முன்பாகவே இதற்கான பயிற்சி முகாம்கள் அமைக்கப்பட்டு பயிற்றுவிக்கப்பட்டு தயாராக இருந்தனர். கனடிய இரசிகர்களுக்கு உற்சாகமாக இருக்கப்போகின்ற இந்தக் காலப்பகுதி பாடசாலை விடுமுறைகாலமாகவும் இருப்பதனால் ரொரண்டோ களைகட்டியுள்ளது. விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்துவதன் மூலம் இம்முறை அதிகப்படியான பதக்கங்களை வெல்லும் வாய்ப்புள்ளது. அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டிகளில் கனடா அதிக பதக்கங்களை வெல்ல இப் போட்டிகள் உறுதுணையாக அமையும் என மக்கள் நம்புகின்றனர். பான் ஆம் விளையாட்டு வீரர்கள் தங்குவதற்காக பல இலட்சம் டொலர் செலவில் அடுக்குமாடிக் கட்டிடத் தொகுதிகள் மிகவும் நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளன. இதனை ரொரண்டோ மாநகருக்கான வருங்கால முதலீடாகவே கொள்ளலாம். மேலும், இப்போட்டிகளை வெற்றிகரமாக நடாத்தி முடிப்பதன் மூலம் ரொரண்டோ மாநகரைக் கூடிய தரத்திற்குக் கொண்டுசெல்ல முடியும் என அவதானிகள் கருதுகின்றனர். எதிர்காலத்தில் ஓரிம்பிக் போன்ற போட்டிகளை நடாத்த வாய்ப்புகள் கிடைக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.



HOV Lane

போக்குவரத்துச் சிக்கலைக் குறைக்க HOV Lane களை அறிமுகப்படுத்தியுள்ளனர். இந்த லேன்களில் குறைந்தது 3பேர் உள்ள வாகனங்களையே செலுத்த முடியும். இதன்மூலம் ரொரண்டோவிள்ள வாகன நெரிசலைக் குறைக்கலாம் என்று எதிர்பார்கப்படுகிறது. மேலும் யூனியன் சப்வேயிலிருந்து பியசன் சர்வதேச விமான நிலையத்திற்கு கடுகதி புகையிரதச் சேவையும் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்புச் சேவையில் பல தனியார் நிறுவனங்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. இதன் மூலம் ரொரண்டோ நகர வாசிகளிற்கு வேலைவாய்ப்பு அதிகரித்துள்ளது. ரொரண்டோனியன் என்ற பெருமை சேர்க்க எங்களாலான ஒத்துளைப்பையும் ஆதரவையும் கொடுப்போம்.





மக்களின் போராட்டங்கள் வன்முறையா?

ஒரு ஜனநாயக நாட்டில் மக்களின் போராட்டத்துக்கான அனுமதியை அந்த நாட்டு அரசு வழங்கி போராட்டத்துக்குத் தனது ஆதரவையும் தெரிவித்து வருவது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆனால் மக்களின் போராட்டத்துக்கு அனுமதி வழங்காத நாடுகளும் இருக்கின்றன. அந்த நாடுகளின் வரிசையில் இலங்கை முதலாவது இடமாக இருக்கிறது. அதாவது அரசுக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் போராட்டங்களாக மக்களின் போராட்டங்களை திசை திருப்பி அந்தப் போராட்டங்களில் ஈடுபட்டவர்களைப் பயங்கரவாதிகள் என்றும் முத்திரை குத்தப் பார்க்கிறார்கள். இதற்கு அப்பாவி தமிழ் மக்கள் பலிக்கடா ஆக்கப்படுவது வேதனையான விடயம். இதனை பொறுப்பு வாய்ந்த எவருமே கவனத்தில் எடுப்பதில்லை. குற்றத்தை மற்றவர்மீது போட்டுவிட்டு தாம் தப்பித்துக்கொள்ளும் சூழ்நிலை இன்றும் தமிழர் மண்ணில் இருக்கிறது. இந்த நிலையில் மக்களின் போராட்டத்துக்கான காரணங்கள் மூடி மறைக்கப்படுகிறது.

மக்களின் போராட்டத்துக்கான காரணங்களை எவருமே கண்டு கொள்ளாமல் இருந்து கொண்டு அந்தப் போராட்டத்தின் மீது குற்றம்சுமத்தி விடுகின்றனர். இதனால் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களின் கோரிக்கைகள் தீர்வின்றிக் கிடப்பில் போடப்படுகின்றன. இதனால் நாட்டில் தீர்வின்றி இருக்கும் மக்கள் மீண்டும் மீண்டும் போராட்டங்களில் ஈடுபடவே உந்தப்படுகிறது. இதனை கவனத்தில் கொண்டு அரசு மக்களின் போராட்டத்திற்கான தீர்வை ஏற்படுத்திக் கொடுக்குமானால் இலங்கையில் தமிழ் மக்கள் நிம்மதியாக வாழமுடியும். மீண்டும் ஒரு இரத்தக் கறையை தமிழ் மண்ணில் ஏற்படுத்துவதற்கான வழியை இல்லாமல் செய்யமுடியும். இதனை அரசியல்வாதிகள் முதலில் நினைக்கவேண்டும். தமிழ் மக்களுக்கு பிரச்சினையே இல்லை என்ற வாதம் அரசியல்வாதிகளிடம் நாட்கள் செல்லச்செல்ல நெருங்கிவருகிறது. தேர்தல் காலங்களில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்போம் என்று மேடைகளில் கோசம் போட்டு மக்களி டம் வாக்குப் பெற்று வந்து அரச தரப்பாக இயங்குவதால் தான் நாட்டில் தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்கமுடியாமல் நீண்டுகொண்டே செல்கிறது.

கடந்த மே 20 ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைக்கு தீர்வு வேண்டி மக்கள் பெரும் போராட்டமொன்றை மேற்கொண்டனர். அந்தப் போராட்டத்தை வேறு திசைக்கு இழுத்துச்சென்றது யார்? யாழ் நீதிமன்றம் மீதும் யாழ் பொலிஸ் நிலையம் மீதும் முதலில் கல்லெறிந்தவர்கள் யார் என்று பார்த்தால் அவர்களை முகம் காட்ட முடியும். அவர்களின் எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் போராட்டம் ஒன்றை இனிமேல் நடத்தக் கூடாதென்ற நோக்கில் நீதி கேட்டுப் போராடிய மக்களின் போராட்டத்தை திசைதிருப்பி அசிங்கப்படுத்தி உள்ளனர். 127 இளைஞர்கள் கைது என்ற செய்தி அந்தப் போராட்டத்தையே வீணாக்கிவிட்டது. இதனை தமிழ் மக்கள் நன்கு உணர்ந்து இனிவரும் காலங்களில் போராட்டங்களில் ஈடுபடும் போது கவனமாக இருக்கவேண்டும். ஏனெனில் மக்களின் நியாயமான போராட்டத்தைக் குழப்பி அந்தப் போராட்டம் தீர்வின்றி கிடப்பில் போடுவதற்கு ஒரு கூட்டமே இறக்கப்பட்டுள்ளது.

பெண்கள் வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு படுகொலை செய்த சம்பவங்கள் தமிழ் மண்ணில் நிறைய இடம்பெற்றுள்ளன. இந்தச் சம்பவங்களுக்குக் காரணமாக இருந்த குற்றவாளிகள் தண்டிக்கப் படாமல் இன்றும் நடமாடுகின்றனர். இந்த சூழ்நிலையில் மேலும் மேலும் இது போன்ற சம்பவங்கள் இடம்பெறாது என்று நம்பகரமாக சொல்லமுடியாது. வித்தியாவின் கொலைக்கு காரணமானவர்கள் தண்டிக்கப்படவேண்டும். அப்பொழுது தான் எமது மண்ணில் பெண்கள் பயமின்றி நடமாடமுடியம். கைதுசெய்யப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படக்கூடாது. சட்டத்தரணிகள் நீதியின் பக்கம் நிற்கவேண்டும். பணத்துக்காக வாதாடி குற்றவாளிகளை மீட்பார்களாயின் தமிழர்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் வழங்கமுடியாத சூழ்நிலை ஏற்படும் என்பது உண்மை.

சட்டத்தரணிகள் பணத்துக்காக எதையும் செய்வார்கள் என்று இணையத்தளங்கள் செய்திகள் வெளியிடுகின்றன. இச்செய்திகள் பொய் என்று தெரிவிக்கும் வகையில் வித்தியாவின் கொலைக்கு நீதியான தீர்ப்பு வழங்கப்படுவதற்கு உழைக்கவேண்டும். வித்தியாவின் கொலை கடைசிக்கொலையாக இருக்கவேண்டும். நீதியில்லாத நாட்டில்தான் வன்முறைகள் ஏற்பட வழி ஏற்படுகிறது. நீதியை நிலைநிறுத்த முதலில் செயலாற்று பவர்கள் சட்டத்தரணிகள் என்று எல்லோருக்கும் தெரியும். நீதிக்கே தண்டனை ஏற்படின் இந்த நாட்டில் சட்டத்தரணிகள் இருந்து என்ன பயன். போர் இடம்பெற்ற காலப்பகுதியில் பல கொலைகள் இடம்பெற்றன அந்தக் கொலைகளுக்கு இன்றும் நீதி வழங்கப்படவில்லை.

ஒரு நாட்டின் வளர்ச்சிக்கு நீதித்துறையே காரணமாக அமைந்துள்ளது. நீதித்துறை எமது நாட்டில் வளர்ச்சி கண்டிருந்தால் இப்படிப்பட்ட மக்கள் போராட்டங்கள் இடம்பெறாது என்றோ கட்டுப்படுத்தியிருக்கமுடியும். இதை மனதில் வைத்துக்கொண்டு நீதிக்காகப் போராடவேண்டும். அப்பொழுதுதான் எமது நாட்டில் ஜனநாயகம் கட்டிக்காக்கப்படும்.பிரச்சினைகளை எதிர் கொண்டு எதிர்நீச்சல் போடவேண்டும் என்று எத்தனை காலம் நம்பமுடியும். பிரச்சினைகளை எதிர் கொண்டே மூன்று தசாப்த காலம் கடந்தும் இன்றும் முடிவுறாமல் தொடர்கிறது.பயங்கரவாதிகளிடம் இருந்து தமிழ் மக்களை மீட்டதாகச் சொல்லும் அரசு அந்த மக்களை இன்று யாரிடம் இருந்து மீட்கப்பார்க்கிறது.

தமிழ் மக்களை நிம்மதியாக வாழவிடு ங்கள். அவர்களை மீண்டும் இருண்ட வாழ்வுக்குள் தள் ளாதீர்கள். பாதிப்பை ஏற்படுத்திய வனை விசாரிக்காமல் பாதிக்கப் பட்டவனை விசாரணை என்ற பெயரில் மேலும் மேலும் துன்பப்படுத்துவது எந்தவிதத்தில் நியாயமாகும். வன்முறைக்கென்றே உருவாக்கப்பட்டவர்கள் உலாவும் மண் இது தமிழ் மக்கள் கவனமாக இருக்கவும். போரில் இலாபம் அடைந்தவர்கள் இப்பொழுது என்ன செய்யமுடியும். வன்முறைகள் மூலம் மீண்டும் இலாபம் ஈட்ட முயற்சிக்கிறார்கள். இதில் மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும்.

நீதிகேட்டு மக்கள் போராடமுற்படும்போது அந்தப் போராட்டத்தில் வன்முறையை ஏற்படுத்தவென்று சிலர் உள் நுழைவார்கள். அவர்களை முதலில் இனங்காணுங்கள் பின்பு ஜனநாயக வழியில் போராட்டத்தை நடத்துங்கள். தமிழ் மக்கள் கூட்டம் கூடும்போது அதையே பெரிதாகப் பார்க்கும் பார்வை இன்றும் குறையவில்லை. தமிழ் மக்கள் ஒன்று கூடிவிட்டால் என்ன கூடாவிட்டால் என்ன ஏன் அவர்களை இந்தப் பார்வை கொண்டு பார்க்கிறியள்.

வன்புணர்வுக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்ய ப்பட்ட சம்பவங்கள் எமது மண்ணில் எண்ணுக்கணக்கில் லாமல் இடம்பெற்றுள்ளன. இந்த சம்பவங்களுக்கு தொடர்புபட்டவர்கள் என்று மக்களால் அடையாளம் காட்டப்பட்டு கைது செய்யப்பட்டவர்கள் தண்டனை பெறாமல் விடுதலை செய்யப்பட்டனர். இதற்கு சட்டத்தரணிகளும் காரணமாக அமைகின்றனர். இதனால் வித்தியாவின் கொலைக்கு காரணமானவர்கள் மக்களால் அடையாளம் காட்டப்பட்டு கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களும் எந்தத் தண்டனையும் பெறாமல் விடுதலை செய்யப்படக்கூடும் என்ற காரணத்தால் மக்கள் பெரும் போராட்டத்தில் ஈடுபட்டனர்.



MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE

#1 Brokerage in Toronto

Brokerage Office : 112–895, Don Mills Rd, Toronto, ON, M3C 1WC Office Phone : 416-391-3232

மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

பவர் ஒப் சேல்

பிரச்சினையா ?

- நல்ல ரேட்ல மோட்கேஜ் செய்ய வேணும்?
- லைன் ஒப் கிரெடிட் எடுக்க வேணும் ?
- ரீபைனான்ஸ் செய்ய வேணும்?
- 2வது, 3வது மோட்கேஜ் எடுக்க வேணும்?



- பாங்க்ரப்சி நிலையில மோட்கேஜ் செய்ய வேணும்?
- எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க மாத்த வேணும்?
- வீடு வாடகைக்கு விட அல்லது எடுக்க வேணும்?
- வீடு வாங்க வேணும்/ வீடு விற்க வேணும் ?

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,



“மோட்கேஜ் கிளினிக்”

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

திங்கள்—வெள்ளி (call for an appointment)

BEST RATE GUARANTEED

வோக் இன் - சனிக்கிழமை 9.00 - 5.00

MORTGAGE IN ANY SITUATION



எமது முகவரி

1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9

(Markham & HWY 401)



சுதேசன் பத்மநாதன் M.Com, B.Com
Mortgage Agent/ Real Estate Sales Representative
FSCO Lic # M 12001741
Cell : 647-861-8240

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
Cell : 416-624-4843

And,,

For All Your Real Estate Services

41 ஆண்டுகள் கழிந்தும் உரும்பிராய் சிவகுமாரனைப் பற்றி நாங்கள் நினைவாஞ்சலி செலுத்துகின்றோம் என்றால் அதற்கு முக்கிய காரணம், அவர் செய்த முதல் உயிர்த்தியாகம் தான். தமிழ் இளைஞர்கள் உரிமைப் போரில் ஈடுபாடு இல்லாத காலகட்டமான 1968-1969 ஆண்டளவில் வயதிலே இளையவனான சிவகுமாரன் விடுதலைக்கான போராட்டங்களை ஆரம்பித்தான், அந்தப் பாதையில் தன்னை முழுமையாக அர்ப்பணித்து, பொலிசாரின் சித்திரவதையில் இருந்து தப்புவதற்காக "சயனைற்" என்னும் நஞ்சினை அருந்தி 05.06.1974 இல் தன் இன்னுயிரைத் தியாகம் செய்தான்.



1969ஆம் ஆண்டு முதல் 1974 ஆம் ஆண்டு வரை சிவகுமரனால் முன்னெடுக்கப்பட்ட சில போராட்டங்களைப் பற்றி எனக்குத் தெரிந்தவற்றை நினைவு கூர்ந்து அவருக்கு வீரவணக்கம் செலுத்தும் சந்தர்ப்பமாக இதைக் கருதுகிறேன்.

1969 ஆம் ஆண்டில் நானும் சிவகுமாரனும் கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் ஒன்றாகப் படித்தோம். அங்கு எமது நட்பு ஆரம்பமாகியது. அந்த நாட்களில் கல்லூரி ஓய்வு நேரங்களில் தமிழர்கள் தங்களுக்கு சமவுரிமை கேட்கும் அதே நேரத்தில் தமக்குள்ளே உள்ள ஏற்றத்தாழ்வுகளை முதலிற் களைவதே அதற்கான முதற்படி என்று திடமாகக் கூறுவார். எடுத்த முயற்சி யில் ஒருபோதும் பின்வாங்காத தனித்துவத்துடன், அதற்காகத் தமிழ் இளைஞர்களைத் திரட்டுவதில் ஆர்வமாக இருந்தான்.

தமிழர் மத்தியில் தனது போராட்டமாகச் சமபந்தி போசனத்தை ஆரம்பித்தான். சில இளைஞர்களும் இவனது போராட்டத்திற்கு முழுமையான ஒத் துழைப்பினை வழங்கினர்.

இத்தகைய போராட்டங்களைச் சிறப்பாக முன்னெடுத்து நடத்தியதன் மூலம் இளைஞர்கள் மத்தியில் முதலாவது போராட்ட வீரனாகச் செயற்பட்டான். இக் காலகட்டப் பகுதியில் (1970) இலங்கையில் ஸ்ரீமாவோ அரசு பதவிக்கு வந்தது. அதன் உதவி அமைச்சர் ஒருவர் சிவகுமாரனின் சொந்த ஊரான உரும்பிராயில் உள்ள சைவத்தமிழ் வித்தியாலயத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றிற்கு வருகை தந்திருந்தார். அவரின் காருக்குக் கைக்குண்டு வீசப்பட்டது. அந்தச் சம்பவமானது சிவகுமாரனால் முன்னெடுக்கப்பட்டது என்ற சந்தேகத்தின்பேரில் பொலி சாரால் கைது செய்யப்பட்டார். 1970ம் ஆண்டில் நடந்த இச்சம்பவம் தான் ஈழத்தமிழர் வரலாற்றில் முதன் முதலில் நடந்த ஆயுதப் போராட்டமாக நாம் கருதலாம். சிவகுமாரனின் கைதினைத் தொடர்ந்து கொக்குவிலைச் சேர்ந்த முத்துக்குமாரசுவாமி மாஸ்ரரும், அவரது தம்பி ஆனந்தகுமாரசுவாமியும் கைதுசெய்யப்பட்டனர். இவர்கள் மீது பொலிசாரால் வழக்குத் தொடரப்பட்டது.


மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை இடம் பெற்றபோது நானும் பார்வையாளர்களில் ஒருவனாகச் சென்றேன். இந்த வழக்கைப் பார்ப்பதற்கு ஆர்வமுள்ள பல தமிழ் மக்கள் வந்திருந்தபடியால் நீதிமன்றம் நிரம்பியிருந்தது சிவகுமாரனைச் சிறை அதிகாரிகள் அழைத்து வந்து குற்றவாளிக் கூண்டில் ஏற்றினார்கள். சிவகுமாரனைக் கண்டதும் மக்கள் மத்தியில் சிறு சலசலப்பு ஏற்பட்டது. சிவகுமாரனைப் பார்ப்பதற்காக வெளியில் நின்ற மக்களும் உள்ளே நுழையும் முயற்சியில் முண்டியடித்துக் கொண்டு இருந்தார்கள். சிவகுமாரன் சிரித்தபடியே குற்றவாளிக் கூண்டில் நின்றான். அப்போது என் அருகில் இருந்த முதியவர் "இந்தப் பையனின் முகத்தைப் பார்த்தீர்களா? எவ்வளவு அமைதியாகவும், தெளிவாகவும் இருக்கின்றார்" என்றார். அந்த வார்த்தைகள் என் உள்ளத்தில் மிகவும் ஆழமாகப் பதிந்துவிட்டது. சிவகுமாரனின் அமைதியான சிந்தனையும், ஆற்றலின் திறமையும், எதையும் வெளியே காட்டிக்கொள்ளாத தன்மையும், தான் எடுத்த முயற்சியில் உறுதியும் கொண்ட தன்மையானது அவனை ஒரு விடுதலையின் தலைமைத்துவம் கொண்டவனாகக் காட்டிநின்றது. சில மாதங்களின் பின் சிவகுமாரன் நிரபராதியாகக் காணப்பட்டு விடுதலை செய்யப்பட்டார். விடுதலை செய்யப்பட்ட சிவகுமாரன், தமிழினத்தின் விடுதலைக்கான போராட்டங்கள் சிலவற்றைத் தொடர்ந்தும் முன்னெடுத்தார்.

த. முத்துக்குமாரசுவாமி (குமார்)

இலங்கையின் கல்வி அமைச்சராக இருந்த பதியுதீன் முகமட் தரப்படுத்தல் முறையைக் கொண்டு வந்து தமிழ் இனத்தின் கல்வி வளத்தைக் குழிதோண்டிப் புதைக்கும் செயற்பாட்டிற்கு வழிவகுத்தார். இதற்கு எதிராகக் கிளர்ந்தெழுந்த இளைஞர்கள் மாணவர் பேரவை என்ற அமைப்பை உருவாக்கினார்கள். மாணவர் பேரவையின் சார்பில் கண்டன ஊர்வலம் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது. அதன் வெற்றிக்காக முன்னணியில் இருந்து சிவகுமாரன் தீவிரமாகச் செயற்பட்டான். மாணவர் பேரவையின் ஊர்வலத்தின் அன்று சிவகுமாரனும் நானும் ஒலிபெருக்கி பூட்டப்பட்ட காரில் சென்று மாணவ மாணவிகளை பாட சாலைகளைப் பகிஷ்கரித்து, நடக்கவிருக்கும் கண்டன ஊர்வலத்திற்கு வருகைதருமாறு அழைப்பு விடுத்துக் கொண்டு வந்தோம். அப்போது அங்கே வந்த பொலிசார் என்னையும் சிவகுமாரனையும் கைதுசெய்து யாழ் பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்றனர். பொலிஸ் அதிபரின் (எஸ்.பி) முன் நாங்கள் இருவரும் நிறுத்தப்பட்டோம். எம்மை விசாரித்த பொலிஸ் அதிபர் எச்சரித்ததுடன் பாடசாலைகளில் இருந்து 100 யார் தூ ரத்திற்கு அப்பால் நின்று பிரசாரம் செய்ய அனுமதித்து விடுதலை செய்தார். மீண்டு வந்த நாம் ஊர்வலத்தில் பங்கு பற்றினோம் ஊர்வலமானது கொக்குவிலில் இருந்து புறப்பட்டு யாழ். முற்றவெளியைச் சென்றடைந்தது. அங்கு ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

1971ல் யாழ். மாநகரசபை முதல்வர் அல்பிரட் துரையப்பா அவர்களின் காருக்குக் கைக்குண்டு வீசப்பட்டது. அச் சம்பவத்திலும் சிவகுமாரன் மீண்டும் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு அநுராதபுரம் சிறையில் அடைக்கப்பட்டார். பல மாதங்களின் பின் நிரபராதியென விடுதலை செய்யப்பட்டார்.

1973 இல் ஒருநாள் சிவகுமாரன் என் வீட்டிற்கு வந்தார். அன்று நீண்ட நேரமாக இருவரும் எமது போராட்டங்களைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தோம். இரவாகிவிட்ட காரணத்தால் என்னிடம் விடைபெற்றுக்கொண்டு நாளை சந்திப்ப தாகக் கூறிச் சென்றார். அதுதான் எமது கடைசிச் சந்திப்பு என்று நான் எதிர் பார்க்கவில்லை. மறு நாட்காலையில் நானும் என்னுடன் கூடிய வேறு சில இளைஞர்களுமாக 42 பேர் கைது செய்யப்பட்டோம். பல மாதங்களாக எங்கள் சிறைவாசம் நீடித்தது. அந்த இடைக்காலப் பகுதியில்தான் சிவகுமாரன் உரும்பிராயில் இடம் பெற்ற பொலிசாரின் சுற்றிவளைப்பின் போது தன்னிடம் இருந்த 'சயனைற்'றை அருந்தி வீர மரணம் அடைந்தார் என்ற செய்தி எம் எல்லோரையும் மீளாத்துயரில் ஆழ்த்தியது. நான் சிறையில் இருந்தபடியே மிகுந்த மன வேதனைப்பட்டேன்.


மார்க்கம் Golden Cultural Centre இல் ஜூன் மாதம் 7ம் திகதி 2015 அன்று இடம்பெற்ற நினைவு கூரல். சிவகுமாரன் அவர்களின் 41வது நினைவாஞ்சலியில் மூத்த சட்டத்தரணி திரு. [illegible] அவர்கள் உரையாற்றினார். அருகிலிருப்பவர் திரு. [illegible]. சிறப்பாக இடம்பெற்ற இந்நிகழ்ச்சியை திரு [illegible] ([illegible]) உடன் இணைந்து திரு குமார் ஏற்பாடு செய்திருந்தார்.

இந்த தனித்துவமான முடிவின் காரணத்தால் தனது சிறுவயதிலேயே தமிழின விடுதலைக்காக அயராது போராடிய சிவகுமாரன் அந்தப்பாதையில் தன் உயிரையே ஈய்ந்த முதற்போராளி என்னும் பெயரினை வைரவரிகளால் தமிழர்களின் நெஞ்சங்களில் பதிய வைத்துள்ளார். நெஞ்சை உருக்கும் அந்த நிகழ்வு நடைபெற்று 41 வருடங்கள் கடந்த நிலையில் அந்த வீரமறவனுக்கு என் வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

(ஆ.ஸ)

ஈழத்தில் முகவரி

MUHAVARY

ஜூலை 01, 2015 காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் திருநெல்வேலி லட்சுமி மண்டபத்தில் முகவரி சஞ்சிகை அறிமுக விழா நடாத்தப்பட்டது. யாழ் இந்துக் கல்லூரி மற்றும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் ஓய்வுநிலை அதிபர் மதிப்புக்குரிய திரு. அ. பஞ்சலிங்கம் தலைமையில் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அவர் தனது தலைமை உரையில் எமது பிரதேசத்தில் தேய்ந்து போய்விட்ட வாசிப்பு பழக்கத்திற்கு புத்துயிர் அளிப்பதற்கும் பயன்மிக்க பொழுது போக்காக வாசிப்பு பழக்கத்தை பேம்படுத்துவதற்கும் 'முகவரி' மாத இதழ் துணை நிற்கும் என்றார். அத்துடன் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தின் துணைத் தூதுவர் திரு. எ. நடராஜன் அவர்களது வருகைக்காக பாராட்டும் நன்றியும் தெரிவித்தார்.



'முகவரி' சஞ்சிகையின் வெளியீட்டு உரையை யாழ் பல்கலைக்கழகத்தின் கல்வித்துறை முதுநிலை விரிவுரையாளர் இ. குமரன் அவர்கள் நிகழ்த்தினார்கள். தமிழ் இலக்கிய பரப்பில் சஞ்சிகைகளின் வளர்ச்சிப்போக்கினையும் அவை ஏற்படுத்திய தாக்கங்களையும் விபரித்த அவர் முகவரியின் விடய உள்ளடக்கங்கள் அதன் தொலைநோக்கு என்பவற்றையும் மிகத் விரிவாக தெளிவுபடுத்தினார். பொழுதுபோக்குச் சங்சிகை என்ற நோக்கில் அதன் பல்வகைமை பற்றியும் விரிவாக பேசிய திரு. குமரன் அவர்கள் அதன் எதிர்கால வளர்ச்சி பற்றிய நம்பிக்கை சிந்தனைகளையும் முன்வைத்தார்.



வாழ்த்துரை வழங்கிய பேராசிரியர். மா. சின்னத்தம்பி அவர்கள் முகவரி ஆற்ற வேண்டிய சமுதாய பங்களிப்பு பற்றியும் கல்விமான்கள் மற்றும் சான்றோர்களின் சமூகப் பொறுப்புகள் பற்றியும் குறிப்பிட்டார். தமிழர்களின் முகவரியாக அவர்களது பண்பாடு விளங்குவதையும் அது பேணப்படுதலே அவர்களது பலம் என்றும் குறிப்பிட்டார். தமிழ் மொழி கலை இலக்கியம் தமிழர் தம் ஒழுங்கு ஒழுக்கம் வாழ்க்கை நடத்தைக் கோலங்கள் சமூக விழுமியங்கள் என்பவற்றை கட்டிக் காக்கும் பணியில் இத்தகைய சங்சிகைகளின் தேவைப்பாட்டை வலியுறுத்தினார். முறைசார் கல்வியில் ஈடுபடும் மாணவர்கள் பரீட்சை மணடபத்தில் ஒப்புவிப்பதற்கான அறிவைத் தேடுவதில் காட்டும் சிரத்தை ஏனைய விடயங்களில் வெளிப்படுத்துவதில்லை. பொதுவாக முன்னைய ஏனைய எழுத்தாளர்களான லஷ்மி போன்றவர்கள் நடுத்தர குடும்ப பெண்களுக்கான பயனுள்ள அறிமுக வழிகாட்டுதலை தமது முனைவுகள் ஊடாக வழிகாட்டினார். வாசிப்பு குடும்பப் பெண்களின் பிரிக்க முடியாத அம்சமாகவும் இருந்தது. இப்போதும் தொழில்நுட்ப கருவிகளின் மேலாதிக்கத்தால் வாசிப்பு பழக்கம் தூர்ந்துபோய் விட்டது. இந்த இடைவெளிகளை நிரப்பும் பணியை முகவரி ஆற்றும் என வலயுறுத்திய அவர் முகவரியின் வளர்ச்சி நம்பிக்கை தருவதாகவும் சுட்டிக்காட்டினார்.





பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழப்பாணத்திலுள்ள இந்திய துணைத் தூதரகத்தின் மாண்புமிகு எ. நடராஜா அவர்கள் முகவரி மாத இதழானது வார இதழாகவும் வளர்ச்சி பெற்று நாளிதழாகும் என்ற நம்பிக்கை கலந்த வாழ்த்தினைத் தெரிவித்தார். யாழ்ப்பாண மக்களின் அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றுவதற்காகவே இந்திய துணைத் தூதரகம் இருக்கிறது என வலியுறுத்திக் கூறினார். அதன் பின்னர் வருகை தந்திருந்த வைத்திய கலாநிதிகள் விரிவுரையாளர்கள் பாடசாலை அதிபர்களுக்கு சிறப்புப் பிரதிகளை வழங்கி நிகழ்வை சிறப்பித்தார். சிறப்பு பிரதிகள் வழங்கப்பட்ட பின்னர் நன்றியுரை வழங்கிய திரு. முகுந்தன் அவர்கள் முகவரியை நுகரவந்திருக்கும் முகவரி வாசக அன்பர்களுக்கும் இந்திய துணைதர் தூதுவருக்கும் முக்கியமாக கனடா வாழ் தமிழ் அன்பர்களுக்கும் 'முகவரி' வெளியீட்டாளர்க்கும் தனது ஆழ்ந்த நன்றியை தெரிவித்தார்.

நிகழ்ச்சியினை வர்ணனைக் கலாநிதி காரை M.P அவர்கள் தொகுத்து வழங்கினார்.

ஆச்சரியங்கள் கொண்ட அரசியலமைப்புத் திரித்துவம்

13 - 13 → 13+ ?

இலங்கை அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் ஏற்பாடுகளை ஆழமாக ஆராய்ந்து பார்ப்பது கடினமானது. அந்தளவுக்கு இருக்கக் கூடுமா என நினைக்கும் அளவுக்கு அவை கேலிக்கும் நகைப்புக்கும் உரியதாக விளங்குகின்றன. ஆயினும் அவை முக்கியமான ஒரு விடயத்தைக் கொண்டுள்ளன. தன்னினமே உயர்ந்தது என எண்ணும் சிங்கள வெறித்தனமானது, அதே சிக்கல் நிலையில் உள்ள ஏனைய வெறித்தனங்களைப் போன்று, பசித்திருப்போருக்கு நனைந்த உரொட்டியைக் கொடுப்பது போல், காலங் கடந்த ஏற்கமுடியாத பிச்சைச் சலுகைகளை எறிவதன் மூலம் உண்மையான பிரச்சினைக்குரிய தீர்வைத் தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு, காலாகாலமாக முயன்று வரும் பயன்விளைவு தராத முயற்சியை மேற்கொண்டுள்ளது என அவை காட்டுகின்றன.

எனவே 13ஆவது திருத்தத்தின் மூலம் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்ட விலை மதிக்கவோ அல்லது அளவிடவோ முடியாத நன்மைகள் என்ன என்பதை ஒவ்வொன்றாக எடுத்து ஆராய்வோம். இந்த நன்மைகளின் எண்ணிக்கை மூன்று — ஆச்சரியங்களின் ஒரு திரித்துவம், ஒரு மாகாண ஆளுநர், முதலமைச்சர் ஒருவரைக் கொண்ட ஒரு மாகாண அமைச்சர்கள் குழாம் மற்றும் ஒரு மாகாண சபை.

இந்த அரசியலமைப்புத் திரித்துவத்தின் உச்சியில் இருப்பவர்தான் மாகாண ஆளுனர். அவரைத் தெரிவு செய்து பணியில் அமர்த்துபவர் யார்? இலங்கை சனாதிபதியைத் தவிர வேறு யாராய் இருக்கமுடியும்? அதுமட்டுமல்ல 'சனாதிபதிக்கு விரும்பியாங்கு' மாகாண ஆளுநர் பதவியில் இருப்பார். ஆளுநர் மட்டில் சனாதிபதி எப்போது மகிழ்ச்சியடைய முடியாது போகின்றதோ அப்போது அவரைப் பணி நீக்கம் செய்வார். சனாதிபதி இன்புற்றிருக்க ஆளுநர் தம் பதவியை காரணமா?

13ஆவது திருத்தமானது இக்காரணம் குறித்து எம்மை ஐயத்தில் விட்டுவிடவில்லை. 4(ஆ) எனும் உறுப்புரைக்கிணங்க சனாதிபதிக்கு விரும்பியாங்கு ஆளுநர் பதவி வகித்தல் வேண்டும்' என்று அது கூறுகிறது. சற்று வினோதமான சொற்றொடர் கொண்ட ஓர் ஏற்பாடாக இது காணப்படுகிறது. அப்படி என்னதான் அரசியலமைப்பின் அந்த 4(ஆ) என்னும் உறுப்புரையில் காணப்படுகிறது? இந்த உறுப்புரைதான் மக்களுடைய நிறைவேற்று அதிகாரத்தை சனாதிபதிக்கு வழங்குகிறது. சனாதிபதி விரும்பும் வரையில் ஆளுநர் பதவி வகிப்பார் என்ற நிறைவேற்று அதிகாரத்தை சனாதிபதிக்கு வழங்கும் அரசியலமைப்பின் ஏற்பாட்டின் பிரகாரம் இது உள்ளது. எனவே, நிறைவேற்று அதிகாரத்தை சனாதிபதிக்கு வழங்கும் அரசியலமைப்பின் ஏற்பாட்டின் பிரகாரம் இது உள்ளது. எனவே, நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்டிருப்பதற்கும் சனாதிபதி விரும்பும் வரையில் ஆளுநர் பதவி வகிப்பதற்குமிடையிலான அரசியலமைப்பு ரீதியான தொடர்பு எங்கே இருக்கிறது? எவ்வகையில் பின்னையது முன்னையதன் பிரகாரம் அமைந்துள்ளது? என்று கேட்போம்.

இந்தத் தொடர்பானது நிச்சயமாக 13ஆவது திருத்தத்தின் மூலம் உருவாக்கப்பட்ட ஆளுநரானவர் வெறும் பொம்மையல்ல, மாகாணசபையின் செய்திறனுக்குள் வரும் விடயங்கள் தொடர்பில் மாகாணத்தின்பால் உள்ள நிறைவேற்றுத் தத்துவம் ஆளுநரால் பிரயோகிக்கப்படுமென்பது 13ஆவது திருத்தச் சட்டம் கூறுகிறது.



ஆனால் மாகாண விடயங்களில் ஆளுநர் நிறைவேற்றுத் தத்துவத்தைப் பிரயோகிக்க வேண்டியவரின், 'சனாதிபதிக்கு விரும்பியாங்கு ஆளுநர் பதவிவகிப்பதுடன் சனாதிபதியின் கட்டுப்பாட்டிற்கும் பணிப்புரைக்கும் கீழ்ப்பட்டிருக்கச் செய்தாலொழிய, முழு இலங்கை தொடர்பிலுமான அனைத்து விடயங்கள் மட்டிலுமான நிறைவேற்று அதிகாரத்தை சனாதிபதிக்கு வழங்கும் இலங்கையின் அரசியலமைப்பே மீறப்பட்டதாகிவிடும்.

13ஆவது திருத்தத்தின் மர்மமான வார்த்தைப் பிரயோகத்திற்கான காரணம் இப்போது தெளிவாகிறது. சனாதிபதிக்கு நிறைவேற்று அதிகாரத்தை வழங்கும் அரசியலமைப்பின் 4(ஆ) எனும் உறுப்புரைக்கிணங்க

> *13ஆவது திருத்தமானது இக்காரணம் குறித்து எம்மை ஐயத்தில் விட்டுவிடவில்லை. 4 (ஆ) எனும் உறுப்புரைக் கிணங்க சனாதிபதிக்கு விரும்பியாங்கு ஆளுநர் பதவி வகித்தல் வேண்டும்' என்று அது கூறுகிறது. சற்று வினோதமான சொற்றொடர் கொண்ட ஓர் ஏற்பாடாக இது காணப்படுகிறது.*

மாகாண ஆளுநர் 'சனாதிபதிக்கு விரும்பியாங்கு' பதவி வகிப்பார். அரசியலமைப்பினால் சனாதிபதிக்கு வழங்கப்படும் நிறைவேற்று அதிகாரம் எவ்வகையிலும் பங்கமுறாதபடி 13ஆவது திருத்தமானது நிறைவேற்றுத் தன்மையின் அதிகாரங்களுக்கு மேலும் வலுவூட்டிப் பாதுகாக்கின்றது.

சிங்கள சனாதிபதியால் நியமிக்கப்பட்ட மாகாண ஆளுநரால் பிரயோகிக்கப்படுகின்ற நிறைவேற்று அதிகாரம்.

மொத்தத்தில் மாகாண விடயங்கள் தொடர்பில் நிறைவேற்று அதிகாரத்தின் தத்துவங்கள் சனாதிபதியால் நியமிக்கப்படுவரும், சனாதிபதிக்கு விரும்பியாங்கு' பதவி வகிப்பவரும் நிறைவேற்று அதிகாரங் கொண்ட இலங்கை சனாதிபதியின் விசுவாசமுள்ள ஊழியராக நின்று தனது நிறைவேற்று அதிகாரங்களின் தத்துவங்களைப் பிரயோகிப்பவருமான ஒரு ஆளுநரால் பிரயோகிக்கப்படும். 13ஆவது திருத்தத்தின் கீழாக மாகாண ஆளுநர் ஒருவரின் பண்புகுறித்த அரசியல் மற்றும் அரசியலமைப்பு ரீதியான வெட்ட வெளிச்சமான உண்மை இதுவே.

ஒரு வேளை சனாதிபதிக்கு விரும்பியாங்கு பணியாற்றலாம் என்பதற்காகத் தான் 1988 மே மாதத்தில் ஆளும் கட்சியில் நீண்டநாள் உறுப்பினர்களாக இருந்தவர்களும் இலங்கை அமைச்சரவையில் அமைச்சர்களாகப் பதவி வகித்தவர்களுமான இருவர் பாராளுமன்றத்தில் தமது ஆசனங்களை வறிதாக்கிவிட்டு முறையே வடமேல் மாகாண மற்றும் ஊவாமாகாண ஆளுநர் பதவிகளை நன்றியோடு ஏற்றார்களோ என்றாலும் ஆச்சரியமில்லை.

புத்திஜீவிகள் என்று சொல்லப்படுபவர்கள் யார்? கல்வியறிவு படைத்தவர்கள் என்று சொல்லப்படுகிறது. இவர்கள் தாம் பிறந்த மண்ணிற்கு என்ன செய்தார்கள்? தமது சமூ கத்தையே அடையாளப்படுத்தக் கூடியவர்கள். அந்தளவுக்கு புத்திஜீவிகள் விளங்குகிறார்கள். சமூகத்தின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றக்கூடிய திறமை வாய்ந்தவர்கள். அந்தளவுக்கு சுய புத்தி கொண்டு இயங்குபவர்கள். ஆனால் இன்றைய காலத்தில் எமது மண்ணில் புத்திஜீவிகள் என்று சொல்லப்படுபவர்களிடம் திறமை இல்லாததைப் பார்க்கமுடியும். அதாவது தன்னைப் பற்றியே சிந்தித்து செயலாற்றக் கூடிய ஒருவனால் பொதுவாக சிந்திக்க முடியாமல் போய்விடுகிறது. இதன் காரணமாக எமது சமூகம் பின்தங்கிய நிலைக்கே செல்கிறது. இதனை தன்னைப் பற்றி சிந்திக்கும் புத்திஜீவிகள் உணர்வார்களா. தரமான கல்விச்சேவை இல்லை. தரமான மருத்துவ சேவை இல்லை. எப்படி எமது சமூகம் முன்னேறும்?

ஒரு விதையை விதைக்கிறோம் அது மண்ணுக்குள் தன்னை மறைத்துக் கொள்கிறது. அதற்கு நீரூற்றுகிறோம் காத்திருக்கிறோம் அது மெல்ல முளைக்கிறது இலை விடுகிறது தண்டு பெரிதாகிறது கிளைகள் உருவாகின்றன பூக்கள் உருவாகின்றன கடைசியில் கனி தருகிறது. இந்த பயணம் நீளமானது. ஒரு விதை விதைக்கப்படுவதற்கும் அது மீண்டும் கனிக்குள் விதையாய் நம் கையில் தவழ்வதற்கும் இடைப்பட்ட காலம் பெரியது. பொறுமையுடன் காத்திருக்க வேண்டியது ரொம்பவே அவசியம். பொறுமை கசப்பானது. ஆனால் அது தருகின்ற கனியோ ரொம்ப இனிப்பானது. இந்த தத்துவம் அரிஸ்ரோட்டில் சொன்னது. இந்த தத்துவத்தைப் போல் நாமும் நடக்க வேண்டும். அப்பொழுதுதான் எமக்குக் கிடைக்கின்ற வாய்ப்புகள் தொடக்கம் பதவிகள் வரை பெறுமதியாகத் தெரியும். அந்தளவுக்கு ஒரு இலக்கை அடையும் போது அதற்கான பயணம் கற்றுத்தந்த பாடம் எமக்குப் பின்னால் வருபவர்களுக்கும் உதவக்கூடும். இதனை விட்டுவிட்டு குறுக்கு வழியால் எதனையும் அடைய முயற்சிப்பவர்களுக்கு நேர் வழியில் முயற்சி செய்தவர்கள் கற்றுக் கொண்ட பாடம் தெரியவராது. பிறகு எப்படி குறுக்கு வழியில் தமது இலக்கை அடைபவர்கள் தம்மை வளர்த்துக் கொள்ள முடியும்.

யாழ.பல்கலைக்கழகத்தை எடுத்துக் கொண்டால். பல விமர்சனங்கள் சொல்லப்படுகிறது. யாழ் பல்கலைக் கழகத்துக்கு கைலாசபதி கிடைத்ததுபோல் இதுவரை ஒருவர் கிடைக்கவில்லை என்று சொல்லப் படுகிறது. கைலாசபதி இருந்த காலம் பொன்னான காலம். அன்று யாழ்ப்பாணக் கல்வி உயரத்தில் இருந்தது. ஒவ்வொரு கல்வியாளனும் சுயபுத்தியுடன் இயங்கினான். இதனால் யாழ்ப்பாண மண் புத்திஜீவிகள் நிறைந்த மண் என்று பேசப்பட்டது. இதற்கு இன்னுமொரு காரணம் இருந்தது. அதாவது அன்று தமிழ் மக்கள் பற்றியும் அக்கறை கொண்டதால் சமூகத்தில் கைலாசபதிக்கு நல்ல பெயர் வந்தது. ஆனால் இன்றுவரை யாழ் பல்கலையில் சொல்லும் அளவுக்கு ஒருவர் வரவில்லை என்பது தமிழ் சமூகத்திற்கு கிடைத்த சாபக்கேடு. யாழ் பல்கலைக் கழகத்துக்குள் அரசியல் நுழைந்து பல்கலைக் கழகத்தையே சீரழித்தது. இதற்கு அரசியல்வாதிகள் மட்டும் காரணமல்ல யாழ் பல்கலைக் கழகமும் காரணமாக அமைந்தது. இந்த நிலையால் யாழ் பல்கலைக்கழகம் மட்டுமல்ல சமூகமும் பாதிக்கப்பட்டது. புத்திஜீவிகள் சுயபுத்தி கொண்டு இயங்காததால் தான் இந்த நிலை ஏற்பட்டதெனலாம்.

தத்துவமேதை அரிஸ்ரோட்டிலைத் தேடி ஒரு இளம் பெண் வந்திருக்கிறாள் அப்பொழுது அவளிடம் வந்த காரணத்தை அரிரோட்டில் கேட்டபோது அதற்கு பதிலளித்த அந்தப் பெண் எனக்கு ஒரு குழந்தை இருக்கிறது எப்பொழுதில் இருந்து நான் என் குழந்தைக்கு நன்னெறிப் பயிற்சியளிக்கத் தொடங்க வேண்டும் என்று கேட்பதற்காகவே வந்திருக்கிறேன் என்று கூறினாள். இதைக்கேட்ட அரிஸ் ரோட்டில் இப்பொழுது உங்களின் குழந்தைக்கு என்ன வயது ஆகிறது என்று கேட்க அந்தப் பெண் 6 வயது ஆகிறது என்று பதிலளித்தார். இதற்குப் பதிலளித்த அரிஸ்ரோட்டில் உனது குழந்தையின் ஆறு வருடத்தை வீணாக்கிவிட்டாய் இன்னும் தாமதிக்காமல் உடனே சென்று நன் னெறி பயிற்சி அளிக்கத் தொடங்கு என்று சொல்லி அனுப்பி வைத்தாராம். காலம் பொன்னானது அந்தக் காலத்தை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

அப்பொழுதுதான் நாம் வாழ்வில் முன்னேற முடியும். எழுத்தறிவு என்பதே கல்வியின் சாதாரண பொருள். இது ஒரு கருவி மாத்திரமே. ஒரு கருவியை நல்வழியிலும் பயன்படுத்தலாம் தீயவழியிலும் பயன்படுத்தலாம். எழுத்தறிவும் அப்படியே ஆகலாம். கல்வியைப் பலர் தவறான வழியிலும் சிலர் நல்வழியிலும் பயன்படுத்துகின்றனர். கல்வியறிவு இல்லாத ஒரு விவசாயி தன்மானத்துடன் உழைத்துப் பிழைக்கிறார். ஒழுக்க நியதிகளை அறிவதோடு அதனை அனுசரிக்கவும் செய்கிறார். ஆனால் படித்த கல்விமான்கள் நல்ல வழிகள் என்றாலும் அதனை அனுசரிக்கத் தவறிவிடுகின்றனர். இதனால் எமது சமூகம் பெரும் பின்னடைவை எதிர்கொண்டுள்ளது. சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் எல்லாவற்றிற்கும் புத்திஜீவிகள் தான் காரணமாக அமைகின்றார்கள். என்பதை பல அனுபவங்களோடு நாம் பார்க்க முடியும்.

ஆட்சி மாற்றம் எமக்கு நல்லதைச் செய்யுதோ இல்லையோ புத்திஜீவிகள் அதனைப் பார்க்காமல் தாம் இயங்க வேண்டும் அப்பொழுது தான் தமிழ் சமூகம் முன்னேறக் கூடிய வாய்ப்புகள் ஏற்படும். இல்லாது போனால் தாம் கற்ற கல்வியறிவு சமூகத்துக்குப் பயனற்றுப் போய்விடும். போர் இடம்பெற்ற மண் இது. பலவிதமான பாதிப்புக்களுக்கு முகம் கொடுத்திருக்கிறது. பல அழிவுகளைச் சந்தித்திருக்கிறது. இந்த மண் மீண்டும் பாரம்பரியங்களுடனும் தனித்தன்மை கொண்டும் வாழவேண்டும். தமது புகழை உலகறியச் செய்யவேண்டும். அப்பொழுது தான் எமது மண்ணில் புத்திஜீவிகள் இருக்கிறார்கள் என்பதை வெளிக்காட்ட முடியும். இல்லாது போனால் எமது மண்ணில் புத்திஜீவிகள் இல்லையோ என்று கேள்வி கேட்பார்கள். இந்தக் கேள்வியை எவரும் கேட்க முடியாத அளவுக்கு புத்திஜீவிகள் தம்மை வளப்படுத்திக்கொள்ள வேண்டும். சமூகப் பிரச்சினை சம்பந்தமாக தாமாகவே முடிவெடுக்கப் பழகவேண்டும். அரசியல்வாதிகள் பின்னால் செல்லாது அரசியல்வாதிகள் தமக்கு பின்னே வரும் அளவுக்கு நடந்துகொள்ள வேண்டும்.

குமார்

கல்வி ஓர் அழியாச் செல்வம் என்று விளக்கிய வள்ளுவர் அந்த அழியாச் செல்வமாகிய கல்வியைக் கற்பதனால் வரும் சிறப்புக்களையும் குறிப்பிடுகிறார். அது கண் போன்றது என்கிறார். கண் என்றால் தமிழில் ஒளி என்று பொருள் கல்வி எவ்வாறு ஒளியாக விளங்குகிறது என்பதையும் விளக்குகிறார்.

புத்திஜீவிகள் எல்லா சிந்திப்பார்களா?



உறுப்புக்களும் சரியாக இருந்தும் கண் இல்லாவிட்டால் ஒருவனால் பொருட்களையும் காட்சிகளையும் இயற்கையின் அழகுகளையும் காணயியலாது. எனவே அவன் ஒரு முழுமை பெற்ற மனிதனாக கருதப்படமாட்டான். இந்த உண்மையின் அடிப்படையில் கல்வியின் முக்கியத்துவத்தையும் தேவையையும் வற்புறுத்த விரும்பிய வள்ளுவர் கல்வியை கண்ணோடு ஒப்பிடுகிறார். இப்படிப்பட்ட கல்வியை சீரழிக்க நினைப்பவர்கள் கல்வியின் தார்ப்பரியம் விளங்காதவர்களாக இருப்பார்கள். எனவே கல்விக்கு அதிகாரிகளாக வருபவர்கள் தம்மால் இந்தக் கல்வி சிறந்து விளங்க வேண்டும் என்ற எண்ணம் இருக்க வேண்டும் அப்பொழுதுதான் தமது தேவையை மட்டுமல்ல சமூகத்தின் தேவையையும் நிறை வேற்றக் கூடியவர்களாக இருக்க முடியும். இதனை கல்வியாளர்கள் உணர வேண்டும்.

புத்திஜீவிகள் எத்தனை பேர் சுயபுத்தி இல்லாமல் தமது தேவை கருதி ஒரு அமைச்சரின் வாசலில் காத்திருந்திருப்பார்கள். என்பது எல்லோருக்கும் தெரியும். இந்த நிலை மாறவேண்டும்.

கல்விமான்கள் அறிவுக்கெட்டினபடி தமது வாழ்வை நகர்த்த வேண்டும். அறிவு இருந்தும் அறிவில்லாதவர்கள் போல் வாழ்க்கையை நகர்த்தக்கூடாது. அப்படி நகர்த்தினால்தான் மட்டுமல்ல சமூகமும் பாழாகும் நிலைமை ஏற்படும் என்பது உண்மை. தான் உண்டு தன் வாழ்வுண்டு என்று வாழாமல் தமக்கு ஒரு சமூகம் உண்டு என்று வாழ்ந்தால் கல்வி மட்டுமல்ல எமது சமூகமும் முன்னேறும். பணம் வரும் போகும் ஆனால் சமூகத்தில் நாம் எப்படி வாழ்கிறோம் என்பதை வைத்தே எமது சமூகம் எம்மை போற்றும். இதனை புத்திஜீவி கள் உணரத் தவறுவார்களாயின் எமது சமூகம் மேலும் பின்நோக்கிச் செல்லும் என்பது உண்மை. கல்வி அதிகாரிகளாக வலம் வருகின்றவர்கள். தாம் கற்ற கல்வியால் அடுத்த சந்ததி பயன்பெறவேண்டும். கல்விச் சமூகம் ஒன்றை உருவாக்க வேண்டும். இல்லாது போனால் கல்வி அதிகாரி என்ற பதவியை தூக்கி எறிந்துவிட்டுப் போக வேண்டும். இதனை கல்வி அதிகாரிகள் செய்வார்களாயின் சிறந்த கல்வி அதிகாரிகளை எமது மண்ணில் உருவாக்க முடியும். அதிகாரிகளாக வருவதற்காக அரசியலாளர்களுடன் சேர்ந்திருந்து அவர்கள் சொல்வதைக் கேட்டு அதற்கேற்ப சாய்ந்து கொடுத்து பதவிகளைப் பெறுபவர்களை என்ன செய்ய முடியும் இப்படி குறுக்கு வழியால் வந்தவர்கள்தான் கல்வியைச் சீரழிக் கிறார்கள். இதனால் திறமை வாய்ந்த கல்வியாளர்கள் ஒதுக்கப்படுகிறார்கள். திறமை வாய்ந்த கல்வியாளர்களுக்கு பதவிகள் வழங்கப்பட வேண்டும். அப்பொழுதுதான் எமது சமூகத்தில் கல்வி முன்னேறக்கூடிய சாத்தியக் கூறுகள் ஏற்படும். திறமை இல்லாத கல்வி அதிகாரிகளால் கல்வியில் பின்னடைவு ஏற்படுவது மட்டு மல்ல சமூகச் சீரழிவுகளுக்கும் காரணமாக அமைகிறார்கள். இதனை சமூகப் பொறுப்பு வாய்ந்தவர்கள் உணர்வார்களா. இதற்கான நடவடிக்கையை எடுப்பார்களா. எடுக்க வேண்டும் பின் கதவால் வந்த கல்வி அதிகாரிகளை இனங்கண்டு களையவேண்டும். அவர்களுக்கு எதிரான நடவடிக்கையை எடுக்க வேண்டும் அப்பொழுது தான் தரமான கல்வியை எமது சமூகம் பெறமுடியும்.

தென் கிழக்கு ஆசியாவில் கனன்று கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தானில் சீனாவின் பிரசன்னம் தற்போது பலரதும் கவனத்தை ஈர்த்துள்ளது. அமெரிக்க கூட்டமைப்பினால் 1980 களில் உருவான நஜிபுல்லாவின் சோசலிச அரசு காலகட்டத்தில் ஆரம்பமான யுத்தப் படை நடவடிக்கைகள் பல்வேறு பரிணாமங்களை எடுத்து இரட்டைக் கோபுரத்தாக்குதலுடன் தான் வளர்த்த கடா தன் மீதே பாய்ந்த கதையாகி எண்ணை யுத்தத்தை ஒளித்து வைத்து இஸ்லாமிய தீவிரவாதத்திற்கு எதிரான யுத்தமாக அமெரிக்காவினால் முன்னிறுத்தப்பட்டது. ஆப்கானிஸ்தானில் தேர்தல்கள் நடைபெற்று படைக் குவிப்பு, படைக் குறைப்பு என பலவற்றை தாண்டி வந்தாலும் திடீர் மரணங்களை ஏற்படுத்தி தீராத நோயாக உருவெடுத்திருக்கும் எபோலா போல் திடீர் வீச்சாக உருவெடுத்திருக்கும் ஐ.எஸ் என்ற இஸ்லாமிய தேசம் என்ற காட்டாற்று அலை அமெரிக்காவை மட்டும் அல்ல சீனாவையும் சிந்திக்க வைத்திருக்கின்றது. இதன் தொடர்ச்சிதான் தற்போதைய ஆப்கானிஸ்தான் மீதான சீனாவின் பிரசன்னம் ஆகும். இவ்விடயத்தை புரிந்து கொள்வதற்கு வரலாற்றை சற்று பின்னோக்கி நகர்ந்து பார்ப்பது அவசியம் ஆகின்றது.

ஆப்கானிஸ்தானில் அமைந்த சோசலிச அரசை பாதுகாக்க அங்கு நிலை கொண்டிருந்த சோவியத் படைகளை வெளியேற்ற சோசலிச அரசுக்கெதிராக ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்ட முஜாஹிதீன்களுக்கு ஆயுத விநியோகத்தை அமெரிக்கா ஒரு புறமும், மறுபுறம் சீனாவும் என செயற்பட்ட 1980 கால கட்டம் ஆகும். சமூக ஏகாதிபத்தியமாக வளர்ந்து வரும் சோவியத் யூனியனை எதிர் கொள்ளல் என்று சீனாவின் நிலைப்பாட்டிற்கு விளக்கங்களும் கொடுக்கப்பட்டன. அன்றைய கால கட்டத்தில் ஆப்கானிஸ்தானில் நிலை கொண்டிருந்த சோவியத் படைகளை ஒரு சிலர் ஆக்கிரமிப்பு படையென்று கூற, இன்னொரு சாரர் நஜிபுல்லா தலைமையிலான சோசலிச அரசு நிலைத்து நிற்க உதவிக்கு வந்த படைகள் என்றும் வியாக்கியானம் செய்த காலம் அது. சீனாவும், சோவியத் யூனியனும் சோசலிச கொள்கைகளை வெவ்வேறு நடைமுறை, திசைவழிகளில் கையாண்டு பயணங்களை மேற் கொண்டிருந்த காலகட்டம் அது. பலமான சோவியத்தை எதிர் கொள்ள அமெரிக்காவுடன் சீனா இணைந்து செயற்பட்ட காலம். ஆப்கானிஸ்தானில் உருவெடுத்த அடிப்படை மதவாத தீவிரவாதக் கட்சிகளை ஊக்கப்படுத்தி இவற்றை சோவியத்திற்கெதிராக போராட வைத்தவர்கள் அமெரிக்க கூட்டமைப்பினர்.

இவர்கள்தான் தலிபான், அல்கொய்தா என்று பிற்போக்கு அடிப்படைவாத, மதவாத அமைப்புக்களாக பிற்காலத்தில் உருவெடுத்தனர். தனது செல்லப் பிள்ளை நிலையிலிருந்து விடலைப் பிள்ளையாகி இன்று திமிறி அடித்துக் கொண்டிருக்கும் அமெரிக்கா தத்தெடுத்த பிள்ளைகள் ஆவர். இவ் அமைப்புக்கள் எல்லாம் அமெரிக்காவால் தத்தெடுகப்பட்டு பாகிஸ்தான் மூலம் ஊட்டப்பட்டு சீனாவால் அன்று ஆதரிக்கப்பட்ட அமைப்புக்கள் ஆகும்.

இன்று பாகிஸ்தான், சீனா போன்ற நாடுகள் நட்புடன் இவ் அமைப்புக்களுடன் பேசும் அளவிற்கு உறவு இருந்தாலும் இரட்டைக் கோபுரத் தாக்குதலுக்கு பின்னர் அமெரிக்காவால் இவர்கள் தறுதலைப் பிள்ளைகளாக அதிகம் பார்க்கப்படும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. இரட்டைக் கோபுரத் தாக்குதல் முன்னிறுத்தப்பட்டாலும் இவற்றிற்கு பின்னால் ஒரு எண்ணை அரசியலே பெரிதும் ஆதிக்கம் வகிக்கின்றது. நீண்டகால நட்பு நாடுகளான பாகிஸ்தான் சீனாவிற்கு நட்புப் பரிசாக தேவை ஏற்படும் போது இத் தீவிரவாத அமைப்புக்களுடன் பேசுவதற்கான தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தே வருகின்றது என்பது வரலாற்றுக் கண்கூடு. நண்பனின் பகைவன் தனக்கும் பகைவன் என்ற நடைமுறைச் செயற்பாட்டிற்கு அமைய பாகிஸ்தானின் பகைவன் இந்தியா சீனாவின் பகைவனானது அல்லது சீனாவின் பகைவன் பாகிஸ்தானின் பகைவன் என்ற செயற்பாடுகள் ஒன்றை ஒன்று விஞ்சி செயற்பட்டுக் கொண்டிருக்கும் அரசியல் தகிடதத்தங்களாகும். இதில் சோவியத் இந்தியாவின் நண்பன், அமெரிக்காவின் பகைவன் பிறகென்ன இடியபச்சிக்கல் இல்லாத நட்பு, பகை உறவுகள் காஷ்மீரில் ஆரம்பித்து இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இலங்கை ஈறாக மாலை தீவுவரை இன்று வியாபித்திருக்கின்றது.

சோவியத் யூனியனின் வீழ்ச்சிக்கு பின்னர் அமெரிக்கா மட்டும் ஏகாதிபத்தியமாக எழுந்து நிற்க மறு புறத்தில் பொருளாதார வல்லரசாக சீனா உயர்ந்து நிற்கும் போட்டியில் சீனாவை வீழ்த்த அமெரிக்காவின் பல்வேறு பாச்சாக்கள் பலிக்கவில்லை.

உற்பத்தியில் சீனா அதிக கவனம் செலுத்த அமெரிக்க காகிதப் பொருளாதாரத்தில் (அதுதான் பங்குச் சந்தை) கவனம் அதிகம் செலுத்தியது. இந்த காசு சேர்க்கும் போட்டியில் முந்திக் கொண்டது சீனா. போர்களில் கவனம் செலுத்தி அடுத்த நாடுகளின் வழங்களை சுரண்டல் என்ற அமெரிக்காவின் வழிமுறையைத் தவிர்த்து, உற்பத்தியில் கவனம் செலுத்தி பொருளாதார வல்லாரசாக உருவெடுத்துவிட்டது சீனா.

போர்களில் நேரடிப் பங்காளியாக இல்லாமல் போர்களின் முடிவில் பாதிக்கப்பட்ட அந்த நாடுகளுக்கு பொருளாதார அபிவிருத்தி என்ற வகையில் கோடிகளை கொட்டிக் கொடுப்பது என்பது மட்டும் அல்ல, அந்த நாட்டுக் கோடிகளுக்குள்ளும் குடிகொண்டே வருகின்றது சீனா. இதன் இறுதிச் செயற்பாடுதான் ஆப்கானிஸ்தானில் சற்று அவசரப்பட்ட சீனாவின் பிரசன்னமாகும். இவ் அவசரத்திற்கு இன்னொரு முக்கிய காரணம் உண்டு. சீனாவில் பிரிவினைவாதத்தை தூண்டும் செயற்பாடில் இருக்கும் பகுதியில் வாழும் முஸ்லீம் மக்களின் போராட்டத்தை சமாளிக்க வேண்டிய தேவை செஸ்னியாவை சமாளிக்க திணறும் ரஷயாவிற்கு இருப்பது போல் சீனாவுக்கும் உண்டு. சீனாவில் முஸ்லீம் மக்களுக்கு மதச் சுதந்திரம் உண்டு. ஆனாலும் எவிடன் போன்ற பகுதிகளில் வாழும் யுகுர் முஸ்லீம்கள் மத்தியில் பிரிவினைவாத கோஷத்துடன் செயற்படும் அமைப்பு தோற்றம் பெற்று செயற்பட்டுவருவதினால் இங்கு பல கட்டுப்பாடுகளை சீன அரசு மேற்கொண்டு வருகின்றது. ஏற்கனவே 'தினமன்' சதுக்கத்தில் நடைபெற்ற மாணவர் போராட்டத்தை இன்றுவரை தூக்கிப் பிடிக்கும் மேற்குலக 'மனித உரிமை' அமைப்புக்களும் நேரம் பார்த்து காத்திருக்கின்றனர் சீனாவின் தனது நாட்டு முஸ்லீம் பிரிவினைவாதிகளுக்கு எதிரான நடவடிக்கைகளை.

உச்சக் கட்ட உசுப்பேத்தும் 'அகண்ட' இஸ்லாமிய தேசம் என்ற கோ[illegible]தை



ஆப்கானிஸ்தானில் சீனாவின் பிரசன்னம் அமெரிக்காவின் பொறியா? சீனாவின் புத்திசாலித்தனமா?

முன்னிறுத்தி இதுவரையும் ஆங்காங்கே செயற்பட்டு வந்த இஸ்லாமிய மதத்தை முன்னிறுத்தும் பயங்கரவாத அமைப்புக்கள் எல்லாவற்றையும் பின்னுக்கு தள்ளிவிட்டது ஐஎஸ் அமைப்பு. மற்றை எந்த அமைப்புக்களையும் விட முழு வீச்சுடன் கட்டுக்குள் அடங்காத திமிறலுடன் புற்று நோயாக பரவிவிடும் அபாயம் இந்த அமைப்பினால் உலகெங்கும் ஏற்பட்டிருக்கின்றது. இந்த அமைப்பின் ஊடுருவல் ஆப்கானிஸ்தான் எல்லையூடாக எங்கே தனது நாட்டிற்கும் தனது வலிமையான கடவைகளையும் தாண்டி தமது நாட்டில் செயற்படும் முஸலீம் பிரிவினைவாத சிந்தனைக்குள் உட்புகுந்து விடுமோ என்ற அச்சம் பல உலக நாடுகளைப் போல சீனாவிற்கும் ஏற்பட்டிருக்கின்றது.

சீனா 14 நாடுகளை தனது நிலப்பரப்பால் எல்லைகளாக கொண்டிருக்கின்றது. இவற்றில் பெரும்பாலான நாடுகள் முஸ்லீம் மக்களை அதிகம் கொண்ட நாடுகளாக காணப்படுகின்றன. இதில் நிலப்பரப்பு அளவில் மிகச் சிறிய வெறும் 76 கிலோ மீற்றர் வரையிலான எல்லையை மட்டும் ஆப்கானிஸ்தானுடன் கொண்டுள்ளது. தன்னுடன் மிகப்பாரிய எல்லைகளைக் கொண்டிருக்கும் ஏனைய முஸ்லீம் மக்களை பெரும்பான்மையாக கொண்ட கஷக்ஸ்தான் (Kazakhstan), பாகிஸ்தான் (Pakistan), தஜிகிஸ்தான் (Tajikistan), கிர்ஜிஸ்தான் (Kyrgyzstan) போன்ற நாடுகளினூடான எல்லை கடக்கும் ஐ.எஸ் இன் அபாயங்களை விட ஆப்கானிஸ்தான், பாகிஸ்தான் ஊடான எல்லை கடக்கும் பயங்கரவாதத்தில் அதிகம் எச்சரிக்கையாக இருக்க விரும்புவது போலவே அண்மைய செயற்பாடுகள் காணக்கூடியதாக இருக்கின்றது.

இதன் ஒரு படிதான் மேற்குல கூட்டமைப்பினால் பிச்சை வேண்டாம் நாயை பிடி என்று கௌரவம் பார்த்து ஓடவும் முடியாமல் நாயிடம் க(அ)டி வாங்கவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் ஆப்கானிஸ்தானில் சீனாவின் பிரசன்னம் சீனாவை மாட்டிவிடுதல் என்ற பொறிச் செயற்பாட்டுடன் மேற்குலகம் வழி விட சீனாவும் போர் முடிந்து தேர்தல் ஆட்சி நடைபெறும் நாட்டில் முதலீடு, கொல்லைக்குள் குடியேறுதல் கூடவே தேர்தல் ஆட்சிக்கு இன்னமும் முட்டுக்கட்டையாக இருக்கும் தலிபான், அல்கொய்தா போன்றவற்றுடன் அனுசரித்து ஐ.எஸ் இன் பிரசன்னத்தை தவிர்த்து ஒரு கல்லில் பல 'நகன்' பழங்களை விழுத்தும் செயற்பாடுகளையே மேற்கொள்கிறது.

அமெரிக்கா தனக்கு படையிழப்புக்களை ஏற்படுத்தும், யுத்தம் நடைபெறும் நாடுகளுக்கு ஆளணிகளை அனுப்ப, சீனா தமது வேலையாட்களை அந்த நாடுகளுக்கு அனுப்பி பொருளாதார மேலாதிக்கத்தை, ஆட்பலத்தை அந்தந்த நாடுகளில் ஏற்படுத்தி வருகின்றது.

வியட்நாம் முதல் இன்று ஆப்கானிஸ்தான் வரை மீண்டும் தன்னால் முடியாமல் போய் அமெரிக்கா வெளியேற இந்த இடைவெளியில் சீனா புகுந்து கொண்டது ஆப்கானிஸ்தானில். இதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட திறவு கோல் யாவரும் எதிர்பார்த்த பாகிஸ்தான் நட்பு மட்டும் அல்ல, அமெரிக்க வெளியேற்றதால் ஏற்பட்ட இடைவெளியும்தான். மிகக் கவனமாக ஆப்கானிஸ்தான் அரசுடனும் இவர்களுக்கு தலையிடியாக இருக்கும் தலிபான்களுடனும் ஒரே சமயத்தில் பகிரங்கமாகவும், இரகசியாகவும் பேச்சுக்களைத் தொடர்கின்றது. தலிபான்களை அமெரிக்காவின் கூட்டமைப்பும், பின்பு தனித்து விடப்பட்ட அமெரிக்காவால் பயிற்றுவிக்கப்பட்ட தனது நாட்டுப் படைகளாலும் கட்டுக்குள் கொண்டுவர முடியாத ஆப்கான் அரசுக்கு சீனாவின் இந்த இரு சிறகு கட்டிப் பறக்கும் செயற்பாட்டை மறைமுகமாக ஆதரிக்கும் நிலைப்பாட்டை எடுப்பதைத் தவிர வேறு வழியில்லை. 2013 இல் ஆப்பானில்தானின் செம்பு கனிமவளம் திட்டத்திலும், நிலத்தடி எண்ணை அகழ்வு என்ற திட்டத்திலும் ஏலம் மூலம் இறங்கிவிட்டது சீனா. இந்த திட்டங்கள் தடையில்லாமல் செயற்பட்டு பொருளாதார வெற்றியை சீனா அடைய தலிபான்களின் இடைஞ்சல்கள் இல்லாமல் இருத்தல் வேண்டும். இதன் ஒருவடிவம் தலிபான்களுடனான நட்பும், பேச்சுக்களும், செயற்பாடுகளும் ஆகும். மறுவளத்தில் ஆப்கானிஸ்தானின் பொருளாதாரத்தை கட்டியமைக்கின்றறோம் என்று சர்வதேசத்திற்கான கோஷங்களுக்கும் இது வழி கோலியுள்ளது. வைத்த காலை இழுத்தெடுக்க முடியாமல் தவிக்கும் அமெரிக்காவிற்கு தோல்வியை ஒப்புக்கொண்டு வெளியேறுகின்றோம் என்ற ஈகோவிற்கு சீனாவின் வலிந்த ஆப்கானிஸ்தான் மீதான பிரசன்னம் வாய்பாக அமைந்து விட்டது.




இன்னொரு வகையில் சீனாவை வகையாக மாட்டிவிட்டு கழண்டு விட்டோம், இனி சீனாவின் கதி அதோ கதிதான் என்று அமெரிக்கா கொடுப்புகுள் சிரிக்கும் ஒரு கள்ளத்தனமும் இருக்கின்றது.

எந்தனையோ வழிகளில் முயன்றும் தடுத்து நிறுத்த முடியாத சீனாவின் பொருளாதாரப் பாய்ச்சலைத் தடுக்க இப்படி மாட்டிவிடும் செயற்பாட்டை அமெரிக்கா பரீட்சித்து பார்க்க விரும்புகின்றது. தற்போது இதற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டதாகவே இதனைக் கருதுகின்றது. இதில் சீனா வெற்றியடையுமா? அல்லது கரடியை நான் விட்டு விட்டேன் கரடி என்னை விடுது இல்லை கூடவே ஐஎஸ் என்ற ஒட்டகத்திடமும் மாட்டிவிட்டேன் என்ற நிலமைகளை ஏற்படுத்துமா என்பது பொறுத்திருந்து பார்க்கப்பட வேண்டிய விடயங்கள் ஆகும்.



குட்டையில் ஊறின மட்டை

தில்லங்க மணியம்



இடமாற்றக் கடிதம் வந்ததும் அரச அலுவலர்கள் பயப்பீதியில் புதிய அலுவலகத்துக்குச் செல்கின்றனர். இடமாற்றம் பெற்றுத் தாம் செல்லும் அரச அலுவலகத்தில் தமக்குப் பொறுப்பாக இருப்பவர் எப்படி இருப்பாரோ என்ற பயம் அவர்களிடத்தில் அதிகமாகக் காணப்படுகிறது. இதற்கு என்ன காரணம் என்றால் பொறுப்பான பதவியில் உள்ளவர்களின் நிர்வாக சீர்கேடு பற்றி பத்திரிகைகளில் அடிக்கடி செய்தியாக வெளிவருவதால் தமக்குப் பொறுப்பாக இருப்பவர்கள் எப்படி இருப்பாரோ என்ற பயம் இடமாற்றம் பெற்று அலுவலகத்துக்கு வரும் முதல்நாளே தொற்றிக் கொண்டுவிடும். பிறகென்ன இடமாற்றம் பெற்றுச் செல்பவர்கள் பயத்துடன் தானே செல்வார்கள்.

பொறுப்பான பதவியில் இருப்பவர்கள் என்ன நினைக்கிறார்கள் என்று பார்த்தால் அவர்களிடத்தில் திறமையில்லாமல் இருப்பதைக் காணமுடியும். அதனால் தான் தமது அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்று வருபவர்களை வதைக்கின்றனர். அது மட்டுமல்ல தமக்குத் தெரிந்தவர்களை தம்மோடு காலம் பூராகவும் வைத்திருக்க விரும்புகின்றனர்.

இதனால் இடமாற்றம் பெற்று வேறொரு அரச அலுவலகத்திற்குச் செல்லும் அலுவலர்கள் அந்த அரச அலுவலகத்தில் பொறுப்பான பதவியில் இருக்கும் அலுவலர்களால் பாதிப்புக்கு உள்ளாகி வருகின்றனர். வேறொரு அரச அலுவலகத்துக்குச் செல்லுமாறு வற்புறுத்துவதோடு தமக்குத் தெரிந்தவர்களை அந்த அலுவலகத்தில் தொடர்ந்து வைத்திருக்க விரும்புகின்றனர். இதனால் இடமாற்றம் பெற்றுச் செல்லும் அரச அலுவலர்கள் எங்கு போவது என்று தெரியாமல் அவதிப்படுகின்றனர். தாம் எங்கு செல்வது என்று தமக்குப் பொறுப்பானவர்களை அவர்கள் கேட்கும் போது எங்கு வேண்டுமானாலும் போங்கோ என்று சொல்வதோடு தாமாக விரும்பிப் போவதான கடிதத்தையும் எழுதித் தருமாறு தமக்குப் பொறுப்பானவர்கள் மிரட்டுகின்றனர் என்று பாதிப்புக்குள்ளான அலுவலர்கள் தெரிவிக்கின்றனர்.





யாழில் உள்ள பிரதான அரச அலுவலகம் ஒன்றில் திட்டமிடல் பிரிவுக்குப் பொறுப்பாக இருக்கும் ஒரு பெண் அதிகாரி அந்த அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்றுப் புதிதாக வருபவர்களை வேறு அலுவலகத்துக்குப் போகுமாறு வற்புறுத்தி வருகிறார். இதனால் அந்த அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்று பணியாற்றச் சென்றவர்கள் என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாமல் ஒவ்வொரு நாளும் பயப்பீதியுடன் வேலைக்குச் சென்று வருகிறார்கள். அந்த அம்மணி அடிக்கடி தலையைச் சிலுப்பி ஓட்டத்துக்கு தயாராக இருக்கும் காளை மாடு போல அலுவலகத்தில் பரபரப்புடன் நிற்கிறார். பிறகென்ன காளை மாடு ஓடும் போது ஓரமாக நிற்கவேண்டும் இல்லாவிட்டால் முட்டி மோதி சேதத்தை உண்டுபண்ணிவிடும் என்ற மாதிரி அலுவலகர்கள் பயத்தில் அலுவலகத்தில் நிற்கிறார்கள்.

"இங்கே நிற்க வேண்டாம் குப்பைகளைக் கொண்டு போய் நாவற் குழியில் கொட்டிவிட்டு வாருங்கள்" என்று அந்த அம்மணி இடமாற்றம் பெற்று வந்தவர்களைப் பார்த்து காட்டுக் கத்து கத்தி விட்டு தனது அறைக்குள் சென்றுவிட்டார். "என்ன குப்பைகளைக் கொண்டு போய் நாவற்குழியில் கொட்டுவதா எந்தக் குப்பைகள் எங்கு இருக்கின்றது" என்று அலுவலர் ஒருவர் கேட்க மற்ற அலுவலர் "குப்பை என்று சொன்னது பயில்களைத் தான்" என்றார். "குப்பைகளைக் கொட்டவா இங்கு வந்தோம் தமது பதவிக்கு ஏற்ற வேலை இல்லையா" என்று இன்னொருவர் சொல்ல "இதையெல்லாம் ஒரு காதில் வாங்கி இன்னொரு காதால் விடவேண்டியது தான்" என்றார் இன்னொருவர். இப்படியாக அந்த அலுவலகத்தில் சம்பாசனை தொடர்ந்தது.

என்ன செய்ய முடியும் அலுவலர்களால் அதிகாரியான அம்மணி சொல்வதைக் கேட்டுவிட்டு ஒன்றுமே பேசாமல் இருக்க வேண்டியதுதான். ஆனாலும் பேசாமல் இருப்பதைப் பார்த்த அம்மணியும் தன்னை கேட்பதற்கு ஒருவருக்கும் தைரியம் இல்லை என்று நினைத்து கூடுதலான ஆட்டம் போட்டார். ஆனாலும் அம்மணி தனது எதிர்பார்ப்பை நிறைவேற்ற முடியாமல் திண்டாடினார்.

இப்படியாக இடம்பெற்றுக் கொண்டிருக்கும் போது ஒரு நாள் "அலுவலர்களை வேறு அரச அலுவலகத்திற்கு மாற்றுவதற்கு மேலதிகாரியுடன் கதைத்து விட்டேன். விரைவில் நீங்கள் செல்லவேண்டிய அரச அலுவலகம் எது என்ற அறிவிப்பு வரும்" என்றார். அலுவலர்களோ ஒன்றுமே பேசாமல் இருந்தனர். அம்மணி இடமாற்றம் செய்வது தொடர்பான அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு இடமாற்றம் பெற்று வந்தவர்களை மீண்டும் இடமாற்றம் செய்வதற்காக கதைத்து அவர்களிடம் திட்டு வாங்கியது தான் மிச்சம். அம்மணிக்குத் தெரியாது போலும் இடமாற்றம் வழங்கும் அலுவலகத்துக்குப் பொறுப்பாக இருந்த அதிகாரியின் முறைகேடு காரணமாக அவரின் மீது விசாரணை நடைபெறுவது. அவரின் மனைவியும் யாழ் அரச அலுவலகம் ஒன்றின் அதிகாரியாக இருக்கிறார். இவரின் மீதும் நிர்வாக முறைகேடு காரணமாக விசாரணை நடைபெறுகிறது. குடும்பமே களவு வேலையில் இறங்கி பிடிபட்டு அசிங்கப்பட்டு இருப்பது இந்த அம்மணிக்குத் தெரியாது போலும்.

தமிழ்க் கட்சி என்று வந்து சிங்கள அரசுக்குச் சேவை செய்யும் ஒரு கட்சியின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியில் இருந்து வந்தவ இந்த அம்மணி. இந்தக் கட்சிதான் அம்மணிக்கு பதவியை வழங்கியிருக்கும் என்பது வெளிப்படை. பிறகென்ன இந்த அம்மணியிடமும் இனப்பற்று மொழிப்பற்று இருக்க வாய்ப்பேயில்லை. இந்தக் கட்சி ஆட்சியில் இருந்த காலப்பகுதியில் அந்தப் பகுதி மிக மோசமான முறையில் பாதிக்கப்பட்டது என்று சொல்வதைவிட இவர்களால் சீரழிக்கப்பட்டது என்பதே உண்மை. பிறகென்ன அம்மணியால் நிர்வாகச் சீர்கேடு இடம்பெறாமல் இருக்கவாமுடியும். குட்டையில ஊறின மட்டை போல இந்த அம்மணியின் செயற்பாட்டால் நிர்வாகமே இயங்க முடியாமல் தவிக்கிறது.

இன்று வடமாகாணத்தை ஆளும் பொறுப்பு கூடுதலாக பெண்கள் கையில் இருக்கிறது. இருந்தும் என்ன முன்னரைவிட கூடுதலான பிரச்சினைகளை பெண் சமூகம் எதிர்கொண்டு வருகிறது. பெண்களால் பெண்களுக்குப் பிரச்சினை எழுகின்ற காலம் இது. தமது பதவிக்காக தாம் ஒரு பெண் என்று கூடப் பார்க்காமல் மோகத்தில் அலைகிறார்கள். இப்படியாக மோகத்தில் அலையும் சிலரால்தான் பெண் சமூகமே பாதிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது. இதனை இந்த அம்மணி உணர வேண்டும்.

"சீரில்லாத குடும்பங்களில் இருந்து வருகின்றவர்களால்தான் இப்படியான பிரச்சினைகள் ஏற்பட வழி பிறக்கிறது" என்று அந்த அலுவலகத்தில் வேலை செய்யும் இந்த அம்மணியால் பாதிக்கப்பட்ட ஒருவர் சொன்னார். நானோ "அப்படி சொல்ல வேண்டாம் குடும்பங்கள் சீருடன்தான் வாழ விரும்புகின்றன ஆனால் சூழல் அவர்களை திசை திருப்பிவிடும். இந்த சூழலுக்குள் அகப்படாமல் தமது வாழ்வைக் கொண்டு நகர்த்துபவர்கள் சமூகத்தில் நல்ல நிலையை அடைகிறார்கள். சூழலுக்குள் மாட்டுப்படுபவர்கள் சமூகத்தில் நல்ல பெயருடன் வாழ முடியாத நிலை ஏற்படும்" அதற்கு அவர் "நீங்கள் சொல்வது சரி தான்" என்று சொல்லிவிட்டு என்னை விட்டு நகர்ந்து சென்றார்.

அம்மணியின் வற்புறுத்தலால் ஒரு பணியாளர் தான் வேறு ஒரு அலுவலகத்துக்குச் செல்வதாகக் கூறி தான் செல்லவுள்ள அலுவலகத்தினையும் குறிப்பிட்டுச் சொல்லி இந்த அலுவலகத்துக்குத் தன்னை மாற்றி விடுமாறு கூறியுள்ளார். அம்மணியால் அது முடியாமல் போக என்ன செய்வது ஏது செய்வது என்று தெரியாமல் முட்டை போட இருக்கும் வாத்துப் போல இருந்தார்.

அரச அலுவலர்களுக்கு இப்பொழுது வேலையை விட கூடுதலாகப் பயிற்சி வகுப்புகள் தான் இடம் பெறுகின்றன. ஏனெனில் அபிவிருத்தி வேலை சம்பந்தமாக இவர்களுக்கு பயிற்சி வகுப்பின் மூலம் தெரியப்படுத்தி வேலைகளை கொண்டு போகப் பார்க்கிறது அரசு. எனவே பயிற்சி வகுப்புகளுக்கு அலுவலர்கள் வயது போயும் சென்று வருகிறார்கள் என்றால் பாருங்களேன். இதில் பொறுப்பான பதவிகளை உடையவர்களுக்குத் தான் அதிகமாக பயிற்சி வகுப்புகள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. பிறகு எங்கே வேலை. ஓய்வு நிலை அடையும் மட்டும் பயிற்சியைக் கொடுத்து விட்டு வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். இப்படியானவர்களால் தான் பல பிரச்சினைகளை அலுவலர்கள் மட்டுமல்ல அலுவலகம் செல்லும் பொது மக்களும் பாதிக்கப்படுகின்றனர். இதனை இந்த அம்மணி உணர்வாரா?



தமிழ் கூறும் நல்லுலகம் பெற்ற பேரறிஞர்



கலாநிதி க.வைத்தீசுவரக் குருக்கள் [22.09.1916-25.04.2015]



தமிழ் கூறும் நல்லுலகம் பல மகோன்னத அறிஞர்களை கடந்த 100 ஆண்டுகளில் இழந்திருக்கிறது. 2015 சித்திரை வருடப் பிறப்பு நிகழ்ந்து ஒரு வாரம் கடந்திருந்த நிலையில் காரைநகர் தழிழ் வளர்ச்சிக் கழகத்தை உருவாக்கிய சிற்பியும் காரைநகர் மணி வாசகர் சபையைத் தோற்றுவித்தவரும் ஈழத்துச் சிதம்பரத்தை நிலைபெறச் செய்தவரும் அரிய பல தமிழ் நூல்களைப் பதிப்பித்தவரும் காரைநகருக்குத் துருவ நட்சத்திரமாகத் திகழ்பவருமாகிய கலாநிதி க.வைத்தீசு வரக்குருக்கள் அவர்கள் 25.04.2015 அன்று அதி காலை ஈழத்துச் சிழம்பரத்து ஈசனின் திருப்பாதக் கமலங்களைச் சேர்ந்தார் என்ற செய்தி தமிழ் கூறும் நல்லுலகெங்கும் பரவி ஆறாத் துயரை எற்படுத்தியது.

கடந்த 3 வருடங்களுக்கு மேலாக சுன்னாகம் கந்தரோ டையில் குருக்கள் ஐயா வசித்துவந்த இல்லம் சென்று கற்று வந்தேன். தமிழிலே ஒரு சந்தேகம் வந்தால் அவரிடம் தொலைபேசியில் தொடர்பு கொண்டு கேட்கின்ற போதுகூட தனக்குத் தெரிந்திருந்தால் பதில் தருவார் அன்றேல் தன்னிட முள்ள பேரகராதியைப் பார்த்துவிட்டு பதில் தருவார். அவரிடம் எவராவது ஒரு புத்தகம் தேவையென்று கேட்டால் இல்லையென்று கூறியதில்லை. இதனால் வைத்தீசுவரக்குருக்கள் ஐயா இழந்தவை எளிதிற் பெறமுடியாதவை. ஐயா சொல்வார், "ஒருவர் படிக்கக் கேட்கின்றபோது மறுக்க மனம் வராது" என்று இந்தப் பண்பை மகாவித்துவான் கணேசையர் அவர்களிடம் தான் கற்றுக்கொண்டதாக நினைவு கூர்வார். மெய்வருத்தம் பாராது துவிச்சக்கர வண்டியிலே அறிஞர்களைத் தேடிச்சென்று கட்டுரைகளைப் பெற்றுப் புதுமுறைக் கட்டுரைக் கோவையை வெளியிட்டார். அமரர் வைத்திய கலாநிதி நந்தி, வித்துவான் ச.அடைக்கலமுத்து, வித்துவான் க.உமாமகேசுவரம்பிள்ளை முதலான 25 அறிஞர்களது கட்டுரை இத்தொகுப்பிலே உள்ளது. ஐயா அவர்கள் பிறரைப் பாராட்டுவதில், தனக்கு உதவியவர்யளுக்கு நன்றி தெரிவிப்பதில் பெருமனதுள்ளவர். யாழ். போதனா வைத்தயசாலையில் தனக்கு மருத்துவம் பார்த்த வைத்திய கலாநிதி யமுனாநந்தாவின் கரிசனையை அன்பைப் பாராட்டி அவருக்கு தெரிவித்து ஒரு கடிதம் எழுத வேண்டும் என்று 24.04.2015 உடல் நலம் குன்றியிருந்த போதும் நினைவு கூர்ந்தார்.

துவாரகன்

கடந்த மார்ச் 2 ஆம் திகதி எனக்கு ஒரு கடிதம் வரைந் திருந்தார் உங்களது பிறந்த தினம் இன்று என்று மகள் தெரிவித்தார். எனது உடல் நலக் குறைவு காரணமாக உங்களை நேரில் வந்து வாழ்த்த முடியாதுள்ளமைக்கு வருத்தப்படுகிறேன் என்று கூறி வாழ்த்தி ஒரு கடிதம் வரைந் திருந்ததார் சிறியேனைப் பேறறிஞரும் பெரும்பண்பாளரும் வந்து வாழ்த்துவதா? கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்களைப் பெயர் சொல்லியழைக்க மனம் வெட்க மடை கிறது எத்தகைய அடைமொழி இட்டு அழைப்பேன். அவர் ஈழத்துச் சிதம்பரத்து ஈசன், குருவாய் வந்து வழி காட்டியவர் மனிதப் பண்பை தாண்டி உயர்ந்து நிற்பவர், தன்னை அண்டி வந்த அனைவரையும் அரவணைத்த பெருந்தகை, வாழ்க்கைக்கு வழிகாட்டி.

சித்தத்தை சிவன்பாலே
வைத்தார்க்கும் அடியேன்

கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் ஐயா அவர்கள் சிவத்தைத் தவிர வேறொன்றும் நினையாதவர். திருவாசகமும் தேவாரமும் அவரது இருகண்கள். சைவசித்தாந்தத்தை வாழ்க்கைக்கு வழிகாட்டியாகக் கொண்டவர். "எனக்கு நினைவாற்றல் எல்லாம் குறைந்து வருகிறது. திருவாசகத்தைத் தவிர இப்போது வேறொன்றும் படிப்பதில்லை" என்று அண்மைக் காலமாகக் கூறிவந்தார். சுவாமிநாத பண்டிதருடைய திருமுறைப் பெருமையை மீளப் பதிப்பிக்க வேண்டும் என்று நினைவுபடுத்துவார். வித்தகம் ஆசிரியர் தென்கோவை கந்தையா பிள்ளையையும் புன்னாலைக் கட்டுவன் வித்துவசிரோமணி கணேசையர் அவர்களையும் சிரம்மேல் வைத்துப் போற்றுபவர்.

வித்தகம் கந்தையா பிள்ளையவர்களது உண்மை முத்தி நிலையை சைவசித்தாந்ததின்பால் ஈடுபாடுள்ளோருக்கு அறிமுகப்படுத்துவார். பல்லோரும் காணப் பரவெளியில் உடம்போடு மறைதலே உண்மை முத்தி நிலை என்ற கந்தையா பிள்ளையவர்களது சித்தாந்தக் கருத்தோடு பெரிதும் உடன்பாடுள்ளவர் மலத்தன்மையுடைய உடல் அழுக்குகள் நீங்கி அமலத் தன்மை பெற்று பரவெளியிலே சோதியாக மறைதலே உண்மை முத்தி இதனை சீவகசிந்தாமணியும் வலியறுத்துகிறது என்பார். சுத்தமாம் சோதிநாளில் சுந்தரர் கயிலை சேர்ந்ததைக் கூறி சமய குரவர்கள், பட்டினத்தார் முத்துத்தாண்டவர், தியாகராஜசுவாமிகள் முதலானோர் பரமவெளியில் சோதியாக மறைந்ததையும் நினைவுபடுத்துவார். தமிழ்வித்துவான் கணேசையாவிற்கு யாழ்ப்பாணத்தில் எடுத்த பெருவிழாவைப் போல் ஒரு விழாவை யான் பார்த்ததில்லை என்றும் யாழ்ப்பாணத்தில் உள்ள அறிஞர்கள் எல்லோருமே இவ்விழாவுக்கு வருகை தந்ததையும் நினைவுபடுத்துவார். ஐயா அவர்கள் மதுரைத் தமிழ்ச் சங்கம் சென்று தலைவராக இருந்த நாராயண ஐங்காரிடம் தமிழ் படிக்கக் கேட்டிருக்கிறார். அதற்கு ஐயங்கார் யாழ்ப்பாணத்திலே தான் கணேசையா இருக்கிறாரே அவரிடம் படிக்கலாமே என்றிருக்கிறார். வித்துவான் கணேசையாவைப் போல் ஒரு பெரும் மனுசனை நான் கண்டதில்லை" என்பார் கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள்.

துர்க்கா துரந்தரி சிவத்தமிழ் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுக்கு சிவத்தமிழ் செல்வி என்ற பட்டத்தை வழங்கி சிவத்தமிழ் செல்வியை உலகறியச் செய்தவர். சுன்னாகம் குமாரசுவாமிப் புலவரையும் பண்டித மணி என்றால் கணபதிப்பிள்ளையையும் குறிப்பது போல் சிவத்தமிழ்ச் செல்வி என்ற நாமமும் இன்று தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களுடன் நிலைபெற்றுள்ளது. ஏழாலையூர்ப் பண்டிதர் கலாநிதி மு.கந்தையா அவர்தம் பெருமையை அறிந்தவர். நாவலர் பெருமானது பெரிய புராண சூசனம் காரைக் கால் அம்மையார் புராணத்துடன் நின்றுவிட இதனை எழுதி முடிக்கப் பொருத்தமானவர் பண்டிதர் கலாநிதி கந்தையாவே என்பதைக் கூறி கோலாலம்பூர் தமிழ்ச் சங்கத்தார் பதிப்பிக்க வழிகாட்டியவர்.

இறுதி 3தினங்களும் ஐயா உணவேதும் அருந்த வில்லை பால் மட்டுமே அருந்தினார். சுன்னாகத்தில் 25.04.2015 அதிகாலை 3.00 மணியளவில் வைத்தீசுவரக் குருக்கள் அவர்களது ஆன்மா சப்தமி திதியில் சிவத்தோடு சங்கமமாகியது.

தமிழ் மொழி இலக்கணத்தில் கரிசனை

வித்தகம் ஆசிரியர் தென்கோவை கந்தையா பிள்ளையவர்களின் கையெழுத்துப் பிரதியாக இருந்த இலக்கணக் குறிப்புக்களை வெளியிட வேண்டும் என்ற ஆவல் கொண்டிருந்தார். கந்தையாபிள்ளை அவர்களின் இலக்கணக் குறிப்பை பல ஆண்டுகளுக்கு முன்னர் ஐயாவிடம் இருந்து பெற்றுச் சென்றவர்களை அறிய முடியவில்லை. கந்தையா பிள்ளையவர்களின் இலக்கணக் குறிப்பிலே பல சிறப்புக்கள் உள்ளன. பழம் பெரும் இலக்கண நூல்களிலே உள்ள கடினமான உதாரணங்களுக்குப் பதிலாக இலகுவான உதார ணங்களை அவரது குறிப்புக்களிற் காணலாம். உதார ணமாகக் கொல் களிறு என்ற வினைத்தொகைக்கு வளர்பிறையையும் புலையனும் தின்னாப் புன்புலால் யாக்கை என்னும் இழிவு சிறப்பிற்கு நாயுந் தின்னாச் சோறு என்ற கந்தையா பிள்ளையவர்கள் உதாரணம் காட்டுவதையும் ஐயா குறிப்பிடுவார்.

பன்னூல் அறிஞர்-நடமாடும் கலைக் களஞ்சியம் - பதிப்பாசிரியர்

தமிழ்மொழி இலக்கண இலக்கிய நூல்கள், சைவ சித்தாந்த நூல்கள், வடமொழியில் அமைந்த சைவசமயக் கிரியைகள் பற்றிய நூல்கள் பலவற்றைக் கற்று உணர்ந்து பலருக்கும் அறிமுகம் செய்த பெருந்தகை இத்தகைய நூல்களை சேகரித்தும் வந்தார். நூற்றுக்கும் மேற்பட்ட கட்டுரைகளை எழுதியிருக்கிறார். ஐயா அவர்கள் எழுதிய தமிழ் மொழி இலக்கணம், இலக்கியம், பண்பாடு, சமயம் சார்ந்த கட்டுரைகள் பல்வேறு மலர்களையும், சஞ்சிகைகளையும், பத்திரிகைகளையும் அலங்கரித்துள்ளது. தினகரன் பத்திரிகையில் பல அரசியல் கட்டுரைகளை அசோகன் என்ற பெயரில் எழுதியிருக்கிறார். பொதுமக்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகள் குறித்து பத்திரிகை ஆசிரியருக்கு கடிதம் வரைந்திருக்கிறார்.

வாழ்க்கையைக் கொண்டுசெல்லவே கடினமாய் இருந்த காலங்களில் நூல்களை சேகரிக்க ஐயா எடுத்த முயற்சி கண்ணீர் சிந்த வைக்கிறது. நூல்கள் மட்டுமன்றி பத்திரிகைகள், சஞ்சிகைகள், இவற்றையும் விலை கொடுத்து வாங்கி சேகரித்து வந்தார். தமிழ் நாட்டில் இருந்து வெளிவந்த சஞ்சிகைகள், நூல்கள் பலவற்றை உரியவர்களுக்குக் கடிதம் எழுதியும் பெற்று வந்தார். பத்திரிகைகளில் வெளிவந்த அறிஞர்களின் கட்டுரைகளை யும், பயனுள்ள தகவல்களையும் சேகரித்து வந்தார். தெரு விலே ஒரு பத்திரிகைத் துண்டு இருந்தால் எடுத்துப் படித்து விட்டு அதனைப் பயனுள்ள தெனக் கருதின் கவனமாகக் கொணர்ந்து தனது பைலிற்குள் வைப்பார். யாழ்ப்பாணத் தில் வேறு எந்த நூலகத்திலும் காணக் கிடைக்காத பல நூல்கள் ஐயா அவர்களிடம் இருந்தது. ஐயா அவர்கள் சேக ரித்த நூற்றுக்கணக்கான நூல்கள் இடப்பெயர்வினாலும் நாட்டில் நிலவிய அசாதாரண சூழலாலும் அழிந்து போயின. காரைநகரை விட்டு இடம்பெயர்ந்த வேளை வீட்டிலே விட்டு வந்த நூல்கள், ஓலைச் சுவடிகள் நிலத் திலே சிந்தப்பட்டு கறையான் அரித்ததைக் கண்டு உள்ளம் வெதும்பிக் கண்ணீர் சிந்தினார்.

தம் சேகரிப்பிலிருந்து குறித்த தொகையான நூல்களை வவுனியா கோயிற்குளம் பிள்ளையார் கோயில் நூலக த்திற்கு வழங்கியிருந்தார். எனினும் ஐயா அவர்கள் பாதுகாத்து வந்த பல்லாயிரம் நூல்கள் பொதுமக்களின் பாவனைக்காகக் காரைநகரிலே ஐயாவினது தந்தையார் சிவத்திரு கணபதீஸ்வரக் குருக்கள் பெயரில் அமைக் கப்பட்ட நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளது.

தனது 99 ஆவது வயதில் இயலாத போதும் உங்களு க்குப் படிக்க என்ன வேண்டும் என்று கேட்பார். எவராவது குறிப்பிட்ட கட்டுரை அல்லது பாடல் தேவையென்று கேட்டால் அதனை நிழற்பிரதி எடுத்து உரியவர்களுக்கு அனுப்பும் வரை ஓய்வெடுத்துக் கொள்ளமாட்டார். நவாலியூர் சோமசுந்தரப் புலவரின் பேரன் வைத்திய கலாநிதி பாரதி அவுஸ்திரேலியாவிலிருந்து பண்டிதை பரமேசுவரி இளமுருகனார் பற்றி ஆங்கிலத்தில் தங்கம்மா நடராசா எழுதிய குறிப்பைக் கேட்டிருந்தார். பண்டிதை பரமேசுவரி 1938 இல் ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கம் நடாத்திய பண்டிதர் பரீட்சையில் முதன் மாணவியாகச் சித்தி பெற்றவர் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட அக் குறிப்பை வெள்ளிக்கிழமை 24.04. 2015 அன்று நிழற்பிரதி எடுத்து அனுப்புவதற்குத் தயாராக வைத்திருந்தார். தனது பிள்ளைகளைக் கொண்டு முத்திரையும் கடித உறையையும் வாங்கி வைத்திருந்தார்.

கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் 25 ற்கும் மேற்பட்ட நூல்களைப் பதிப்பித்திருக்கிறார். சைவக் களஞ்சியம், ஈழத்துச் சிதம்பர புராணம், ஆண்டிக்கேணி ஐயனார் புராணம், பாரத இதிகாசங்களில் வரும் பாத்திரங்களின் குணவியல்பு, பெரிய புரா ணம் திருநகரப் படல உரை, ஐயடிகள் காடவர்கோன் நாயனார் அருளிச்செய்த சேத்திரத் திருவெண்பா, சுவாமிநாத பண்டி தருடைய திருமுறைப் பெருமை, திண்ணபுர அந்தாதி, நன்னூ ற் காண்டிகை உரையும் நாவலர் பெருமானும், பிள்ளைத் தமிழ், காரைநகரில் சைவ சமய வளர்ச்சி, ஜோர்ச் மன்னர் இயன்மொழி வாழ்த்து, வினைத் தொகை, தொடர்மொழிக்கு ஒரு மொழி முதலான பல நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டிருக்கிறார்.

வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் தமிழ்மொழிக்கும் சைவசமயத்துக்கும் சமூகத்திற்கும் ஆற்றிய பணியைப் பாராட்டி பல்வேறு அமைப்புக்களும் நிறுவனங்களும் பட்டங்களை வழங்கிக் கௌரவித்துள்ளன. ஐயா அவர்கள் அருட் சுடர்மணி, சமூக மாமணி, கலை ஞானச்சுடர், சிவத்தமிழ் வித்தகர், செந்தமிழ் ஞாயிறு, பண்டிதமணி முதலான பல பட்டங்களைப் பெற்றிருந்தும் அவற்றை ஒருபோதும் பயன்படுத்தியதில்லை.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 2002 இல் சிவத்திரு வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் தமிழ்ப் பணியைக் கௌரவித்து இலக்கிய கலாநிதிப்பட்டம் வழங்கிச் சிறப்பித்திருந்தது.

கலாநிதி வைத்தீசுவரக் குருக்கள் அவர்களின் நூற்றா ண்டு விழாவைக் கொண்டாட காரைநகர் வாழ் மக்கள் தயாராகி வந்த வேளை ஐயா அவர்களின் இழப்பு நம் அனைவருக்கும் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. கலாநிதி சிவத்திரு க.வைத்தீசுவரக் குருக்கள் அவர்கள் வாழ்வையும் பணியையும் வரும் சந்ததி அறிய சரித் திரமாக்க வேண்டும். அவர் பதிப்பிக்க எண்ணியிருந்த நூல்களைப் பதிப்பித்து அவர்தம் பணியைத் தொடர்வதே அவருக்குச் செய்யும் சிறந்த நன்றிக் கடனாகும். அவர் தம் நூலகத்திலுள்ள நூல்களைப் பட்டியற்படுத்தி அவர்தம் அரிய சேகரிப்பான நூல்களைத் தமிழ்ச் சமூகம் கற்றுப் பயன்பெற வழி செய்வதே நம்பணியென்று கொள்ளவேண்டும்.

GASA RESTAURANT

காசா உணவகம்

Take Out & Catering

we are specialist in Biriyani

Kotthu Rotti	கொத்து ரொட்டி
Idiyappa Kotthu	இடியப்பக் கொத்து
Masala Dosai	மசலா தோசை
Buriyani	புரியாணி
Cutlad	கட்லட்
Susiyam	சூசியம்
Singapore Noodles	சிங்கப்பூர் நூடில்ஸ்





2950 , Kennedy Road,
Unit # 3
Scarborough
ON. M1V 1T1
416 321 1219

50 New Delhi Dr,
Unit # 51
Markham,
ON. L3S 0B5
905 471 6300

Combo for 20 People

BIRIYANI
(Mutton, Beef, Chicken)
Thandoori Chicken
Egg, Red Onion,
Vattilappam or
Fruit Salad

PUTTU PIRATTAL
(Squid, Scrap, Shrimp)
Thandoori, Chicken, Egg
Red Onion, Vattilappam or
Fruit Salad

SINGAPORE NOODLES
Thandoori Chicken, Veg Pattis
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream

STRING HOPPER BIRIYANI
Eggplant Pirattal,
Samosa, Veg Pattis,
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream

KOTTHU ROTTI
(Mutton, Beef, Chicken)
Thandoori, Chicken
Egg Shambol, Cutlet
Salad W/Dressing
Fruit Salad W/ Ice Cream



ஜேகே எனும் நண்பனின் பயணம்



சட்டெனப் பொங்கியெழும் கோபமும், இடம் பொருள் பாராத வாய்மொழிகளுமாக இருந்த ஆரம்பக்கால ஜெயகாந்தனின் இயல்பு பலபேரைக் காயப்படுத்தியிருக்கக்கூடும்.

நான் ஒரு சினிமாக்காரனும்கூட என்பதால் மட்டுமல்ல மேற்குறிப்பிட்ட தலைப்பை இட்டதில் காரணங்கள் உண்டு.

ஜெயகாந்தனோடு நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிட்டிய பலருள் நானும் ஒருவனாயிருப்பதில் பெருமிதப்பட ஒன்றுமில்லை. ஏனெனில் அவர் யாவர்க்கும் நண்பன். அதில் பழகியோர் அறியாதவர் என்கிற பாவனைகள் இல்லை. 'நேர்படப் பேசுகிற' எவர்க்கும் அவருடன் நண்பராகின்ற 'தகுதி' உண்டென்று நான் கருதினேன். ஆனால் அவர் எவரையும் நேசித்தார். 'அவருடன் ஏன் நட்பு?- அவருடைய சேர்க்கை எதற்கு?' போன்ற கேள்விகளுக்கு அவருடைய பதில் "அந்த அளவுக்கு ஒரு பகைமை இருக்கிறதா?" என்பதே. இதில் மதம், மொழி, இயக்கம் என்கிற மாறுபாடுகள் ஜேகேயிடம் இருக்கவில்லை என்று எனக்குப்பட்டது. தனிப்பட்ட முறையில் பகைமை இல்லாத பகைமை கொள்ளாத தோழராகவே அவரை என்னால் புரிந்து கொள்ள முடிந் தது. அவர் அனைவரையும் நேசித்தார் அனைத்தையும் நேசித்தார். நேசிக்கக் கற்றுக் கொண்டே இருந்தார்.

கார்ல் மார்க்சும், லெனினும். காந்தியும், வள்ளலாரும் குறிப்பாக பாரதியும் அவருக்கான இந்தப் பண்பினை உருவாக்கி வடிவமைத்தார்கள். அவர் எழுத்தாளர் மட்டும் தானா என்ன? இலக்கியம் தாண்டிய சமூகப் போராளியாக கம்யூனிஸ்ட் கட்சி அவரை உருவாக்கிற்று. அது அவருள் புகுத்திய சிந்தனைகள் - கிளர்த்திய சிந்தனைகள் எல்லாம் விரிவடைந்து வலுப்பெற்று - கம்யூனிஸ்ட் கட்சி என்கிற அமைப்பை விட்டே அவரை வெளியேறச் செய்தன. ஒரு கூண்டுக்குள் அடைபட்டு இசைக்க பறவையால் முடிகிற காரியமா என்ன? அதுவும் ஓர் இலக்கியப் பறவைக்கு. லெனின் மாதிரி 'மகா உணர்வு நுட்பம்' கொண்ட கம்யூனிஸ்ட்டுகளால் மட்டுமே கலைஞர்களை கவிஞர்களை புரிந்து கொள்ள முடிந்திருக்கிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி வரலாற்றில் பி.சி.ஜோஷி என்று அழைக்கப்பட்ட பூர்ண சந்திர ஜோஷி பொதுச் செயலாளராக இருந்த காலத்தில் இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி கலைஞர்களாலும் - கவிஞர்களாலும் - எழுத்தாளர்களாலும் நிரம்பி வழிந்தது. அந்தக் காலகட்டத்தின் தமிழ் ஒளிதான் ஜீவா என்றழைக்கப்பட்ட ப.ஜீவானந்தம், அந்த ஜீவானந்தத்தின் வார்ப்படமே தோழர் ஜெயகாந்தன்.

ஜீவா ஜெயகாந்தனை தமிழ்ப் பரப்பில் புரட்டிப் போட்டார். இலக்கியத்தையும் இலக்கணத்தையும் மார்க்சியத்தோடு புகட்டினார். பாலதண்டாயுதம், எஸ். ராம கிருஷ்ணன் (எஸ். ஆர்.கே), ஆர். கே. கண்ணன், எம்.எஸ்.கண்ணன் போன்ற கம்யூனிஸ்ட் சிந்தனாவாதிகள் ஜெயகாந்தனின் குருபீடத்தில் அணிவகுத்தனர்.

சட்டெனப் பொங்கியெழும் கோபமும், இடம் பொருள் பாராத வாய்மொழிகளுமாக இருந்த ஆரம்பக்கால ஜெயகாந்தனின் இயல்பு பலபேரைக் காயப்படுத்தியிருக்கக்கூடும். ஆனால் அதன் பின்னாலிருந்த மௌனிகளாக இருப்பதைத் தவிர வேறுவழி இருந்ததில்லை.

திராவிட இருபக்கத்தின் மீது குறிப்பாக அண்ணாத்துரை மீது ஜெயகாந்தன் கொண்டிருந்த கோபம் அவரை ஆத்திரத்தின் உச்சத்திற்கே கொண்டுசென்றது. பேரறிஞர் அண்ணா என்று முன்னிறுத்தப்பட்ட பிம்பம் தமிழ்நாட்டை சீரழிவுக்குத் தள்ளும் என்று அவர் உறுதியாக நம்பினார். அதுவரை போற்றப்பட்டு வந்த அரசியல் நன்னெறியும், நாகரிகமும் புறந்தள்ளப்படும் என்று அஞ்சி அவரை பகிரங்கமாக விமரிசனம் செய்தார். அண்ணாவின் அஞ்சலிக் கூட்டத்திலேயே அது அப்பட்டமாக வெளிப்பட்டது. அவர் அதற்கு அஞ்சவேயில்லை. எவர்க்கும் எதன் பொருட்டும், தான் தவறென்று உணர்ந்து விட்டால் சாட்டையெடுத்து சுழற்றுகிற வழக்கம் அவருக்கு இறுதி வரை இருந்தது.

அவர் ஒரு சர்வதேசியவாதி யாகவும், தேசியவாதி யாகவும் இருந்தார். கம்யூனிஸ்ட்டாக இருந்தபோதிலும் காங்கிரஸ் கட்சியை ஒரு தேசிய ஜனநாயக இயக்கமாகவே கருதினார். குறுகிய இனவாதம் அவருக்கு அபயமாகப்பட்டது. எக்கணத்திலும் அவர் அதைக் கண்டிக்கத் தவறியதே இல்லை.

தான் இனி எழுதப் போவதில்லை என்று அவர் முடிவெடுத்த பிறகும், அவரை மீண்டும் எழுதவைக்க எடுக்கப்பட்ட முயற்சிகளும், விளைவுகளும் சரிவர அமைய வில்லை. அதற்கும் அவரது திடமான தீர்க்கதரிசனமே காரணமாயிருந்தது என நான் உணர்கிறேன். 'பாலம்' இதழுக்காக 'ஜெயகாந்தன் பதில்கள்' பகுதிக்காக நான் அவரை அணுகும் போதெல்லாம் அவர் அதில் பெரிதும் ஆர்வம் அற்றவராகவே இருந்தார். அந்தப் பத்திரிகையில் "எழுதியவற்றைத் திரும்பிப் பார்க்கும்போது என்ன தோன்றுகிறது?" என்கிற ஒரு கேள்விக்கு "மிகவும் திருப்தியடைகிறேன்" என்று கூறினார் ஜேகே.

எழுத்தைக் கைவிட்டாரேயொழிய, அவர் எப்போதும் சமூக வாழ்விலிருந்தும் பொது வாழ்விலிருந்தும் விலகிடவே இல்லை.

சோவியத் ரஷ்யாவில் கோர்பச்சோவ் சீரமைத்த கோட்பாடுகளையும், நடை முறைப்படுத்தல்களையும் முழுமனதோடு வரவேற்றார். சோவியத் தேசம் ஓர் 'இரும்புத் திரை' நாடாக இருப்பதை அவர் விரும்பவேயில்லை. பெரஸ்ட்ரோய்க்கா, கிளாஸ் நாஸ்ட் என்று கோர்பச்சேவால் முன்வைக்கப்பட்ட மறுசீரமைப்பு மற்றும் வெளிப்படைத் தன்மையுடனான மாற்றம் ஜெயகாந்தனைப் பூரிக்க வைத்தது. கோர்பச்சோவின் அரசை நிலைகுலைக்க யனயேவ் போன்ற விரல் விட்டு எண்ணத்தக்க ஒரு சில நபர்களால் 'சதி வேலைகள்' மேற்கொள்ளப்பட்ட போது, கூப் (coup) நடத்திய கூழ்முட்டைகள் என்று கடுமையாக விமரிசித்தார் ஜேகே. அவர்களைக் கண்டித்து பல இடங்களில் முழக்கங்கள் செய்தார் எழுதினார். சதி நிறைவேறி சோவியத் சிதைந்த போது, "அஞ்சாதீர் தோழர்களே! கம்யூனிசம் மடியாது!" என்று நம்பிக்கைக் குரல் கொடுத்தார். தனது ஆழ்மனதில் ஆழமான புரிதலிலிருந்து அதே போன்று இலங்கையில் தமிழர்களின் உரிமைகள் பறிக்கப்பட்டதற்கும், அவர்களுக்கெதிரான வன்முறைகள் இழைக்கப்பட்ட காலங்களில் வேதனையுடன் அவற்றை கவனித்த ஜேகே. தமிழர்களின் போராட்டம் ஒரு குறுங்குழுவாதமாக, குறுகிய தமிழ்த் தேசிய வெறியாக, கூடாத வன்முறைப் போக்காக உருமாறிய போது அதற்கு எதிராகக் குரல் கொடுத்த தமிழகத் தலைவர்கள் அறிஞர்களுள் வரிசையில் முன் நின்றார் ஜேகே.

'ஆயுதம் எடுத்துத் தான் புரட்சி ரத்தம் சிந்தித்தான் மாறுதல் என்பது கட்டாயமல்ல' என்கிற லெனினின் கருத்துக்கு வழிமொழிகிற ஜெயகாந்தன், இந்திய இலங்கை ஒப்பந்தத்துக்கு ஆதரவாக நாடெங்கும் சுற்றியலைந்து, வலியுறுத்திப் பேசி, ஈழமக்களின் நல்வாழ்வுக்காக உரத்துக் குரல் கொடுத்தவர் என்கிற வயையில், இலங்கைத் தமிழ் மக்களின் நன்றி என்றென்றைக்குமாக ஜே.கேவுக்கு உரித்தானது என்பதில் ஐயமே இல்லை.

இந்திய சோவியத் நட்புறவுக் கழகத்தின் (ISCUS) பொறுப்பாளர்களுள் ஒருவராக, அதன் பின்னர் பெயர் மாறி இந்திய கலாச்சார நட்புறவுக் கழகமாக (ISCUF) பரிமாணம் பெற்ற அமைப்பிலும் தொடர்ந்து செயலாற்றி சர்தேசப் பிரச்சனைகளில் தன் கருத்தை முழுமையாகப் பதித்து வந்தார் ஜேகே.

'யாதுமாகி நின்ற' பாரதியைப் போல, அவரை ஆதர்சமாகக் கொண்ட ஜெயகாந்தனும், யாவர்க்கும் நண்பனாக நின்று பரிந்துரைத்தார். நல்லன எல்லாவற்றையும் நேசித்தார். தீமைகளை எங்கெங்கு காணினும் சுட்டெரிக்கக் களத்தில் நின்றார் என்பதே 'எழுத்தாளர்' என்பதையும் கடந்த ஜெயகாந்தனின் சிறப்பு. தான் ஒரு கம்யூனிஸ்ட் என்பதை பகிரங்கமாகப் பிரகடனப்படுத்தி வந்தார் - இறுதி வரையிலும் - கம்யூனிஸ்ட் கட்சி குறித்த கவலையின்றி.

இவ்வாறான ஒரு தோழரின் இறப்பை வெறுமனே 'இழப்பு' என்கிற ஒற்றைச் சொல்லில் சொல்லிவிட்டுப் போக என்னால் முடியவில்லை.

ஒரு முட்டாள் நண்பனை விட புத்திசாலியான எதிரியுடன் பேசிப் பிரச்சினைகளைத் தீர்ப்பது இலகுவானது.









புதிய, அத்தாட்சிப்படுத்திய பாவித்த வாகனங்கள்
ராஜா தர்மலிங்கம்
Raja Tharmalingam
647-833-4998
New & Certified Pre-Owned Vahicles



நிலாவில பணக்காரர்...

அரன்

தங்கச்சியின் கலியாணத்திற்காக ஊருக்குப் போயிருந்தேன். வழமைபோல பழைய நண்பர்கள் சிலர் வந்து பாத்து குசலம் விசாரித்தார்கள். பொறின் விஸ்கி பெக் அடித்தார்கள். எப்பிடி இருக்கு மச்சான் என்று தமக்குள் பேசிக்கொண்டார்கள். பிள்ளைகளுக்கு சொக்கிலேட் எடுத்துக்கொண்டு போனார்கள்.

ஞாயிற்றுக்கிழமை சாட்டி பீச் போவம் என்று பிளான் போட்டோம்.

ஞாயிற்றுக்கிழமை விழுந்தது. நாலைந்து மோட்டர் பைக்குகள் வந்தன.

புடும் புடும் புடும். ஒரு மணி நேரத்தில் சாட்டி பீச் வந்தது.

பச்சை ஸ்பிறைட் போத்தலில் கள்ளு வந்தது. சுட்ட கருவாடு வந்தது. கொஞ்ச நேரம் கழித்து பொலிஸ்காரனும் வந்தான்.

"மாத்தயா ரட்டத" என்றான் பொலிஸ்காரன். வெள்ளையும் சள்ளையுமா இருந்தனாக்கும்.

ஒவ் ஒவ் என்றான் பரட்டை. 16வயதினிலே ரஜனி ரசிகன். அப்பயிருந்தே எவளைக் கண்டாலும் மயிலு எண்டுதான் கூப்பிடுவான்.

"மே பொண்ட பே" என்றான் பொலிஸ்காரன்.

என்னடா "மேய் பேய்" எண்டு எதுகை மோனையில ஏதோ சொல்லுறான் கவிதையா என்றேன் நான்.

முறைத்தான் பரட்டை.

பொலிஸ்காரனை பிரண்ட் போல கதைச்சு கை குலுக்கினான் பரட்டை. 2000 ரூபாய் கை மாறியது.

"கரி கரி" என்றான் பொலிஸ்காரன்.

"கெதியா முடியுங்கோ" என்டு சொல்லுறான் எண்டு இங்கிலீசில நினைச்சன் நான். "பப்ளிக்கில குடிக்கக் கூடாதாக்கும் கெதியா முடிப்பமடா" என்றேன் நான்.

இல்ல இல்ல பிரச்சனை முடிஞ்சுது. எல்லாம் சரி என்றான் பரட்டை.

வருசத்தில ஏழு மாசம் சினோவ பாத்த எனக்கு கடற்கரை சூரியஸ்தமனத்தைப் பார்க்கத் துடித்தது மனம். வாய விட்டுச் சொல்லிட்டன்.

"சரி" எண்டு ஏகோபித்த குரல் வந்தது.

பொழுது பட்டது. சூரியன் போட்டுது. நாங்களும் புறப்பட்டோம்

மீண்டும் புடும் புடும் புடும்

வீடு வந்திட்டுது.

நிலவு கிழம்பியிருந்தது. முழு நிலவு மாதிரித் தெரிந்தது.

"இண்டைக்குப் போயாவா" என்றேன் நான்.

"ஓம்" "இல்லை" என்று சொல்வார்கள் என்று பார்த்தால்

"எத்தின மணி" எண்டான் பரட்டை

"ஏழரை" எண்டு ஆரேழு குரல்.

"மச்சான் 20000 ரூபா குடு நாளைக்கு இரவு தாறன்" எண்டான் பரட்டை.

பெர்ஸை எடுத்துப் பாத்தேன். போதாது. இரு வாறன் எண்டு உள்ள இருந்து எடுத்து வந்து குடுத்தன்.

"நாளைக்குச் சந்திப்பம்". அவசரமாக எல்லோரும் விழுந்தடித்து ஓடினார்கள்.

நெற்றுக்குள்ளேயும் நுளம்புக் கடியோட இரவு கழிந்தது.

பத்து மணிக்கு ரீய கொண்டந்து எழுப்பினாள் தங்கச்சி. இவளுக்குத்தான் கலியாணம். "என்ன ரீச்சர் ஸ்கூலுக்குப் போகலயோ" என்றேன் நான். அவள் மற்ஸ் ரீச்சர். கிறயுவற். இவளுக்கு மாப்பிள்ள பாக்க நாங்க பட்ட பாடு வேற கதை. பிறகு சொல்லுறன்.

"இல்ல போயா" எண்டாள். ஏதோ என்னப் பேசுறாள் எண்டு தூக்கக் கலக்கத்தில நினைச்சன். ரீ குடிச்ச பிறகு விளங்கீட்டுது.

குளிச்சுச் சாப்பிட்டுட்டு பரட்டைக்குப் போன் போட்டன். ரெண்டு மணி ஆகியிருந்தது.

"ரவி கடையில நிக்கிறன். நான் வர ஏலாது. பாபுவ அனுப்பிறன் பத்து நிமிசத்தில நிப்பான்".

"ஓகே. நான் இப்பவே ரெடிதான்" எண்டன்.

சொன்ன மாதிரி பத்து நிமிசத்தில வாசலில பைக் கோன் அடித்தது. கேட்டுக்கால பாத்தன். பாபு.

ரவி கடைக்குப் போய்ச் சேர்ந்தோம்.

"ஆ தம்பி சாமான் இருக்கா" "ஆ ரவி சாமான் இருக்கா" என்று கேட்டுக்கொண்டு சிலர் வந்தார்கள்.

கடையில சாமான் இல்லாமலா திறந்திருக்கிறான் என்று தலையைப் பிச்சுக்கொண்டிருந்தன் நான்.

"ஆ அண்ண எப்பிடி சுகம். கனநாள் காணயில்ல. போயாவுக்கு மட்டும் தான் என்னத் தெரியுதாக்கும்" என்று நக்கலும் கக்கலுமாக உள்ள போகக் கை காட்டினான் ரவி.

வந்தவர் எல்லாம் பின்கதவால வெளியே போனார்கள்.

ஆறு ஆறர இருக்கும். வேறும் சிலர் வந்தார்கள். அதே கேள்வி. பதில் வேற.

"இல்ல முடிஞ்சுது". "லேட் முடிஞ்சு". "வேளைக்கு வரவேணும்". "கோலடிச்சிருக்கலாமே" என்றார்கள் ரவியும் பரட்டையும்.

வந்தவர்கள் எல்லாம் வந்த வளியே திரும்பிப் போனார்கள்.

என்னடா கடையத் திறந்து வச்சுக்கொண்டு சாமான் இல்ல எண்டு சொல்லுறான் எண்டு மீண்டும் தலையைப் பிச்சுக்கொண்டேன் நான்.

கொஞ்ச நேரம் ஓடியது.

"இந்தா மச்சான் உன்ர காசு" எண்டு நீட்டினான் பரட்டை.

"என்னடா பிரச்சனை" எண்டு டேட்டுக்கொண்டு வேண்டி பெர்ஸில வச்சன் நான்.

"இல்ல இண்டைக்குப் போயா தானே" என்றான் பரட்டை.

"அதுக்கென்னடா" என்றேன் நான்.

"போயாவுக்கு பார் பூட்டுத்தானே. முதலே 20 போத்தல் வேண்டி வச்சு போத்தல் பிசினஸ் மச்சான்" என்றான் பாபு.

புரிந்தது. "நாம என்னமாதிரி விரதமா" என்றேன்.

"ஒரு போத்தல் இருக்கு. மூவாயிரம் வருமானம்" என்றான் பரட்டை.

"சிறி லங்கா மட்டும் நிலாவில இருந்திருந்தால் நாங்கள் எல்லாம் பெரிய பணக்காரங்க மச்சான். உன்னப்போல கேட்ட உடன காசத் தூக்கிக் குடுத்திருப்போம்". இது ரவி.

"உம்" கொட்டினான் பாபு. வானத்தை அண்ணாந்து பார்த்துப் புகையை ஊதினான் பரட்டை.

ஒன்றும் புரியாமல் பௌர்ணமி நிலாவைப் பார்த்தேன் நான்.

பாட்டி வடை சுட்டுக்கொண்டிருந்தாள்.





(இப் பேரவையில் இலங்கையைச் சேர்ந்த அனகாரிக தர்மபாலா (Anagarika Dharmapala) தேர வாத பௌத்தத்தைப் பற்றியும் சென் பௌத்த மத சார்பில்: ஜப்பானைச் சேர்ந்த சோஜன்ஷகு (Soyan Shaku`)வும் கலந்து கொண்டு புகழ்பெற்ற பேருரை ஆற்றினார்கள். அந்த இருவரும் சுவாமி விவேகானந்தருடன் இப் படத்தில் காணப்படுகிறார்கள்.)

பௌத்தம் இந்து மதத்தின் நிறைவு

11.09.1893 இலிருந்து 27.09.1893 வரை அமெரிக்காவில் உள்ள சிக்காகோ நகரில் இடம்பெற்ற சர்வசமய பேரவையில் (World's Parliament of Religions) சுவாமி விவேகானந்தர் அவர்கள் 26.09.1893 அன்று புத்த மதத்தைப் பற்றி ஆற்றிய உரை இது - (இராமகிஷ்ணன் மடம், மயிலாப்பூர் வெளியீடு, தமிழ்நாடு.)

நான் பௌத்தன் அல்ல என்பதை நீங்கள் கேள்விப்பட்டு இருப்பீர்கள். ஆனாலும் நான் ஒரு பௌத்தன். சீனாவும், ஜப்பானும், இலங்கையும் புத்த மகானின் உபதேசங்களைப் பின்பற்றுகின்றன. இந்தியா அவரைக் கடவுளின் அவதாரம் என்று போற்றி வணங்குகிறது. நான் பௌத்த மதத்தை விமர்சிக்க போவதாக சற்று முன் கூறினார்கள். அதன் பொருளை நீங்கள் சரியாக புரிந்து கொள்ளவேண்டும் கடவுளின் அவதாரம் எனக் கூறி வழிபடுபவரை நானே விமர்சிப்பது என்பது என்னால் நினைத்துக் கூடப்பார்க்க முடியாத ஒன்று. ஆனால் புத்தர் பெருமானை அவரது சீடர்கள் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்பது தான் எங்கள் கருத்து. இந்து மதத்திற்கும் (நான் இந்து மதம் எனக் குறிப்பிடுவது வேத மதத்தைத்தான்) இந்நாளில் பௌத்தமதம் என்று குறிப்பிடுகிறதே அதற்கும் உறவு, யூத மதத்திற்கும் கிறிஸ்தவ மதத்திற்கும் உள்ள உறவுதான்.

ஏசு கிறிஸ்து ஒரு யூதர், சாக்கிய முனிவர் ஓர் இந்து. யூதர்கள் கிறிஸ்துவை ஒதுக்கித் தள்ளியது மட்டுமன்றி, அவரைச் சிலுவையிலும் அறைந்தார்கள். இந்துக்கள் சாக்கிய முனிவரைக் கடவுள் என்று ஏற்று வணங்குகிறார்கள். இந்துக்களாகிய நாங்கள் எடுத்துக்கூற விரும்பும், தற்கால பௌத்த மதத்திற்கும் புத்த பகவானின் உண்மை உபதேசத்திற்கும் உள்ள முக்கியமான வேறுபாடு என்னவென்றால் சாக்கிய முனிவர் எதையும் புதிதாக உபதேசிக்க வரவில்லை என்பது தான் அவரும் ஏசுநாதரைப் போன்று, நிறைவு செய்யவே வந்தார், அழிக்க வரவில்லை.

ஏசுநாதர் விஷயத்தில், பழைய மக்களாகிய யூதர்கள் தானும் அவரைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. புத்தர் விஷயத்தில், அவரைப் பின்பற்றியவர்களே அவரது உபதேசங்களின் கருத்தை உணரவில்லை. பழைய ஏற்பாடு நிறைவு செய்யப்படுவதை யூதர்கள் புரிந்து கொள்ளாதது போன்று, இந்து மத உண்மைகள் நிறைவு செய்யப்படுவதை பௌத்தர்கள் அறிந்து கொள்ளவில்லை. மீண்டும் சொல்கிறேன் சாக்கிய முனிவர் இந்து மதக் கொள்கைகளை அழிக்க வரவில்லை, ஆனால் இந்து மதத்தின நிறைவு, அதன் சரியான முடிவு, அதன் சரியான வளர்ச்சி எல்லாம் அவரே.

இந்து மதம் இரு பாகங்களாக பிரிந்து உள்ளது. ஒன்று கர்ம காண்டம், மற்றொன்று ஞான காண்டம். ஞான காண்டத்தைத் துறவிகள் சிறப்பாகக் கற்கின்றனர். இதில் ஜாதி கிடையாது. மிக உயர்ந்த ஜாதியைச் சேர்ந்தவரும் மிகத் தாழ்ந்த ஜாதியில் பிறந்தவரும் துறவியாகலாம். அப்போது அந்த இரண்டு ஜாதிகளும் சமமாகி விடுகின்றன.

மதத்திற்கு ஜாதி இல்லை. ஜாதி என்பது வெறும் சமுதாய ஏற்பாடு. சாக்கிய முனிவரே ஒரு துறவி தான். வேதங்களில் மறைந்து கிடந்த உண்மைகளை வெளிக்கொணர்ந்து அவற்றை உலகம் முழுவதற்கும் தாராள மனத்துடன் பரவச் செய்த பெருமைக்கு உரியவர் அவர். உலகத்திலேயே முதன்முதலாக சமயப் பிரார்த்தனை செயற்படுத்தியவர், ஏன், மத மாற்றம் என்ற கருத்தை உருவாக்கியவரே அவர்தான்.

எல்லோரிடமும், குறிப்பாக, பாமரர்களிடமும் ஏழை எளியவர்களிடமும், ஆச்சரியப்படும் வகையில் பரிவு காட்டிய பெரும் புகழுக்கு உரியவர் அவர். அவரது சீடர்களுள் சிலர் பிராமணர்கள். புத்தர் உபதேசம் செய்த காலத்தில், சமஸ்கிருதம் பேச்சு மொழியாக இல்லை. பண்டிதர்களின் நூல்களில் மட்டுமே அந்த மொழி இருந்தது. புத்தரின் பிராமணச் சீடர்களில் சிலர் அவரது உபதேசங்களைச் சமஸ்கிருதத்தில் மொழி பெயர்க்க விரும்பினர். அதற்கு அவர், "நான் ஏழைகளுக்காக வாழ்பவன், என்னை மக்களின் மொழியிலேயே பேச விட்டு விடுங்கள்" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டார். அதனால் தான் இன்றளவும் அவரது போதனைகளில் பெரும்பகுதி, அந்நாளைய பேச்சு மொழியிலேயே உள்ளது.

தத்துவ சாஸ்திரத்தின் நிலை என்னவாகவும் இருக்கட்டும், மெய்ஞான நிலை என்னவாகவும் இருக்கட்டும், உலகத்தில் மரணம் என்ற ஒன்று உள்ளவரையில் மனித இதயத்தில் பலவீனம் என்பது இருக்கும் வரையில், மனிதனின் பலவீனம் காரணமாக, அவன் இதயத்திலிருந்து எழும் கூக்குரல் இருக்கும் வரை கடவுள் மீது நம்பிக்கை இருந்தே தீரும்.

தத்துவ சாஸ்திரத்தைப் பொறுத்தவரை, புத்த தேவரின் சீடர்கள் நிலையான மலை போன்ற வேதங்களோடு மோதிப் பார்த்தார்கள். ஆனால் அவற்றை அழிக்க முடியவில்லை. மற்றொரு புறம் அவர்கள் ஆண், பெண் அனைவரும் பாசத்தோடு பற்றிக் கொண்டு இருந்த அழிவற்ற இறைவனை நாட்டினின்று எடுத்துச் சென்று விட்டார்கள். அதன் பயன், பௌத்தமதம் இந்தியாவில் இயற்கை மரணம் எய்தியது. அது பிறந்த நாட்டிலேயே, பௌத்தன் என்று கூறிக்கொள்ள ஒருவர் கூட இன்று இல்லை.

அதே வேளையில், பிராமண சமுதாயத்திற்குச் சில இழப்புக்கள் ஏற்பட்டன. சீர்திருத்தும் ஆர்வம், எல்லாரிடமும் வியக்கத்தக்க வகையில் பரிவும் இரக்கமும் காட்டல், பக்குவமாய் மாற்றியமைக்கும் இங்கிதப்பாங்கு முதலிய பௌத்தப் பண்புகளைப் பிராமண சமுதாயம் இழந்தது. இந்தப் பண்புகள் தாம் இந்தியாவைப் பெருமையுறச் செய்திருந்தது. அந்நாளைய இந்தியாவைப்பற்றி, ஒரு கிரேக்க வரலாற்று ஆசிரியர், பொய் சொல்லும் இந்துவையோ, கற்பிழந்த இந்துப் பெண்ணையோ, நான் பார்க்கவில்லை" என்று கூறுகிறார்:

புத்த மதமின்றி இந்து மதம் வாழமுடியாது. அவ்வாறே இந்து மதமின்றி புத்த மதமும் வாழ முடியாது. பிரிவின் காரணமாக என்ன நேர்ந்தது என்று பாருங்கள்! பிராமணர்களின் நுண்ணறிவும் தத்துவ ஞானமுமின்றி பௌத்தர்கள் நிலைத்து வாழ முடியாது. பௌத்தர்களின் இதயமின்றி பிராமணர்களும் வாழ முடியாது. பௌத்தர்களும் பிராமணர்களும் பிரிந்தது தான் இந்தியாவின் வீழ்ச்சிக்குக் காரணம். அதனால் தான் இந்தியா முப்பது கோடி பிச்சைக்காரர்களின் இருப்பிடமாகிவிட்டது. கடந்த ஆயிரம் ஆண்டுகளாக நாடு பிடிப்பவர்களின் அடிமையாக இருக்கிறது. ஆகவே பிராமணனின் அற்புதமான நுண்ணறிவையும், புத்தரின் இதயம், உயர்ந்த உள்ளம், வியப்பிற்கு உரிய மனிதாபிமானம் இவற்றையும் ஒன்று சேர்ப்போமாக.

Find your Dream Home with



- Residential
- Commercial
- Downtown Condos
- Investment Properties
- Lands for Sale

Call for Free Home Evaluation

HomeLife/Future

Realty Inc., Brokerage*
Suite 205, 7 Eastvlae Dr. Markham, ON. L3S 4N8
Tel : 905-201-9977 Fax : 905-201-9229
Independently Owned and Operated

Raj Nadarajah

Nagendrarajah
Sales Representative

416-333-6115
nanohomes@gmail.com





Real Estate
Business and Commercial
Immigration
Family Matter
Wills and Estate
And Notary Services

கனேடியத் தமிழ்ச் சட்டத்தரணி

The Law Office of Martinus Raphael Maharaja

GTA Square 5215, Finch Ave. East, Suite 219, Troronto, ON. M1S 0C2
Tel: 4168477077 Fax: 4168477088 email: info@maharajalaw.com

சீதக்காதி: இறந்தும் கொடை கொடுத்தார்

சீதக்காதி அவர்கள் பதினேழாம் நூற்றாண்டில் தென் தமிழ் நாட்டில் வாழ்ந்த புகழ் பெற்ற வள்ளலாவார். இவர் இயற்பெயர் 'ஷைகு அப்துல் காதிறு மரக்காயர்' என்பதாகும். இவர் 'ஷெய்க் அப்தல் காதர்' என்றும் அழைக்கப்பட்டார்.

இவர் பிறந்து வளர்ந்த ஊர் பற்றிப் பல்வேறு கருத்துக்கள் நிலவுகின்றன. அவர் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தது கீழக்கரை என்றும், காயல்பட்டினம் என்றும் இருவேறு கருத்துக்கள் பேசப்படுகின்றன. காயல் என்ற பெயரில் பழைய காயல், புன்னைக் காயல், கீழக்கரை, காயல் பட்டினம் என்ற நான்கு ஊர்கள் உண்டு.

இவர் வாழ்ந்த காலம் பதினேழாம் நூற்றாண்டின் பிற்பகுதி. கி.பி. 1650-1720 என்பர். சீதக்காதி அவர்கள் ஒரு தமிழர். இஸ்லாம் சமயத்தவர். புகழ் பெற்ற வள்ளல் இந்து முஸ்லிம் என்ற வேற்றுமை பாராது அனைவரையும் சமமாக கருதி ஆதரித்தவர். சீதக்காதி பெருமகனார் வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த இஸ்லாமியப் பெரியார் 'சதகத்துல்லா வலி' ஆவார். இஸ்லாமியப் பேரறிஞராகிய இவர் மார்க்கக் கல்வியைப் பரவச் செய்தவர். இவர் சீதக்காதியின் நண்பரும் குருவும் ஆவார்.

இராமநாதபுரத்தை ஆண்ட சேதுபதி மகாராஜா இவரின் நெருங்கிய நண்பர். சேதுபதிக்குச் சீதக்காதி அவர்கள் மதியுரை அமைச்சர் போன்று விளங்கினார். சேதுபதி அவர்களின் இயற்பெயர் 'விசய ரகுநாத் தேவர்' என்பதாகும். இவர் 1792-ஆம் ஆண்டில் மதுரையின் கீழ் உள்ள தொடர்பை துண்டித்துக் கொண்டு தனியாட்சி நடத்தத் தொடங்கினார். அப்பொழுது பாதுகாப்பிற்காக இராமநாதபுரக் கோட்டையும் அரண்மனையும் புதிதாக விரிவாக்கிப் பெரும் பாதுகாப்புடன் கட்டப்பட்டன. அதற்குப் பொன்னும் பொருளும் கொடுத்து உதவியவர் சீதக்காதி என்பர். அவர் சேதுபதி மகாராஜாவின் நிதி அமைச்சராகப் பணியாற்றியபோது ராமேஸ்வரம் உத்திரகோச மங்கை கோவில்கள் கட்டப்பட்டன என்பது இவரது நேயத்திற்கு ஒரு சான்று.

சேதுபதி சீதக்காதியை உரிமை பாராட்டி அவருக்கு 'விசயரகுநாதப் பெரிய தம்பி' எனத் தன் பெயரைச் சூட்டி மகிழ்ந்தார். அக்காலத்தே டில்லியை ஆண்ட முகலாயப் பேரரசர் அவுரங்கசீப் சீதக்காதியின்பால் பெரு மதிப்புக் கொண்டவர். சீதக்காதியை வங்காளத்தின் கலீபாவாக நியமித்தார். சீதக்காதியும் அப்பதவியை ஏற்றுக் கொண்டார். சிறிது காலத்திற்குப் பின் தாய் நாடு திரும்பினார்.

தன் செல்வத்தினை அனைவருக்கும் வழங்கி எளியோருக்கு எவ்வித தடையும் இல்லாமல் உணவு வழங்கி உதவியவர் வள்ளல் சீதக்காதி. இவரின் மகள்வழிச் சந்ததியார் இன்னும் தமிழகத்தில் கீழக்கரையில் வாழ்ந்து வருவதாகக் கூறப்படுகிறது. அவரின் மத வேறுபாடற்ற மனித நேயம் இன்றைய உலகில் அனைவரும் கைக்கொள்ள வேண்டிய ஒன்று. மனித நேயத்துடன் பிறருக்கு உதவிய வாழ்வு அவர் வாழ்வு.

வள்ளல்த் தன்மை

நபிகள் நாயக மான்மியத்தைச் 'சீறாப்புராணம்' மூலமாக உலகிற்குப் பரப்பப் பொருள் வளம்மிக்க சீதக்காதி பெரிதும் உதவினார்.

ஆனால் சீறாப்புராணத்தில் அவர் பற்றிக் குறிப்பிடப்பட வில்லை என்பது குறித்துத் தமிழ் இலக்கிய உலகில் பல்வேறு விவாதங்கள் எழுந்ததுண்டு. "இறந்தும் கொடை கொடுத்தார் சீதக்காதி" என்று இன்றும் தமிழ் உலகில் வழங்கிவரும் முதுமொழி ஒன்றே அவரின் வள்ளல் தன்மையை உலகிற்குப் பறைசாற்றும். இவரின் சிறப்பே வறுமையில் வாடுவோர் ஏழைகள் கல்விமான்கள் புலவர்கள் பாமரர் போன்ற அனைவருக்கும் சாதி மதம் இனம் பாராது வந்தோர்க்கு எல்லாம் இல்லையென்று இல்லாமல் வாரி வாரி வழங்கியமையே. அவர் காலத்தில் மிகப்பெரும் பஞ்சமொன்று வந்தது. அந் நேரத்தில் சகலருக்கும் உதவியாவர் இவர்.

காயல் நகருக்கு ஒரு சமயம் சீதக்காதி அவர்கள் சென்றபோது அங்கு வசிக்கும் வறியவர் ஒருவர் தமது மகளின் திருமணத்திற்காக வள்ளல் பெருமானாரிடம் உதவி கேட்டார். உடன் தரவிழைந்த வள்ளலிடம் தற்போது வேண்டாம் என மறுத்து தன் மகளின் திருமணம் முடிவு செய்தபின் தந்தால் போதும் எனக் கேட்க அவ்வாறே தருவதாக வள்ளல் மறுமொழி பகின்று ஊர் திரும்பினார். சில காலம் கழித்து வள்ளல் நோய்வாய்ப்பட்டு இயற்கை எய்தினார். ஊர் மக்கள் அனைவரும் அஞ்சலி செலுத்தி அவரது திருவுடலைப் பள்ளி வாடியில் அடக்கம் செய்து திரும்பும் வேளையில் தமது மகளின் திருமணத்திற்காக வள்ளல் பெருமானாரிடம் உதவி கேட்ட வறியவர் உதவிபெற சீதக்காதியை நாடி கீழைநகர் வந்து சேர்ந்தார்.





வள்ளல் வீடு கண்டு சேதி அறிந்த வறியவர் மனம் மிக வருநதி குறைந்தபட்சம் வள்ளல் அடக்கம் செய்த இடம் சென்று அவருக்கு அஞ்சலி செலுத்துவோம் எனப் பள்ளிவாடி விரைந்தார். அடக்கம் செய்த இடம் கண்டு கண்ணீரோடு துவாசெய்யும்போதிலே அடக்கம் செய்த மண்ணிலிருந்து புதைக்கப்பட்ட வள்ளல் பெருமானாரின் வலதுகரம் வெளிவந்தது. அதில் முத்து பதிக்கப்பட்ட மோதிரம் ஒன்று இருக்கக் கண்ட பெரியோர்கள் தாம் கொடுத்த வாக்கைக் காப்பாற்ற இறந்தும் கொடை கொடுத்த சீதக்காதி புகழ் வாழ்க எனக் கூறி அந்த மோதிரத்தை எடுத்து வறியவருக்குக் கொடுத்தனர் எனச் சீதக்காதி பெருமானார் வரலாறு கூறுகிறது. அடக்கம் செய்யப்பட்ட இடத்தில் மோதிரம் காணப்பட்டிருக்கலாம் இறந்தவரது கை வெளியில் வந்தது அதில் மோதிரம் இருந்தது என்பது வள்ளல் தன்மையை கூறுவதற்காக இருக்கலாம் இறந்தும் கொடை கொடுத்த சீதக்காதி பெருமானார் அனைத்து மக்களின் மனதில் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டேயிருப்பார். அதனால் இப்பெருமானார் இறந்தும் இறவாமையை அடைந்துள்ளார்.





தகவல் துளி

SMS என்று Short ஆக அழைக்கப்படும் Short Messaging Service ன் தந்தை என அழைக்கப்பட்ட Finland ஐச் சேர்ந்த Matti Makkonen சுகயீனம் காரணமாக தனது 63வது வயதில் அண்மையில் காலமானார்.

இவரது சிந்தனையில் உதித்த இந்தச் சேவை 1994ம் ஆண்டு Nokia 2010 இரக கைத்தொலைபேசியில் முதன்முதலில் அறிமுகப்படுத்தப்பட்டது.




P S RENOVATION
MOEN
Buy it for looks. Buy it for life.®
DELTA
see what Delta can do
Touch,O® Technology
RE-MODELING, RE-FACING
RE-DESIGN, FLOORING &
BASEMENT FINISHING
அனைத்து விதமான வீட்டுதிருத்த வேலைகளுக்கும், தரம் வாய்ந்த சமையலறை,
குளியலறை உபகரணங்களைப் பொருத்துவதற்கும் தள வேலைகளுக்கும்
CALL FOR FREE ESTIMATE
THANUSAN:
647-996-6491
faucets from $100 installed.


IATA
ATAC
tico.ca
Travel Industry Council of Ontario
JST
JET SPEED TRAVELS
TEL - 416-609-0544
FAX - 416-332-0082
TOLL FREE 1-877-337-7733
All of your travel arrangements will be done by our travel experts with over 23 years experience.
We are the consolidators with major airlines such as Srilankan Airlines, Qatar Airways, Lufthansa, Etihad Airways and Air Canada
WE SPECIALIZE IN - •Air Tickets •Tour Packages •Cruise •Car Rentals •Travel Insurance
5800 SHEPPARD AVE EAST - SUIT #12 SCAR-ONT M1B 5J7
www.jetspeedtravels.com | email: inq@jetspeedtravels.com

ஆத்ம நிவேதனம்

பூமியைப் பிளந்துயர்ந்த விஸ்வரூபியாக நிமிர்ந்து நிறகும் அந்தக் கோபுரத்தோடு சேர்ந்து அக் குக்கிராமமும் உயர்ந்துவிட்டது என்ற பெருமிதத்தில் தங்கமுலாமிட்ட கோபுரக்கலசம் உச்சி வெயிலில் மின்னிச்சிரித்தது.

ஸ்தலபுராணமோ, கர்ண பரம்பரைக் கதைகளோ, எதுவுமற்ற அந்தக் கீற்றுக் கொட்டில் கோவிலுக்கு இவ்வளவு கீர்த்தி பெருகும் என்று அந்தக் கோவிலில் மூலஸ் தானத்தில் அமர்ந்தபடி கிராமத்தின் உயிர்த் துடிப்புக்களை, ஆட்சி செலுத்தும் அம்பிகையைத் தவிர யாருக்குத் தெரிந்திருக்கும்.

எப்போதோ, யாரோ, எந்த நம்பிக்கை யுடன் இந்த இடத்தில் இப்படி ஒரு விக்கிரகத்தை வைத்து பூஜிக்க ஆரம்பித்தானோ. அந்த ஊர் பேர் தெரியாத மனிதனின் நம்பிக்கையின் உறுதிதான் இந்த அமபிகையின் அருள் ஊற்றைச் சுரக்கச் செய்திருக்கவேண்டும். இல்லாவிட்டால் ஆதிமூலமறியாத இந்த ஆலயத்து அம்மனை இந்தக் கிராம மக்கள் ஆக்கிரமித்திருக்க முடியாது.

தினமும், ஒவ்வாரு அணுவினாடியும் 'அம்மாளாச்சி' தாயே என்ற இடைவிடாத ஆத்மசுருதியுடன் எழும் ஒலி கிராமத்தில் யாராவது ஒரு சீவனால் உச்சரிக்கப்பட்டுக் கொண்டே இருக்குமளவிற்கு அவளின் ஆட்சி வியாபகமாகி இருந்தது நிதர்சன மான உண்மையே.

அதற்கு காரணம் அம்பிகையின் அருள் மட்டுமா? ஆலயத்தின் தெற்கு வீதியில் உயர்ந்த மண்ணால் கட்டிய, பதிந்த கூரை வீட்டு அழகாக மெழுகிய திண்ணையில் ஒருகாவி நாலுமுழத்துண்டு விரித்துப் போட்டு பெரும்பாலான நேரங்களிலெல் லாம் அமைதியாக படுத்தபடி கண்களை மூடினாற் போல தவமியற்றும் பாவனையில் ஏதேதோ மந்திரங்களை உச்சாடனம் செய்தபடியோ, அல்லது தன் வெண்கலநாதக் குரலில் அபிராமி அந்தாதியைப் பாடியபடி அந்த அயலையே அருளிசை வெள்ளத்தில் மிதக்கவிட்டபடியிருக்கும் குகசாமிக் குருக்களும் தான் காரணம், என்பதை ஊரார் அறிந்திருந்தார்களோ என்னவோ அம்பிகை அறிந்திருக்காமல் விடுவாளா என்ன?

மணியே மணியின் ஒளியே ஒளிரும் மணிபுனைந்த

அணியே அணியும் அணிக்கழகே அணுகாதவர்க்குப்

பிணியே பிணிக்கு மருந்தே அமரர் பெருவிருந்தே

பணியேன் ஒருவரை நின்பத்மபாதம் பணிந்த பின்பே...

உற்சாகமாகக் கண்களை மூடியபடி உரத்த குரலில் பாடியபடி குகசாமிக்குருக்களை அவரது மூத்தமகன் ஜெகதாவின் குரல் விழிக்க வைத்தது.

“அப்பா... எழும்புங்கோ... ரத்தினம் வந்திருக்கார்-

எழுந்து சப்பணம் கொட்டி திண்ணை யில் இருந்தபடியே 'வா ரத்தினம் உட்கார்... என்ன இந்த வெய்யில்லை...' என்றார்.

“சாமி... கோபிக்கப்படாது நிம்மதியாகப் பாடிக் கொண்டிருந்தீர்கள்... குழப்பீட்டன்... என்று குழைந்தான் ரத்தினம்.

“அதிலொண்ணுமில்லை..... இப்பதான் ... மத்தியா னப் பூஜையை முடித்துவிட்டு சாப்பிட்டு விட்டு வந்து படுத்தேன்... அதுசரி நீ வந்த விசயம் என்ன”

ரத்தினம் ஒருவினாடி ஐயரை உற்று நோக்கிவிட்டு, பின்திரும்பி கண்களைக் குறுக்கறுப்பது போன்று நெடுத்திருக்கும் கோபுரத்தைப் பார்த்தான்.

சிறிது நேர மௌனத்தின்பின் சொன்னான்.

“சாமி... கோபுரமில்லாமல் இத்தனை காலமும் மொட்டையாய் கிடந்ததே இந்தக் கோயில்... அப்போ யாராவது இப்படி ஒரு கோபுரம் கட்டணும் என்றோ, கட்டப்படும் என்றோ நினைத்தார்களா? இண்டைக்கு இந்தக் கோபுரம் இல்லாமல் இந்தக்கிராமத்தை நம்மால கற்பனை செய்து பார்க்கவே வெறுமையாக இருக்கிறது... 'ஆனா' என ரத்தினம் ஒருகணம் நிறுத்தினான்.



ஆமா... நீ எதுக்கு இதெல்லாம் சொல்லுறே” என்றவர் வினாக்குறியுடன் நோக்கினார்.

இல்லைசாமி.... இந்தகோவில் இந்தளவிற்கு பெரிசா வளர்ந்த விதத்தை நானும் இந்த நாற்பது வருஷமா பார்த்துக் கொண்டே தான் வந்திருக்கிறன்... கொட்டிலாக் கிடந்த இந்தக் கோவில் கோபுரமும் கலசமுமாய் கும்பாபிஷேகமும் திருவிழாவுமாய் என்ன வாய் உசந்திருக்கு... எனக்கு நல்லா ஞாபக மிருக்கு சாமி எங்கப்பாவோட நாதஸ்வரமும் கையுமாக இந்தக் கோவிலுக்கு நான் வாசிக்க வந்தபோது வயது பதினைந்து தான் இருக்கும் இப்போ எனக்கு ஐம்பத்தைஞ்சு... இந்த கோவிலை இந்தளவுக்கு சிறப்பாக்க பட்டபாடு, உழைப்பு அத்தனையும் எனக்குத் தெரியும்...”

குருக்கள் மௌனமாய் அவனையே பார்வையால் ஊடுருவிய வண்ணம் இருந்தார். ரத்தினமே தொடர்ந்தான்.

“சாமி எல்லாத்தையும் ஒண்டிக்கட்டையாத்தானே செய்து முடிச்சீங்க... இவ்வளவு காலமும் இதொன்றிலுமே... பாடுபடாமல் இருந்தவங்கள் எல்லாம் இப்போ கோயில்லே அக்கறை கொள்ளத் துவங்கீட்டாங்கள்... கோபுரம் கண்ணைக்குத்துது... மனசுபொறுக்காத பாவிகள்... என்றான் ரத்தினம் படபடப்புடன்.

“ரத்தினம் நீ என்ன சொல்லுறே... ஒண்டும் புரியவில்லையே “சாமி... எப்பிடிச் சொல்லுறதென்றே தெரியேல்லை... நேற்று திடீரென்று நம்ம சனசமூக நிலையத்திலே கிராமசபைத் தலைவர் சின்னத்துரை ஒருதிட்டம் போட்டு கோவில் நிர்வாகத்தை பொறுப்பேற்க ஒரு குழுவொன்றை நியமித்திருக்கிறார்களாம்... சாமி... உங்க இஷ்டப்படி எல்லாம் செய்யிறத்தாலே கோவில் ஒழுங்காக இல்லையாம்... இன் னும் ஏதேதோ பேசினாங்களாம் நாக்கிலே நரம்பில்லாத நாயப்பிறவி கள் என்று படபடப்புடன் பேசினான் ரத்தினம்.

“ரத்தினம்... ஏன் படபடக்கிறே... இப்பவாவது அவங்களுக்கு கோயில்லை அக் கறை வந்ததே... அம்பிகையின் அருள்தான் ... எனக்கு வயசாயிற்று... எத்தனை நாளைக்குத்தான் என்னாலை ஏலும்... எல்லாம் நன்மைக்குத்தான்... நம்ம கடமையை நாம செய்கின்றோமே... அவங்க கடமையை அவங்க செய்யுறதைத் தடுக்க நாம யார்.. என்று அமைதியாகச் சொல்லியபடி கோபுரத்தின் மீதுவைத்த பார்வையை இமைக்காதிருந்தார் ஐயர். சாமி ஒண்ணுமே தெரியாதவர் மாதிரிப்பேசுறிங் களே...அவங்க எப்படிப்பட்ட வங்க என்று தெரியும் தானே சாமி... அவங்க நுழைஞ்சு எந்த இடம் உருப்பட்டிருக்கு சாமி... என் றான் ரத்தினம்.

“எல்லாம் அம்பிகை பார்த்துக் கொள்வாள்... நீபேசாமை இரு ரத்தினம் அபிதா... வெற்றிலை கொண்டாம்மா.. என்று சின்ன மகளை அழைத்தபடி கண்களை மூடி மௌனமானார் குருக்கள். ரத்தினம் அமைதியானான்.

“லஷ்மி ... கேட்டியா... சேதியை நம்ம கோயிலுக்கு ஒரு தர்மகர்த்தா சபை தெரிஞ்சிருக்காங்களாம்...யாரு தெரியுமா தலைவர் நம்ம சின்னத்துரையர் தான்... ரத்தினம் சொன்னான்...” கூடத்தில் ஈஸிச் சேரில் படுத்தபடி வெற்றிலை குதப்பியபடியே தம்மனைவிக்குச் சொல்லிக் கொண்டிருந் தார் குருக்கள்...

ஆமா...உங்களுக்கேன் அவங்க கூட்டத் துக்குச் சொல்லேல்லை...

நம்ம நிர்வாகத்திலை ஒழுங்கில்லையாம்... அதுதான்..... என்று சொல்லும்போது அவருள் ஏதோ அடைத்துக் கொண்டது.

லஷ்மி மௌனமாகவே இருந்தாள்.

“ நாம நம்ம மனசாட்சிக்குத் திருப்தியா அம்பாளுக்கு ஒருகுறைவுமில்லாம நிறைவாத் தானே எல்லாம் செய்துவாறம். அவ என்ன நினைச்சிருக்காவோ யாருக்குத் தெரியும்... லஷ்மி... கோபுரம் கட்டி... கும்பாபிஷேகம் செய்த பிறகு மனசே நிறைஞ்ச மாதிரி.

இதோ இங்கே இப்படியே படுத்தபடி அதோ அந்தக் கோபுரத்தைப் பார்த்துக்கொண்டு நிம்மதியா இருந்திடலாம் போலை இருக்கு... நமக்குப் பிறகு இதையெல்லாம் கவனிக்க நம்ம பையன்கள் இருந்தாலும் பர்வாயில்லை... அவங்க ரெண்டுபேருமே வேறே வேறே உத்தியோகத்திலே போயிட்டாங்க... நிர்வாகத்தை எல்லாம் ஊராக்கள் கவனிச்சுக்கொள்ளுறது நல்லதுதானே. ஏதோ நாம இருக்கும்வரையும் அம்பாளுக்கு பூப்போட்டு பூஜை வைக்கிறதுக்கு விதி இருந்தாப் போதும்.....

அவர் வார்த்தைகளில் அமைதியானாலும் மனதில் ஏதோ ஒரு அமைதியின்மை.

உங்க நிர்வாகம் ஒழுங்கில்லையாம் உங்க நிர்வாகம் ஒழுங்கில்லையாம் உங்க... நிர்வாகம்....

ஒரு கீற்றுக் கொட்டில் அதன் கீழ் ஒரு சிறு அம்பாள் சிலை, அதனருகில் ஒரு திரிசூலம். முதன் முதல் ஐயர் இந்தக் கோவிலுக்கு பூஜைக்காக, நாற்பது வருடங்களின் முன்னர் காவடி எடுத்த போது கண்ட தரிசனம் இதுதான்

சின்னஞ்சிறு கோவில். ஒருநேர காலை பூஜை மட்டும். வீதிவழி போவோர் வருவோர் நெஞ்சில்தொட்டு நினைவில் நிறைத்துவிட்டு போவதைவிட எப்போதாவது இருந்திட்டு ஓரிருவர் அர்ச்சனை பொங்கல் அப்படியென்று வருபவரைத்தவிர கிராமத்து குஞ்சு குறுமான்கள் கொஞ்சம் தான் அந்தக் கோவில் நிரந்தர அடியார்கள், பக்தர்கள்.

கோவிலால் வருமானம் எதுவுமில்லை.

திவசம் குறைவு, ஊர்ப்புரோகிதம் இப்படி அப்படியென்று வரும்.

புரட்டாதி மாத மாளயபட்சம் தொடங்கினால் வருடத்திற்கொருமுறை அவரது குடும்பம் கொஞ்சம் தெம்பாக இருக்கும். இவைகளோடு ஜாதகம் பார்த்தல், பார்வை பார்த்தல் சாஸ்திரம் சொல்லல் அவரின் முயற்சி அவர் குடும்பத்தைமட்டும் காப்பாற்ற வில்லை. அம்பாளின் காலம் தவறாத பூஜைக் கும் உதவிவந்தது.

ஐயரின் முயற்சியும் முகராசியும் அம்பாளின் அனுக்கிரகமும் கூட ஆலயம் வளர ஆரம்பித்தது.

கோவில் பணத்தை நம்பி அவர் குடும்பம் வாழவில்லை. முாறாக அவர் குடும்பத்தவரின் உழைப்பு கோவிலை வளரவைத்தது.

ஒருகாலப் பூஜை, ஆறுகாலப் பூஜை ஆகியது. கொட்டில் கோவில் கொஞ்சம் கொஞ்சமாக அர்த்த மண்டபம், பரிவார மூர்த்திகள், கொடி ஸ்தம்பம், மகேஸ்வர மண்டபம், வாகனங்கள், திருவிழா என்று வளர்ந்தது..

குலாசாரமும், கலாசாரமும் கெட்டு ஊரே நாத்திக வாதத்தில் மயங்கி, வைதீகக் கிரியைகள் மதிப்பிழந்து போய்க் கொண்டிருக்கும் சமூகங்களின் மத்தியில் அந்த வளர்ச்சி பிரமிக்க வைப்பதாகவே இருந்தது.

நாற்பது வருடக் காலச்சக்கரத்தின் சுழற்சி.

ஐயரின் அயராத உழைப்பு இதோ கம்பீரமாக ராஜ கோபுரமாக நிமிர்ந்து நிற்கிறது.

ஐயரின் உயர்ந்த திண்ணையும் பதிந்த கூரையுமுள்ள ஓலைக்கொட்டிலைத்தவிர கிராமம் நாகரீகமாகிவிட்டது.

ஐயர் அந்தத்திண்ணையில் துண்டை விரித்தே கிடக்கிறார்.

வாய் ஜெபம் செய்தபடியே ஸ்லோகங்களை முணுமுணுக்கிறது, இப்போதெல்லாம் பக்தர்கள் திரளாக வருகிறார்கள். கோவில் சுற்றாடல் கலகலப்பாகி வருகிறது. பக்தி வளர்ந்து விட்டதா? இல்லை ...
பக்தி நாகரீகமாகிவிட்டது.
எல்லாம் அம்பாளின்
விளையாட்டு'
இது ஐயரின்
தீர்மானம்.

'அம்பிகை... தாயே...' இவ்வளவு நேரமாக கோபுரத்தை வைத்த கண் வாங்காது பார்த்த பார்வையுடன் கோவிலின் கடந்தகால வரலாற்றில் தோய்ந்தெழுந்த பிரமிப்பில் இத்தனையும் அவள் அருளில்லாமல் நிறைவேறியிருக்குமா என்ன ? என்ற திவ்ய நினைவு மனத்தில் எழ ... பனிக்கும் கண்களின் நீர் கோபுரத்தைத் திரையிட அம்பிகையின் நாமத்தை உதடுகள் மெய் சிலிர்த்து முணுமுணுக்க... அந்தத் திண்ணையில் சிலையாக இருக்கிறார் குருக்கள்.

"என்னங்கோ... சாயங்காலப் பூஜைக்கு நேரமா கல்லியோ...? இன்னிக்கு வெள்ளிக்கிழமையல்லவோ... எழுந்திருங்கோ... பூஜை முடிந்ததும் அப்படியே நம்ம சர்மா கிட்ட மறந்திடாமப் போய் நம்ம ஜெகதாவின் கல்யாண விஷயமாய் பேசுங்கோ அவளுக்கு வயசாகிக்கிட்டே போகுது..." என்ற லஷ்மி பதிலுக்குக்கூடக் காத்திராமல் கோவில் அலுவல்களைக் கவனிக்க உள்ளே சென்று விட் டாள்.

ஒரு அம்பாளின் வளர்ச்சியே தன் ஜீவத் துடிப்பாக நினைத்து உழைத்த ஐயருக்கு தன்வீட்டுக்குள்ளேயே மூன்று அம்பிகைகள் மளமளவென்று வளர்ந்து வருவதை உணர நேரங் கிடைக்கவில்லை. ஆயினும் அந்த நினைவு லஷ்மி சொல்லிய இந்த ஊகத்தை தவிர, அதற்கு அம்பாளே வழி காட்டவேண்டும். என்று பழியை அவள் தலையில் போட்டுவிட்டுத் துண்டை உதறியபடி எழுந்தார்.

சாயங்காலப் பூஜை.

ஆலயம் நிரம்பி வழிகிறது. அர்ச்சனை ஆராதனைகள், கற்பூரமணம் மணி யோசை இவற்றைமீறிய ஐயரின் கணீரென்ற மந்திர உச்சாடனங்கள்...

"ஆத்தாளை எங்கள் அபிராமவல்லியை அண்டம் அண்டம் எல்லாம் பூத்தாளை ..." யாரோ ஒருபெண் அபிராமி அந்தாததியை மன முருகிப் பாடிக் கொண்டிருந்தாள்.

பூஜை ஆயிற்று.

பூஜை முடிய ஆறுதலாக வெளிப் பிரகாரத்தில் வந்து சற்று ஓய்வாக தூணில் சாய்ந்தபடி அமர்ந்திருந்தார் ஐயர்.



அவர் மனம் இனம்புரியாத என்றுமில்லாத திருப்தியும் திருப்தியற்றதுமான நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தது.

"ஐயா ... உங்களோடு ... ஒரு வாாத்தை "குரல் கேட்டுத் திடுக்குற்று நிமிர்ந்தார் ஐயர்.

சின்னத்துரையர், விதானையார், காசிப் பிள்ளை மாஸ்டர் மூவரும் நின்றார்கள். ஒருகணம் ஏதோ நினைவில் திகைத்தாலும் மறுகணமே இருங்க... இருங்க என்று பவ்வியமாகச் சொல்லியபடி எழுந்து நின்று

"என்ன சமாச்சாரம்... சொல்லுங்க" என்றார் ஐயர்.

"ஐயா நாம ஒரு முக்கிய விசயமாகப் பேசவேணும்" விதானையார் ஆரம்பித்தார்.

சொல்லுங்க...

"இந்த ஊர் இருக்கே... ரொம்பப் பொல்லாதுங்க... வாய்க்கு வந்தபடி நரம்பில்லாத நாக்கால் எது வேணுமானாலும் சொல்லும்... இதோ பாருங்க நீங்க எவ்வளவு கஸ்டப் பட்டிருப்பீங்க... இந்தக் கோயிலை நல்லாக்க.... அப்ப இந்தச்சனம் ஏதாவதுசொல்லிச்சா... இந்த பாருங்க கோயில் நல்லா வந்ததும், வருமானத்தை நீங்க சுருட்டுரீங்களாம், அப்படி இப்படி என்று என்னென்னமோ பேசிறாங்க... எங்களாலை அதைக் கேட்டுக் கொண்டிருக்க முடியேல்லை.... ஐயா எங்களுக்குத் தெரியும் நீங்க எவ்வளவு தூய்மையானவங்க என்று... ஆனா.... விதானையார் இடைநிறுத்தினர்.

சின்னத்துரையர் தொடர்ந்தார் "அது தான் ஐயா நாங்க தர்மகத்தா சபை ஏற்படுத்தியிருக்கிறோம்.... இனிமேல் யாரும்...... எதுவும் பேசேலாது எல்லாப் பெரிய கோயிலிலையும் நடக்கிற மாதிரி நாமளும் ஒரு முறையை அநுசரிச்சா நல்லதுதானே.... நல்லது செய்து கெட்ட பெயர் வாங்குவதிலும் பார்க்க ஒருநியம முறையை நடைமுறைப் படுத்தினால் நல்லதுதானே...."

ஐயர் அமைதியாக இருந்தார் காசிப்பிள்ளை மாஸ்டர் சென்னார். "ஐயா... நாங்க நேற்று சங்கத்திலை ஒரு தீர்மானம் எடுத்திருக்கிறம்.... நம்ம "செயர்மென் ஐயர் தான் தலைவர். இப்படி ஒரு நிர்வாகசபை அமைப்பு இருந்தால் பாங்கிலை 'லோன' எடுக்கலாம். கோவிலுக்கு, கேணி, வீதித் திருத்தம் எல்லாம் செய்யலாம்... அதோட வாறதிங்கட் கிழமை அதாவது முதலாம் தேதியிலிருந்து கோவிலுக்கு 'ரிக்கற்' முறை கொண்டு வரப்போறம் கணக்கு வழக்கிற்கு கஸ்டம் இருக்காது மற்றது" என்று செல்லி இழுத்தார் மாஸ்டர்.

விதானையார் தொடர்ந்தார்

"மற்றது நீங்களும் எத்தனை காலத்துக்குத்தான் நிரந்தர வருமானம் இல்லாமல் அலையிறது... அதாலை உங்களுக்கும் இனி மாதா மாதம் 200 ரூபாய் சம்பளமாய்த் தந்திடலாம் என்றும் முடிவுசெய்துள்ளோம். விழாக்களுக்கும் பூஜைக்கும் பார்த்துபிறகு தீர்மானிப்பம் அவர்கள் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள்.

ஐயா என்ன பதில்பேசினாரோ அது அவருக்கே தெரியாது. அவர்கள் போனார்கள்.

அர்த்த சாம பூஜைக்காக இரவு 10 மணிக்கு அடிக்கும் மணியோசை அன்று கேட்கவேயில்லை.

"ஏனம்மா ஜெகதா... அப்பா என்ன செய்யிறார்... மணி அடிக்கேல்லையே பத்து மணி தாண்டிட்டுதே என்றாள் லக்ஷ்மி.

"அம்மா போய்பார்த்திட்டு வருவம்" என்றபடியே வெளியே இறங்கினாள் ஜெகதா. லக்ஷ்மி பின் தொடர்ந்தாள்.

கோயில் வெறுமையாய்க் கிடந்தது. மூலஸ்தானத்தில் அம்பாள் ஜோதீஸ்வரூபமாக காட்சி தந்தாள். கோயிலின் உள்ளே வந்த ஜெகதா தகப்பன் மூலஸ்தானத்து அம்பாள் சந்நிதியின் முன் நிற்கும் கோலத்தைக் கண்டதும் திகைத்துப்போய் "அம்மா இங்கை ஓடி ஓடிவாங்கோ... அப்பாவைப் பாருங்கோ" என்று கத்தினாள். லக்ஷ்மி உள்ளே சென்றதும் ஸ்தம்பித்து நின்றாள்.

அவர் அம்பாளோடு பேசிக் கொண்டே இருந்தார்.

"அம்மா... ஏனம்மா என்னை இப்படிச் சோதிக்கிறாய் இவ்வளவு காலமும் மற்றவன் கிட்டே கை நீட்டி சம்பளம் வாங்கியா உனக்கு பூஜை செய்தன்... இதென்னம்மா இதெல்லாம்... டிக்கெட்டாம் கியூவாம்..., இதல்லாம் உனக்கே பிடிக்கிறதா... இந்த நாற்பது வருசமும் இதெல்லாம் யாரம்மா பார்த்தாங்கள்... உனக்குமெனக்கும் உள்ள இந்தபாசம்... பணத்தாலானதா... இப்ப கணக்குப் பார்ப்பாங்களா தாயே இப்போ உன்னோடு உரிமைகொண்டாட வாறவங்களாலை எனக்கு உன்மீதுள்ள உரிமையைப் பறித்திட முடியுமா... முடி யாது... முடியவே முடியாது..." அவர் கத்திக் கொண்டே இருந்தார்.

அது கோவில் மண்டபம் பூராகவும் எதிரொலித்தது.

லக்ஷ்மியும் ஜெகதாவும் அவரை ஒரு மாதிரி சமாதானப்படுத்தி கோவிலைப் பூட்டி, வீட்டிற்குக் கூட்டிச் சென்றனர்.

வழிநெடுக அவர் ஏதேதோ புலம்பிய படியே சென்றார்.

மறுநாள் ...

மூடப்பட்டு நிசப்தமாக இருந்த அம்பாளின் கர்ப்பக்கிரகத்தில் அவள் காலடியில் வழமையாக இறைந்து கிடக்கும் மலர்கள் எதுவுமே கிடைக்கவில்லை

மாறாக, ஒருபுனிதமான ஆத்ம மலர் நிவேதனமாக அர்ச்சிக்கப்பட்டுக் கிடப்பதை அம்பாள் மட்டும் உணர்ந்துகொண்டாள்.



அந்த ஓவியம்

ஆங்காங்கே
வெண்பஞ்சுநிற
ஓவியங்கள்...
யானையாய்....
ஓடும் குதிரையாய்...
சிரிக்கும் குழந்தையாய்.....
"ஏன் தனிமையை
பலரும் கொடூரமான
தென்கிறார்கள்?
ஒருவேளை
ரசனையற்றவர்கள்
தான் அப்பிடிச்
சொல்கிறார்களோ?..."

-இரா. சிவசக்தி-

தனிமை என்பது கொடூரமானது என்று நண்பர்கள் பலரும் சொல்லக்கேட்டிருக்கிறான் மதி. ஆனால் மதிக்கு தனிமை தான் பிடித்திருந்தது. அதுதான் தேவையாயுமிருந்தது. அது அவனுக்கு ஆத்மார்த்தமான நட்பாகவும் இருந்தது.

கடந்த வருடத்தின் நடுப்பகுதியில் ஒரு நாள் அகிலனும் அவனும் உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

'தனிமை எவ்வளவு கொடுமையான தெண்டு உனக்கு தெரியுமா மச்சான்?....'

அகிலன் கேட்டபோது மதி அவனை ஆச்சரியமாய்ப் பார்த்தான்.

'என்னடா அப்பிடி என்னையே பாக்கிறாய்?....."

'போடா விசரா....'

மீளவும் மதி புன்னகைத்தான்.

இப்படித்தான் மதியின் மனைவி நிரோவும் பலதடவை அவனிடம் சொல்லுவாள்......

'என்னப்பா.... இப்பிடி தனிய இருக்க விசராயிருக்கு?....'

மதி எத்தனையோ நாட்கள் தனியாக இருந்திருக்கிறான்.

தனிமையை அவன் நேசித்திருக்கிறான்.

இப்போதெல்லாம் அவன் விரும்பிய தனிமை கிடைப்பது அரிதாகிவிட்டது. ஒருவிதத்தில் தனிமைக்காக அவன் தவமிருப்பதாக கூடச் சொல்லலாம்.

இன்று மதிக்கு தனிமை மிகமிகத் தேவைப்பட்டது. மனைவியும் பிள்ளைகளும் உறக்கத்தில் ஆழ்ந்துவிட்ட பிறகு மதி மெதுவாக முற்றத்துக்கு வந்தான்.

இருளையும் ஒளியையும் கலந்து வரையப்பட்ட ஓவியமாய் பூமி விரிந்து கிடந்தது. ஓவியமாகும் இயற்கையையும் இயற்கையாகும் ஓவியத்தையும் அவனுக்கு மிகவும் பிடிக்கும்.

மதி பாடசாலை நாட்களில் ஓவியத்தை ஒரு பாடமாகப் பயின்றிருக்கிறான். வர்ணங்களையும் அவற்றின் இயல்புகளையும் படித்திருக்கின்றான். வர்ணங்கள் மனிதமனங்களில் ஏற்படுத்தும் பரிவர்த்தனைகளை உணர்ந்திருக்கின்றான்.

ஒருநாள் தாத்தாவின் பழைய டிரங்குப் பெட்டியைத் திறந்து துப்பரவு செய்யப் பார்த்தபோது, பளிச்சென கண்களிற்பட்டது கல்கியின் "பொன்னியின் செல்வன்".

அதில் மதியை முதலில் ஈர்த்தது மணியம் செல்வனின் உயிர்த்துடிப்புள்ள ஓவியங்கள். அவரின் தூரிகை உயிர்ப்பித்த ஓவியங்கள்தான் மதியை ஓவியத்தை ரசிக்கும் உணர்வில் ஆழ்த்தியது.

ஓவியனாக வேண்டும் என்ற ஆசை அவனுக்கு இல்லாத போதும் சிறந்த சிறந்த ஓவியங்களை ரசிக்கும் பண்பை..... ஈர்ப்பை அவனுள் புகுத்தியது.

எப்போதாவது சிறுசிறு ஓவியங்களை மதி போட்டுப் பார்த்திருக்கிறான். அவனுடைய மனதுக்குள் எத்தனையோ ஓவியங்கள் பதிந்திருக்கின்றன.

வாசலில் அமர்ந்து வானத்தை அண்ணாந்து பார்த்தான்.

ஆங்காங்கே வெண்பஞ்சுநிற ஓவியங் கள்... யானையாய்.... ஓடும் குதிரை யாய்... சிரிக்கும் குழந்தையாய்.....

'ஏன் தனிமையை பலரும் கொடூரமானதென்கிறார்கள்? ஒருவேளை ரசனையற்றவர்கள்தான் அப்பிடிச் சொல்கிறார்களோ?...' என அவன் மனம் நினைத்தது.

அவனுக்கு சடாரென்று மனது வலித்தது.

அவன் காலையில் பத்திரிகை ஒன்றில்- கமரா ஓவியம் ஒன்றைப் பார்த்தான்.

அந்த ஓவியத்தை மதி பல தடைவை நேரே பார்த்திருக்கிறான். அதற்கு வயது பதினாலு அல்லது பதினைஞ்சு... இருக்கலாம் என்பது அவனின் கணிப்பு.

மணியம் செல்வனின் ஓவியத்தைப் போல அதுவும் உயிர்த்துடிப்பு மிக்கது.

குறுகிய நெற்றி, கூர்மையான மூக்கு, குவிந்த வாய், ஒல்லியான சிவந்த உடல், படபடக்கும் கண்கள்...... பெண்கள் கல்லூரியின் விஞ்ஞானக் கண்காட்சியின் போது அவன் பார்த்த ஓவியம் அது.

மின்மணி ஒன்று எப்படிச் செயற்படுகிறது?என்பதை தன் நீளவிரல்களாற் தொட்டுத்தொட்டு விளங்கமளித் துக்கொண்டிருந்தது அந்தப் பேசும் ஓவியம்.

எந்தவிளக்கத்தையும் செவியிலேற்றாமல் அந்த ஓவியத்தை இறைவன் சிருஷ்டித்த அந்த சின்னஞ்சிறு மலரை அவன் பார்த்துக்கொண்டிருந்தான்.

'என்னண்ணா? இந்த மின்மணி எப்படி செயற்படுது எண்டது உங்களுக்கு விளங்கேல்லையா?...திருப்பி இன்னுமொரு தடைவ சொல்லட்டா?....'

'எனக்கு விளங்கிட்டுது தங்கச்சி....'

'அப்ப... அங்கால போய் மற்ற விடயங்களைப் பாருங்கோ.....

மற்றவையும் இதைப் பார்க்கட்டும்....'

மதி நீண்ட நேரமாய் மின்மணிக்கு முன்னால் நின்றான். ஒருநாள் இரவு... வேலையால் வந்து சாப்பிட்டு ஆறுதலாக அமர்ந்து தொலைக்காட்சி ஒளிபரப்பைப் பார்த்தபோது, எதிர்பாராமல் அந்த ஓவியம் கவிதை படித்தது.

எதிர்பாராமல் அந்த ஓவியம் கவிதை படித்தது.

இப்படி எத்தனையோ தடவைகள்- அந்த ஓவியத்தைப் பார்த்து அவன் வியந்திருக்கிறான்

வள்ளுவன் சொன்னானே.... "மோப்பக்குழையும் அனிச்சம்" என்று... அந்த அனிச்சமாய் அவள் தெரிந்தாள்...

அவன் தன் சமநிலையைப் பாதித்த அவளைப்பற்றி விசாரித்து அறிந்தான் பெயர்- மைதிலி. வயது பதினாறு. சிறுவயதிலேயே தாயும் தந்தையும்

இறந்து விட்டனர்.... பெரியம்மாவின் சிறகில் வளரும் சிட்டுக்குருவி...

மதி தன் மனைவி நிரோவிடம் கூட அந்த ஓவியப்பெண்ணை கூறியிருக்கிறான். அவள் அதைப் பொருட்படுத்தவில்லை.அகிலனிடம் ஒரு தடவை கூறியபோது- அவன் மதியின் உணர்வுகளை வேறுவிதமாக்கி கொச்சைப்படுத்த முயன்றான்.

அதன்பிறகு அந்த ஓவியம் பற்றி அவன் யாருடனும் பேசுவதில்லை அந்த ஓவியப் பெண் எங்கேயானாலும் தன் மென்மை கெடாது இருக்கப் பிரார்த்தித்தான் அவன்.

இன்னொருநாள் பொதுப்பணி ஒன்றில் வீதி துப்பரவு செய்யும் பணியில் அவளைக்கண்டான் கையில் கூட்டுமாறு மனது நொந்தது.

'இது என் கடமை' என்றது அவ் ஓவியம்.

மௌனித்தான்.பலநாட்கள்.....

இன்று காலையில் அந்த ஓவியம் மறுபிரசுரமாகி யிருந்தது.

பத்திரிகைகளின் முன்பக்கத்தில்,

அவன் துடித்துப்போனான்.

அகிலன் செல்போனில் அழைத்தான்.'மதி... பேப்பர் பாத்தியா?...'

'ம்......'

'உன்ர ஓவியத்தைப் பார்த்தியா?......'

'ம்.....' சொல்லும் போதே அழுகை வெடித்தது.

குறுகிய நெற்றி, கூர்மையான மூக்கு, குவிந்த வாய், ஒல்லியான உடல், படபடக்கும் கண்கள், எல்லாமே சிதைக்கப்பட்டிருந்தன, அந்த ஓவியத்தில்.

மணியம் செல்வனின் உயிர்த்துடிப்புள்ள ஓவியம் போன்ற அவளின் உடல் சிதைந்து கிடந்தது.



எனக்கு மூன்று
வயதாயிருக்கும்
போது
நிறையப் பெண்கள்
என்னிடம் முத்தம் கேட்டு
நான் கொடுத்திருக்கிறேன்.
இப்போ வட்டி வேண்டாம்
முதலையாவது திருப்பிக்
கொடு என்று கேட்டால்
எவளும் திருப்பித் தருவதாக
இல்லை. நன்றி கெட்டவர்கள்.

அருமை.கொம்


Take the advantage of low inventory,
Call us for free market evaluation
வீடு வாங்க விற்க இலவச ஆலோசனைகளுக்கு
மோட்கேஜ் தேவைகளுக்கும்
நட்பான அனுபவமுள்ள எம்மை
நம்பிக்கையுடன் அழையுங்கள்
BAD CREDIT - NO CREDIT
NO PROBLEM
Executive Club Award
100% Club Award
Better Results! Better Life!
Thamil Suberamaniam
Sales Representative
416-358-6200
RE/MAX
Crossroads Realty Inc. Brokerage
1055 McNicoll Ave. Toronto, ON. M1W 3W6
Independently Owned and Operated.
Siva Sangarappillai
Broker
647-448-6464
www.thamilhome.com
www.sivashomes.com


இலங்கை இந்திய
உணவு வகைகளைப்
பெற்றுக்கொள்ள
Freshly Prepared
Sri Lankan and Indian Food
Exquisite
Unit #17,
2901, Markham Road
Scarborough, Ontario.
416-743-9191
VIMIKA TAKEOUT & CATERING

இந்த அந்தி மாலையைக்கூட......



இந்த அந்திமாலையைக்கூட நாம் இழந்துவிட்டோம்.
துயரஇரவு இவ்வுலகின்மீது கவிந்த போது
நாம் கையோடு கைகோத்துச் சென்றதை
யாரும் பார்க்கவில்லை.

தொலைதூர மலைமுகடுகளில் அஸ்தமனத்
திருவிழாவைச்
சாளரத்தின் வழியே நான் பார்த்திருக்கிறேன்.

சில சமயங்களில் ஒரு துண்டுச் சூரியன்
என் கைகளுக்கிடையே ஒரு நாணயத்தைப் போல்
சுடர் விட்டது.

என் துயரத்தைப் பற்றித்தான் நீ அறிவாயே?
அது என் ஆன்மாவை இறுகப் பற்றுகையில்
உன்னை நான் நினைத்துப்பார்த்தேன்.

அப்போது நீ எங்கே இருந்தாய்?
வேறு யார் உன்னோடு இருந்தது?
அவன் என்ன சொன்னான்?
துயருறும் போதும், நீ எங்கோ இருக்கிறாய்
என உணரும்போதும்
காதல் என்னை ஏன் முழுமையாக ஆட்கொள்கிறது?

ஒவ்வொரு மாலையும் நான் படிக்கும்
புத்தகம் கீழே விழுந்தது.
அடிபட்ட நாயைப் போல் என் அங்கி
காலருகே சுருண்டு கிடந்தது.

சிலைகளை அழிக்க அந்தி எங்கே செல்கிறதோ
அங்கே நீ மாலைதோறும் விலகிச்
சென்று கொண்டேயிருக்கிறாய்.

அன்றாடம் நீ பேரண்டத்தின்.....



ஆன்றாடம் நீ பேரண்டத்தின் ஒளியுடன்
விளையாடுகின்றாய்.
நுண் விருந்தாளியே, நீ மலரிலும் நீரிலும் வருகின்றாய்.
நாளும் ஒரு மலர்க்கொத்தைப் போல் என் கைகளில்
நான் இறுக ஏந்தும்
இந்த வெள்ளைத் தலை மட்டுமா நீ?

எவளும் உனக்கு நிகரில்லை,
நீ என் காதலி என்பதனால்.
மஞ்சள் பூமாலைகளிடையே உன்னை நான்
விரித்து போடட்டுமா?
யாரது, தென்புலத்து நட்சத்திரங்களிடையே
புகையெழுத்துக்களால் உன் பெயரை எழுதுவது?
ஆ, நீ தோன்றுவதற்கு முன்னர் எப்படி இருந்தாய் என
நினைத்துப் பார்க்க முயல்கிறேன்!
திடீரென ஓலமிடும் காற்று மூடிய என் வீட்டுச்
சாளரத்தின் மீது மோதுகிறது.
நிழல் மீன்கள் நிறைந்த வலையாக வானம்.
பற்றியிருந்த அனைத்தையும் இப்பொழுதோ பிறகோ
விட்டு விடுகிறது காற்று.
அவள் உடைகளை அகற்றுகிறது மழை.

புள்ளும் பறக்கின்றன, விரைந்து.
காற்று காற்று.
மனிதரை எதிர்க்கும் ஆற்றல் எனக்கு மட்டுமே உண்டு.
வானத்தில் நேற்றிரவு நிறுத்திய தோணிகளைக்
கட்டறுக்கும் புயல்
பழுத்த இலைகளையும் சுழற்றி அடிக்கிறது.

நீ இங்கிருக்கிறாய். ஓ, என்னை விட்டு
விலகிடாதே.
என் கடைசி அழைப்புக்கும் விடையளி.
அச்சம் கொண்டது போல் என்னை
இறுக அணைத்துக்கொள்.
ஏதோ ஒன்றின் நிழல் முன்பொருமுறை உன்
கண்களின் மீது படர்ந்தது.

இப்போது, இப்போதும், நீ எனக்கு மலர்களைக்
கொணர்கிறாய்.
அள்ளி வந்ததில் உன் கொங்கைகளும் மணக்கின்றன.
துயரக் காற்று வண்ணத்துப் பூச்சிகளைத்
துரத்திச் சென்று வதைக்கையில்
உன்னை நான் நேசிக்கிறேன்: என் மகிழ்ச்சி
உன் கொவ்வைப்பழ இதழ்களைக் கடிக்கிறது.

அனைவரையும் அச்சுறுத்தி ஓட ஓட விரட்டும்
என் பெயர்,
தனிமையில் உழலும் என் முரட்டு ஆன்மா,
இவற்றக்குப் பழக்கப்பட நீ எவ்வளவு
சிரமப்பட்டிருக்க வேண்டும்!
விடிவெள்ளி நம் கண்களை முத்தமிட,
மங்கிய அதன் ஒளி நம் தலை மேல் விசிறி போல்
சுழல்வதை ஏத்தனை முறை பார்த்திருப்போம்!

என் சொற்கள் வருடிக்கொடுத்தவாறே
உன் மீது பொழிந்தன.
இந்தப் பேரண்டமே உனக்குச் சொந்தம்
என நம்பும் அளவிற்கு
உன் வெயில்பட்ட முத்துச் சிப்பி மேனியை
நான நேசித்தேன்.

மலைகளிலிருந்து இன்ப மலர்கள், நீலப் பூக்கள்,
கரும் சேல் மலர்கள்,
முரட்டுக் கூடை நிறைய முத்தங்களுடன்
நான் வருவேன்.
செர்ரி மரங்களோடு வசந்தம் என்ன செய்கிறதோ
அதை உன்னிடம் செய்ய விரும்புகிறேன்.



நன்றி:
பாப்லோ நெருடா.


SUN CITY
SUPER MARKET
OPEN 7 DAYS
8.30AM-10.30PM
SUN CITY
SUPER MARKET
திறந்திருக்கும் நேரங்கள்
வார நாட்கள்: மு.ப. 9.30 - பி.ப: 9.30
வார இறுதி நாட்கள்: மு.ப. 8.30 - பி.ப. 10.00
இலங்கை, இந்திய, கரேபியன் நாடுகளில் இருந்து தருவிக்கப்பட்ட உடன் மீன் வகைகள் மற்றும்
ஊர் ஆட்டிறைச்சி
ஊர்க் கோழி
காட்டுப் பன்றி
புதிய சினிமா படங்கள்
மரக்கறிகள்
பழங்கள்
மளிகைப்பொருட்கள்
கனவாய், உடன் நண்டு, கோழி சுத்தம் செய்து கொடுக்கப்படும்.
சிறிய கட்டணம் அறவிடப்படும்
ஒவ்வொரு வாரமும் 50, 100 டொலருக்கு மேல் பொருட்கள் கொள்வனவு செய்பவர்களுக்கு ஒரு பொருளை சிறப்பு விலையில் 5 சதத்திற்கு பெறலாம்.
உணவகங்களுக்கு தேவையான Boneless mutton வெட்டிக்கொடுக்கப்படும்.
இறாத்தல் $4.75 மட்டுமே
SUN CITY PLAZA
Unit 18 2761 Markham Road, Scarborough, M1X1M4
Between Mcnicoll & Finch at Markham and Nashdene
e-mail: shop@suncitymarket.com
416- 724-6666
STEELS AVE EAST
MC NICOLL AVE
MARKHAM ROAD
Nashdene
FINCH AVE EAST

பாடசாலைகள் தேவையற்றனவா?

அவை சமூகங்களை ஏமாற்றி வருகின்றனவா?

பேராசிரியர்.
மா.சின்னத்தம்பி

இலங்கையில் மனிதவள முன்னேற்றம், சமூகநல ஒழுக்கம், பொறுப்புணர்வுள்ள குடிமக்கள் பண்பாடு என்பவற்றை தொடர்ச்சியாக முன்னேற்றுவதற்கான ஏற்பாடுகளில் முதன்மையானவை பாடசாலைகள்.

குழந்தைகள் வளரும்போது, ஆரோக்கியத்துடனும், தெளிவான சிந்தனையுடனும், விரும்பத்தக்க நல்ல சமூக நடத்தைகளுடனும், தேசம் வேண்டி நிற்கும் திறமைகளுடனும் மேம்பாடு உடையவர்களாதல் வேண்டும். உணவு, ஊட்டம், சுகாதாரம், நல்வசதி (Health) கல்வி என்பன ஒன்றிணைந்த வகையில் எல்லாக் குழந்தைகளும் தொடர்ந்து சமமாக வளருதல் வேண்டும்.

"எல்லாக் குழந்தைகளும் இலங்கையர்கள் எல்லோரும் இலங்கையின் எதிர்கால குடிமக்கள் எல்லோரும் இலங்கையின் நீண்டகால நற்பெயரையும், பெருமையையும் தீர்மானிப்பவர்கள்" என்று நாட்டின் தலைவர்கள் மானசீகமாக நம்புதல் வேண்டும்.

1930களிலிருந்து இலங்கையர்கள் தமது கல்வி பற்றிய முடிவுகளை மேற்கொள்ளும் வாய்ப்புக்களைப் பெற்றுள்ளனர் 85 வருடங்களை கடந்து விட்டோம்.

எட்டு தசாப்தங்களாக நாம் கல்வியில் சாதித்தவை யாவை? சமூக நீதியை நிலை நிறுத்த முடிந்ததா? சமத்துவத்துடன் மனிதவள மேம்பாட்டை ஏற்படுத்தினோமா? ஒப்பீட்டு ரீதியில் கிராமங்களின் கல்வித்தரம் மேம்படச் செய்துள்ளோமா?

இத்தகைய கேள்விகள் திருப்திகரமான விடைகளுக்காக பல ஆண்டுகளாக காத்துக் கிடக்கின்றன.

பாடசாலைகள் எதிர் கொள்ளும் சமுதாயத்தின் கேள்விகள்

இலங்கையிலுள்ள பாடசாலைகள் தொடர்பான கூர்மை மிக்க பல வினாக்கள் கேட்கப்படுகின்றன.

- எதை யாருக்கு கற்பிக்கிறோம் ?
- யாருடைய செலவில் யார் கற்கின்றனர்?
- பலவீனமானவர்களுக்கு ஏன் பலவீனமான பாடசாலைகள் ?
- பலமானவர்கள் தொடர்ந்தும் பலமான பாடசாலைகளை எவ்வாறு பெறுகின்றனர்?
- பாடசாலைகள் உற்பத்தித்திறன் ஏதுமின்றி வேலை செய்யும் ஆசிரியர் களுக்கான தொழில் வழங்கும் தொழிற்பேட்டைகளா?
- அறிவு, கற்கும் ஊக்கம் உடையோரை விடவும் பணபலம் உடையவர்களுக்கு மாத்திரம் தரமான, வினைத்திறன் மிக்க கல்வியா?

இலங்கையில் ஏறக்குறைய 10,000 பாடசாலைகள் 40இலட்சம் மாணவர் களுடனும் 2 இலட்சம் ஆசிரியர்களுடனும் இயங்குகின்றன.

பெற்றோர் தமது பிள்ளைகள் பற்றிய பல எதிர்பார்ப்பு களையும் இயலாமைகளையும் கொண்டுள்ளனர்.

தாம் வரிப்பணம் செலுத்துகிறோம் தேசிய உற்பத்தித் துறைகளில் பணியாற்றுகிறோம் ஆனால் தமது பிள்ளைகளது அறிவு சார் முன்னேற்றம், திறன் மேம்பாடு, தீயவற்றிலிருந்து விலகியிருத்தல், விழுமிய மற்றும் பண்பாட்டுப் பற்றுறுதி, தன்னம்பிக்கை சார்ந்த சகல உதவிகளையும் பாடசாலைகள் வழங்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். இந்த எதிர்பார்க்கைகளுடனும் நம்பிக்கைகளுடனும் தமது பிள்ளைகளை அதிக சிரமங்களுடன் 13 வருடங்கள் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர்.

இத்தகைய எதிர்பார்க்கைகளை நிறைவேற்ற எமது பாடசலை முறைகள் தவறிவிட்டன. ஏன் அவ்வாறு கூறுகிறோம்.

சில குறிகாட்டிகள் இதோ!

- விஞ்ஞான பாடங்களை உயர்வகுப்பில் கற்பிக்க வேண்டும். எல்லா மாணவருக்கும் அதற்கான விருப்பமும் உரிமையும் உண்டு. ஆனால் ஏறக்குறைய 9000 பாடசாலைகளில் இப்போது கூட அந்த வசதிகள் இல்லை.
- கட்டாய பாடங்களான கணிதம், விஞ்ஞானம், மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் கிராமங்களிலும் நகர்ப்புற வறிய பிள்ளைகளின் பாடசாலைகளிலும் தேவையான அளவில் இல்லை. தொடர்ந்து இந்த புறக்கணிப்பு நிகழ்கின்றது.
- பெரும்பாலான வகை3, வகை2 பாடசாலைகளில் பெரும்பாலான நேரங்களில் பிள்ளைகளுக்கு எதுவும் கற்பிக்கப்படுவதில்லை.
- தரம் 1 இலிருந்து தரம் 13 வரை பள்ளிக்கூடங்களில் கற்பிக்கும் அதே பாடங்களை பள்ளிக்கூடங்களை விடவும் அதிக பணம் பெற்று அதிக நேரம் கற்பிக்கும் தனியார் ரியூசன் நிலையங்களும் ரியூசன் ஆசிரியர்களும் அதிகரித்துச் செல்கின்றனர்.
- பாடசாலைகளில் அனுமதி பெறாதவர்கள், கற்க வேண்டிய வயதில் ஏமாற்றத்துடன் கல்வியை இடைநடுவில் கைவிடுவோர், வீதியோரச் சிறுவர்கள், முழுநேர சிறார்த் தொழிலாளர்கள் தொகையை எங்களால் குறைக்க முடியவில்லை.
- 11 வருட பாடசாலைக் கல்வியின் பின்னும் சராசரியாக 50 சதவீதத்தினர் தகுதிச்சான்றிதழ் எதுவும் பெறாமல் வெளியேறுகின்றனர்.
- 13 வருட பாடசாலைக் கல்வியை நிறைவு செய்தவர்களை 'திறனற்றவர்கள்' என்று 'லேபிள்' குத்தி அவர்களை தொழில் வழங்குனர் நிராகரிக்கின்றனர். அவமானத்துக்கு உள்ளாக்குகின்றனர்.
- 13 வருடங்கள் பாடசாலைகளில் நேரம், பெற்றோர் நிதி, தொழில் பயிற்சி பெறும் வாய்ப்பு என்பவற்றை இழந்து கற்ற பின்னும் உயர்கல்வியை தொடர முடியாது 250,000 மாணவர்கள் விரக்தியுடன் வருடாந்தம் வெளியேறுகின்றனர்.
- பாடசாலை முறை பலமாகவுள்ள போதிலும் திறன் பெறாதவர்களாக ஒவ்வொரு வருடமும் ஐந்து இலட்சம் பேர் (இந்த முறைமையினால்) முத்திரை குத்தப்படுகின்றனர்.
- தொழில், தொழிற்பயிற்சி, தொழில் செய்தல் தொடர்பான நாட்டத்தையும், நம்பிக்கையையும் இளைஞர்களிடம் உருவாக்க முடியவில்லை.

"மேசை-கதிரை சார்ந்து கற்றல், வாழ்நாள் முழுதும் மேசை-கதிரை சார்ந்து தொழில் செய்தல்" என்ற போலி உணர்வுகளுடன் இளைஞர்கள் (பாடசாலைகளினால்) உருவாக்கப்படுகின்றனர்.

இத்தகைய பிரச்சினைகளுக்குரிய காரணிகள் தான் என்ன? இவற்றின் உண்மையான முகங்கள் யாவை?



முதல் இசைக் கல்வெட்டு

திரைவிமர்சனம்

தமிழ் சினிமாவின் பொன் முட்டை இந்தக் காக்கா முட்டை. உலகத்துக்கான தமிழ் சினிமா இது!

சென்னை மாநகரத்தின் சிங்காரச் சென்னை பெறுமதிக்காக, நகர வாழ்வில் இருந்து ஒடுக்கப்பட்டு, ஒதுக்கப்பட்டு, விளிம்பைத் தாண்டியும் துரத்தப்பட்ட மண்ணின் மைந்தர்களை மனம் நிறை யக் கரிசனத்துடன் அணுகி, தமிழ் சினி மாவின் பெருமிதப் படைப்பாக மிளிர்கிறது காக்கா முட்டை.

ஒரு பீட்சா சாப்பிட வேண்டும் என ஆசைப்படும் குப்பத்துச் சகோதரர்கள் இருவரும், அந்த ஆசைக்கு அடுக்கடுக்காக வரும் முட்டுக்கட்டைகளும்தான் இந்த முட்டைக் கதை. சுவாரஸ்யம் என்ற பெயரில் வழக்கமான வணிகச் சமாசாரங் களைத் திணிக்காமல், கதை ஓட்டத்தி லேயே அத்தனை சுவாரஸ்யங்களையும் அள்ளித் தந்திருப்பது அசல் வெற்றி.

கோழி முட்டை வாங்கக்கூட வசதி இல்லாத குப்பத்துச் சகோதரர்கள் விக் னேஷ் (பெரிய காக்கா முட்டை), ரமேஷ் (சின்ன காக்கா முட்டை) இருவரும் காக்கா முட்டையைக் குடித்து உடலுக்குப் புரதம் சேர்த்துக்கொள்கிறார்கள். ஆனால், அந்தச் சொற்பப் புரதச்சத்தையும் சிறுவர்களிடம் இருந்து பறித்துக்கொள்கிறது புதிதாகக் கட்டப்பட்ட ஒரு பீட்சா கடை. கடையின் திறப்பு விழாவில் நடிகர் சிம்பு பீட்சா சாப்பிடுவது, சுண்டி இழுக்கும் விளம் பரங்கள்... என சிறுவர்களுக்கு பீட்சா மீது பைத்தியமே பிடிக்கிறது. ஒரு கிலோ மூன்று ரூபாய் எனக் கரி அள்ளிச் சம்பாதிக்கும் சிறுவர்களால், 300 ரூபாய் சம்பாதிக்க முடிந்ததா, அப்படிச் சம்பாதித்தாலும் பீட்சா சாப்பிட முடிந்ததா... என பரபரப்பாக கடக்கிறது படம்!

குப்பத்துச் சிறுவர்கள் பீட்சா சாப்பிட ஆசைப்பட்டால் என்ன நடக்கும்? என்ற ஒற்றைக் கேள்வியில் தொடங்கும் சினிமா, நுகர்வுக் கலாசாரத்தை ஊக்குவிக்கும் உலகமயமாக்கல், எளிமையும் அழகும் நிறைந்த உழைக்கும் மக்களின் வாழ்க்கை, நகரத்து மனிதர்களுக்குச் சற்றும் சம்பந்தம் இல்லாத... அவர்கள் அறிந்தேயிராத விளிம்புநிலை மக்களின் வாழ்வு... எனப் பல விஷயங்களை, போகிறபோக்கில் போட்டுத் தாக்குகிறது.

இதே சைதாப்பேட்டை பாலத்தை நாம் எத்தனை முறை கடந்திருப்போம்? பாலத்துக்கு அந்தப் பக்கம் வசிக்கும் இந்த மனிதர்கள் பற்றி நம்மில் எத்தனை பேருக்குத் தெரியும்?



அநாவசியத்தை அத்தியாவசியமாக மாற்றும் விளம்பரங்கள், பொங்கித் தின்ன அரிசி இல்லாத வீட்டில் பொழுதுபோக்க இரண்டு விலையில்லா டி.வி பெட்டிகள், சினிமாவில் ஹீரோ ஏறுக்குமாறாக பேசுவதை வீட்டில் வயதுக்கு மீறிப் பிரதி பலிக்கும் சிறுவர்கள், கெட்டுப்போனாத் தான்டா நூல் நூலா வரும் என வெள்ளந்தியாக வெளிப்படும் வார்த்தைகளில் பொதிந்திருக்கும் உணவு அரசியல், பீட்சாதான் வேணும்... அப்பா எல்லாம் வேணாம் எனும் அளவுக்கு மகனை முறுக்கேற்றும் போலி நாகரிக அழுத் தங்கள்.

தூக்கத்தில் டவுசரை ஈரமாக்கும் ஆரம்பக் காட்சியுடன் அட்டகாசமாக அறிமுகமா கும் ரமேசும், அவன் சாப்பிட்ட பீட்சாவைக் கொடுப்பான்... அதை நீ வாங்கித் தின்னுவியா? என, தம்பியை அதட்டும் விக்னேசும் அந்தக் களம்... அமர்க்களம்! பாட்டி சுடும் பீட்சாவைச் சாப்பிட்டு கடுப்பாவதும், தண்ணி வண்டியைத் தள்ளு வண்டியில் இழுத்து வந்ததற்குக் காசு கிடைத்ததும் கண்கள் விரிவதுமாக, படம் முழுக்கப் பசங்க ராஜ்ஜியம்.

துண்டுப் பிரசுரம் பார்த்து பீட்சா சுடும் அந்தப் பாட்டி சாந்திமணி... அழகு அப்பத்தா! மருமகளின் திட்டுக்களில் இருந்து பேரன்களைத் திருடுவதும் ஹோம்மேட் பீட்சா முயற்சியில் கலகலப்பது என பாச-நேசமாக ஜொலிக்கிறார். சினி மாவில் ஐஸ்வர்யாவுக்கு இது அர்த்தமுள்ள அடையாளம். அழுக்கு மேக்கப், எப்போதும் சோகம்... என வளையவருபவர், மகன் படுக்கையை நனைப்பதை நிறுத்தும் போதும், ரொம்ப அடிச்சுட்டாங்களா? எனப் பதறும்போதும்... ரசனை உணர்வுகளைக் கடத்துகிறார்.

ரமேஷ் திலக், பழரசம் ஜோ மல்லூ ரி, கரியை எடைக்கு வாங்கும் அக்கா, முந்திரிக்கொட்டையாகச் சொதப்பும் கிருஷ்ணமூர்த்தி... என ஒவ்வொருவருமே கச்சிதமான நடிப்புகள்.

பாட்டி குளிக்கும்போது தண்ணீர் பிடித்து வருவது, 30 ரூபாய் திருட்டுக் கேபிளுக்கு நுகர்வோர் உரிமை மறுக்கப்படுவது என, குப்பத்துக் காட்சிகளில் அத்தனை இயல்பு. தமிழ் சினிமாவின் பிஞ்சிலேயே பழுத்த சிறுவர்களுக்கு எதிர் துருவமாக படத்தின் கதை நாயகர்களான சிறுவர்கள் இருப்பது பெரும் நிம்மதி. அடிக்கக் கூடாதுன்னு பாலிசி வெச்சிருக்கேன் எனும் அம்மாவின் வளஉப்பில் நேசமும் நேர்மையுமாக வளர்பவர்களை, சமூகம் எப்படியெல்லாம் கறைப்படுத்தக் காத்திருக்கிறது என்பது திரைக்கதையில் அழுத்தமாகப் பின்னப்பட்டிருக்கிறது.

சிம்புவைக் கலாய்க்கிறார்கள்... நான் தான் லவ் பண்ணலைனு சொல்லிட் டேன்ல என வாக்குறுதி கொடுக்கிறார் சிம்பு. ஹேய்... சூப்பரப்பு!

எது மாதிரியும் இல்லாத புது மாதிரி சினிமாவின் அந்த க்ளைமாக்ஸ், அத்தனை நெகிழ்ச்சி. எந்தச் செயற்கைப் பூச்சும் இல்லாமல் கண்களைக் கலங் கச்செய்யும் ஈர அத்தியாயம். ஏரியாவையே பதறவைத்த ஏக களேபரங்களுக்குப் பிறகு, பீட்சா குறித்து இரண்டு காக்கா முட்டை களும் அடிக்கும் அந்த கமென்ட்... கலக்கல்!

இயக்குநரே ஒளிப்பதிவாளராக இருப் பதில் எத்தனை வசதி என்பதை ஒவ்வோர் ஒளிச்சிதறலிலும் நிரூபித்திருக்கிறார். மணிகண்டன். இண்டு இடுக்கு, சந்து பொந்து, வீட்டுக்கூரை... எனச் சிறுவர் களோடு சிறுவர்களின் மனநிலை யிலேயே பயணிக்கிறது படம். ஆக்ஷன் அவசரமோ, மாஸ் பன்ச் நவரசமோ இல்லாத ரியல் டைம் நிகழ்வுகள்தான் படம் முழுக்க. அதிலும் சீனுக்கு சீன் விறுவிறுக்கவைக் கிறது கிஷோரின் எடிட்டிங். "விஸ் யூ கிஷோர்! "கறுப்பு கறுப்பு கறுப்பு நிறத்தை வெறுத்து வெறுத்து வெறுத்து..." பாடலில் மெல்லி சையுடன் மென்சோகம் படரவிடுகிறது ஜி.வி. பிரகாஷின் இசை. "விட்டமின் பி" போஷாக்கு இல்லாமல் முடங்கிக்கிடக்கும் இப்படியான முட்டைகளைப் பொறிக்கச் செய்ய, தயாரிப்பாளர்கள் தனுசும் வெற்றிமாறனும் முன்வந்ததற்கு வாழ்த்துகள்.

குழந்தைகளை வைத்து பெரியவர் களுக்குக் கதை சொன்ன, அதுவும் உலக மயமாக்கலின், உணவு அரசியலின், விளிம்புநிலை மக்களின் வாழ்வியலை மனதுக்கு நெருக்கமாகச் சொன்ன "காக்கா முட்டை... நம் சினிமா!

தமிழ் சினிமாவுக்கு நல்ல கதை இல்லாததால் திருப்பித் திருப்பி படமாக எடுக்கப்பட்ட கதையையே படமாக்கும் உத்தி காணப் படுகிறது. இதனால் புதிதாக வெளிவரும் திரைப்படங்களில் கதையைக் காணமுடியாது உள்ளது. தொழிநுட்ப வளர்ச்சியில் வளர்ச்சி கண்ட தமிழ் சினிமா புதிதாக கதையை தேர்ந்தெடுக்க முடியாது உள்ளது. இதனால் சினிமா ரசிகர்களிட மிருந்து பெரியளவிலான எதிர்பார்ப்பினை சினிமா தயாரிப்பாளர்கள் எதிர்பார்க்க முடியாதுள்ளது. இதன் காரணமாக பணத் தைப் போடுபவர்கள் பெரியளவில் இலாபம் ஈட்ட முடியாதுள்ளனர். இதனால் தான் அதிகளவில் தென்னிந்தியத் திரைப்படங்கள் வெளிவந்தாலும் குறுகிய நாளில் திரைப்படங்கள் திரையரங்கை விட்டு விலகுகின்றன.

தமிழ் சினிமா வளர்ச்சி கண்டுவிட்டதாக பரவலாக பேசப்பட்டு வருகிறது. முன்னரை விட அதிகளவான திரைப்படங்கள் வெளி வந்து கொண்டிருக்கின்றன. ஆனால் அந்த திரைப்படங்கள் நீண்ட நாட்கள் ஓடாமல் குறுகிய காலத்திலேயே திரையை விட்டு காணாமல் போய்விடுகிறது. இதனை திரைப்பட இயக்குநர்கள் புரிந்து கொண்டாலும் தயாரிப்பாளர்கள் புரிந்துகொள்வதாகத் தெரியவில்லை. ஒரு திரைப்படம் கூடிய நாட்கள் ஓடினால் அந்தத் திரைப்படம் போல் எடுத்தால்தான் அடுத்த திரைப்படம் ஓடும் என்று தயாரிப்பாளர்கள் நினைக் கிறார்கள். இதனால் நல்ல கதையை வைத்திருக்கும் இயக்குநர்கள் சொல்வதை தயாரிப்பாளர்கள் கேட்பதில்லை. நல்ல கதையை வைத்துக்கொண்டு இயக்குநர் கள் கம்பனி கம்பனியாக ஏறி இறங்குகின்ற னர்.

படவாய்ப்புக் கிடைக்காமல் போக தமது நல்ல கதையையே மாற்றி தயாரிப்பாளரின் விருப்புக்கேற்ப இயக்குநர்கள்தமது விருப்ப மில்லாமல் அந்தப் படத்தை எடுக்கின் றனர். எடுத்த படம்பெரியளவில் வெற்றிய டையாமல்ப் போக கதை மட்டுமல்ல அந்தப் பட்த்தில் பணியாற்றிய அனை வரும் பாதிக்கப்படுகின்றனர். இதனைத் தயாரிப் பாளர்கள் கொஞ்சமேனும் கவனத்தில் எடுப்பதில்லை.

கதை சம்பந்தமாக இயக்குநர்கள் முடிவெடுக்கும் காலம் எப்பொழுது வருகிறதோ அப்பொழுதே தமிழ் சினிமா நல்லதொரு இடத்தினை எட்டும் என்பது கண்கூடு. அது வரையில்கதையில்லாத தமிழ்சினிமாவை நாம் பார்க்கவேண்டிய நிலையில் சினிமா மீதான வெறுப்பு நிலையும் ஏற்படும் என்பது கண்கூடு. பணத்தினைப் போடும் முதலாளிகள் அந்தப் பணத்தினை பல் மடங் காக எடுப்பதற்கு முயற்சி செய்து கடைசியில் போட்ட பணத்தினையும் எடுக்க முடியாமல் சினிமாவை விட்டு விலகி விடுகின்றனர்.

ஒரு திரைப்படத்தில் கதை- காட்சி அமைப்பு-பாடல்-சண்டைக்காட்சி - கொமடி -தொழில்நுட்பம் என அனைத்துத் துறையின் பங்களிப்பும் முக்கியமானது. அப்பொழுது தான் அந்தப் படத்தை ரசிகர்கள் பார்க்க வருவார்கள் என்பது வெளிப்படை. ஆனால் படத்தின் கதை தான் ஒரு திரைப் படத்தினை நகர்த்துவதற்கு முக்கியமான காரணியாக அமைகின்றது. எனவே கதையைத் தேட வேண்டியது கட்டாய தேவையாக இருக்கிறது. இதனை தயாரிப்பாளர்கள் விளங்கிக் கொள்வார்களாயின் தமிழ்சினிமா நல்ல கதைகளுடன் வெளிவரும் என்று நாம் சொல்லத் தேவையில்லை.

கோடம்பாக்கத்தில் நல்ல கதை கொண்டு அலையும் புதிய இயக்குநர்களைப் பார்க்க முடியும். தமது கதையையே படமாக்க வேண்டும் என்ற குறிக்கோளில்தமது வாழ்நாளினையே வீணாக்கும் இயக்குநர் களைப் பார்க்கமுடியும். இவர்களை சினிமா தயாரிப்பாளர்கள் கண்டுகொள்வதில்லை.

கதை என்ன கதை. படம்ஓடவேண்டும் என்றிருக்கும் தயாரிப்பாளர்கள் முதலில் எந்தக் கதையைப் படமாக எடுத்தால் அந்தப் படத்தினை ரசிகர்கள் பார்க்க முண்டியடிப் பார்கள் என்று கூட பார்க்க வேண்டும். அதற்காக சமூகத்துக்கு உதவாத கதையை எடுத்து அந்தப் படம் நீண்ட நாள் ஓடுது என்று மீண்டும் மீண்டும்அதே படத்தை எடுக்க முனைவது படம்தோல்வியடைவதை எவராலும் தடுக்க முடியாமல் போய்விடும் என்பது உண்மை.

ஈழத்துக் கதைகளை எடுக்க முடியாது கஸ்ரப்படும் இயக்குநர்களையும் நாம்பார்க்க முடியும். ஈழத்துக் கதையினை எடுக்கிறோம் என்று ஒரு சிலர் ஆரம்பித்து அந்தக் கதையை முழுமையாக எடுக்க விடாது தயாரிப்பாளாகள் தடுத்துவிட ஈழத்து கதை என்று எடுத்த திரைப்படங்கள் தோல்வி கண்ட வரலாறு தான் தமிழ் சினிமாவில் இருக்கின்றன. தென்னிந்திய சினிமா இது வரையில் ஈழத்தமிழரின் கதையை எடுத்து வெற்றியடையாததிற்கு காரணம் படத்தில் கதை இல்லாதது தான்காரணமாக அமைகின்றது.

ஒரு பத்திரிகையின் முதலாளி ஒரு பத்திரிகையாளனாக இருந்திருந்தால் அந்தப் பத்திரிகை வளர்ச்சியடையும். ஆனால் பத்திரிகையின் முதலாளியாக இருப்பவர் பத்திரிகை சம்பந்தமாக ஒன்றுமே தெரியாதவராக இருப்பதால் தான் பத்திரிகை கள் வளர்ச்சியடையாத தன்மை காணப்படு கிறது. இதேபோல் தான் சினிமாத் தயாரிப் பாளர்களும் சினிமா சம்பந்தமாக தெரிந் திருக்க வேண்டும். ஆனால் சினிமா சம்பந்த மாகத் தெரியாதவர்கள் தான் தயாரிப்பாளர் களாக இருக்கின்றனர். இதுவும் தென்னிந் திய தமிழ் சினிமா வளர்ச்சியடைவதற்கு தடையாக இருக்கிறது.

பல பல உற்பத்திப் பொருள்கள் சந்தையில் வருகிறது. ஆனால் அந்தப் பொருள்களில் என்ன நஞ்சுப் பொருள்கள் கலந்துள்ளன என்பது எவருக்கும் தெரியாது. தரமாக இருக்கிறதோ என்று பார்ப்பதில்லை. ஆனால் பார்ப்பதற்கு கவர்ச்சியாக இருக்கும். சந்தையில் விற்பனையே குறியாக இருக்கும். அதே போல் தான் தமிழ் சினிமாவும் சந்தையில் விடுவதற்காக கதையைப் பார்ப்பதில்லை சமூகத்துக்கு ஏற்றதா என்று பார்ப்பதில்லை. இதனால் புதிய பொருள்கள் குறுகிய நாளில் எப்படி சந்தையை விட்டு விலகுதோ அதே போல்தான் வெளிவந்த குறுகிய நாளிலேயே தென்னிந்திய சினிமாவும் திரையைவிட்டு விலகும்.






NEW ARRIVALS ON CHOICE SAREES
TIMO STAR
Timo Star Textiles
280 Elson Street, Unit #6, Markham, ON


PEEL
TAE-KWON-DO
"Independent studies show that martial arts can improve mental focus, Increase attention span and the ability to make better decisions"
1 WEEK Trial Special $10
GORE CENTRE
4525 Ebenezer Road, Unit 25
Brambton ON L6T 2K8
905 913 2571
170 Boviard Drive West. Unit 9
Brambton ON L7A 1A1
905 840 5268

ரெயிலர்

ஆண்ட பரம்பரை, பண்பாடு கலாச்சாரம் அது இது என்று பீழா காட்டிய எங்கடை அரசியல் தலைவர்கள் போருக்கு பின்னர் ஒரு சமூகத்தைத் தானும் மீள கட்டியமைக்க முயற்சிக்கவில்லை. வாக்கை விட்டால் இவர்களுக்கு வாழ்க்கையில் எதுவும் தேவையில்லை. போருக்கு பின் ஒரு சமூகமே அழிந்து கிடக்கின்றது. காப்பாற்ற யாருமில்லையா? சமூக அழிவில் உழன்று கொண்டிருக்கும் றியோவில் இருந்து சில சாட்சிகள் உங்களுக்காக....



புங்குடுதீவு நிகழ்வு எங்கள் கலாச்சார ஓட்டைகளை அவிழ்த்துவிடுகின்றது. நாங்கள் மிகமோசமான வன்முறைக் கலாச்சாரமுள்ள பிரதேசங்களை உருவாக்கியுள்ளோம்.

பிரேசில் நாட்டில் உள்ள றியோ இன்று வன்முறைக்குப் புகழ்பெற்ற பிரதேசம். அங்கு நடைபெறும் சம்பவங்களை மையமாகக் கொண்டது சிற்றி ஒப் மென். அதாவது ஆண்களின் நகரம். நரகமல்ல. பிரேசிலின் ரியோ நகரில் இரு பால்ய நண்பர்கள் ஏஸ், வலஸ். இருவருக்கும் வயது 18. ஏசுக்கு ஏற்கனவே திருமணமாகி ஓர் பிள்ளையும் உண்டு. ஏசின் மனைவி கிரிஸ்ரானா தாதி வேலை கிடைத்து சாஓ போலோவிற்கு செல்லகிறாள். ஏஸ் குழந்தையுடன் வாழ்கிறான். ஏஸ் ஏற்கனவே பிள்ளையை அடிக்கடி தவறவிட்டுவிட்டவன். பின்னர் அவனது நண்பர்கள் மூலம் பெற்றுக்கொள்வான். ஏசிற்கு வயதிற்கு ஏற்ற முதிர்ச்சி இல்லை. ஏசும், வலசுக்கும் ரியோவை ஆக்கிரமித்துள்ள குழு வன்முறையாளர்களுடன் எந்த நேரடித் தொடர்பும் இல்லை. வலஸ் தனது அடையாள அட்டையை பெறுவதற்கு தந்தையின் கையெழுத்து பெறவேண்டும். தந்தையார் என்பது யாரென்றறியாது தாயினால் வளர்க்கப்படுகின்றான். இப்பொழுது தந்தையை தேடி அலைகின்றான். அவனது தந்தை 20வருட சிறைவாசம் பெற்றுள்ள கெரால்டோ என அறிந்துகொள்கின்றான். நகரத்தில் இரு குழுக்கள், குழு வன்முறையில் ஈடுபடுகின்றன. இந்தக் குழு வன்முறையில் நண்பர்கள் இருவரும் எதிரும் புதிருமாக செயல்படுகின்றனர். இது ஆண்களின் நகரம் படத்தின் கருச் சுருக்கம்.

நாங்கள் முறையாக சமூககட்டமைப்பை கட்டியெழுப்பாவிடில் றியோ போன்ற நிலைமைக்கு தள்ளப்படுவோம்.

குதம்பைச் சித்தர் பாடுகிறார் "கண்டாரை நோக்கிக் கருத்தோடு இருப்போர்க்குக் கொண்டாட்டம் ஏதுக்கடி?"

Manda Bala (Send a Bullet) இது ஒரு விவரணச் சித்திரம். இதுவும் பிரேசில் படம்.

Jader Barbalho என்ற பிரபல செல்வாக்கு மிகுந்த அரசியல்வாதி அரசுக்குச் சொந்தமான பணத்தில் (எட்டு மில்லியன் டொலர்கள்) தவளை பண்ணை கட்டுகின்றார். இநதத் தவளைகள் அமெரிக்காவுக்கும் ஜரோப்பாவுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இவரது ஊழலைப் பற்றியும், பிரேசிலின் முக்கிய நகரங்களுள் ஒன்றான Sao Paulo நகரத்தின் வன்முறைகளையும் பதிவு செய்துள்ளது. லத்தீன் அமெரிக்க நகரங்களுள் குறிப்பாக ரியோ போன்ற பிரேசிலின் நகரங்களுள் மிகவும் அதிக குற்றச் செயல்கள் நடைபெறுகின்றன. இதற்கான பிரதான காரணம் வறுமை.



சித்தன் சினிமா

நோபல் பரிசு வென்ற Gabriel Garcia Marquez சிறு கதைகள் மூன்றை Don't fool with love என்ற பெயரில் படமாக்கியுள்ளனர். கொலம்பியாவில் பிறந்து வளர்ந்து பின்னர் மெக்சிக்கோ நகரில் வாழ்ந்தாள் காசியா. இவரது பிரபல நாவலான Love in the Time of Cholera என்ற நாவலில் குறிப்பிட்ட சில விடயங்கள் "ஒரு திருமணத்தில் எழும் பிரச்சினைகள் உடலுறவின் பின் தீர்ந்து, காலையில் மீண்டும் ஆரம்பமாகிவிடும்" "ஒரு மனிதனுக்கு இரண்டு மனைவிகள் தேவை, ஒன்று காதலிப்பதற்கு, மற்றையது சட்டை பொத்தான் தைப்பதற்கு" இப்பொழுது காசியாவிற்கும் காதலுக்குமான உறவு புரிந்திருக்கும். இப் படத்தின் முதலாவது கதை 27 நிமிடங்கள் கொண்ட "இரு பக்க கண்ணாடி" (The Two Way mirror).

சுசனா இளம் பெண். இன்னும் மூன்று கிழமைக்குள் திருமணம் நடைபெறவுள்ளது. பழைய சாமன்கள் விற்கும் கடை ஒன்றில் இருந்து 1800 களில் செய்யப்பட்ட கண்ணாடியிலான அலுமாரியை வாங்கி வந்து தனது அறையில் வைத்திருக்கின்றாள். திருமணத்திற்கு 21 நாட்கள் உள்ளன. அன்றிரவு அவளது கண்ணாடிக்குள் இருந்து 1863ல் வாழ்ந்த போர்வீரன் நிக்கலஸ் வருகின்றான். முதலில் அவனை வெறுத்தாலும் பின்னர் இரவில் அவனுக்காக விசேடமாக சமைத்து கண்ணாடி முன் மேசையிட்டு இருவரும் சாப்பிடுகின்றனர். இதன் பின்னர் இவர்களது சந்திப்பு ஒவ்வொரு நாளும் தொடர்கின்றது. காதலை நவீன காலத்து மணமகன் தெரிந்ததை விட, அந்தக் காலத்து போர்வீரன் புரிந்தது அதிகம். காதலின் ஒரு குறுக்கு வெட்டை இப் படம் பிரிதி பலிக்கின்றது. ஒரு சுய விசாரணை எனக் கூறலாம். இங்கு கண்ணாடி ஒரு முக்கிய பாத்திரம். பிரிதிபலிப்பை மாத்திரம் இக் கண்ணாடி வெளிப்படுத்தவில்லை. மனித உணர்வுகளின் உருமாற்றங்களையும், அகத்தின் சுயத்தையும் வெளிப்படுத்துகின்றது. சில வருடங்களின் முன்னர் மலையாள எழுத்தாளர் முகுந்தனின் ஒரு சிறுகதை காதலைப்பற்றிய ஒரு சுய விசாரணையை வெளிப்படுத்தியது. அது போன்று இப் படமும் காதலை கேள்விக் குறியாக்கியுள்ளது. இப் படத்தை பார்த்து முடித்த பொழுது மறைந்த ஆத்மநாமின் கவிதை ஒன்று ஞாபகத்திற்கு வந்தது.



"வேறு யாருமில்லை
நான் தான்
எனக்கும் உங்களுக்கும் இடையில்
பல்லாயிரம் வருடம் வேறுபாடு"

இப் படத்தில் இரண்டாவது கதை SATURDAY NIGHT THIEF

சனியிரவு மனைவி வீட்டில் தனிமையில் உள்ளாள். கணவன் வியாபார விடயமாக வெளயூர் சென்று விடுகின்றான். கொள்ளையடிக்க வீட்டினுள் வரும் கள்ளன், படிப்படியாக மனைவியின் மனத்தில் இடம் பிடித்து விடுகின்றான். திருடன் அவளின் மனதினுள் பூட்டி வைத்திருந்த திறமைகளை வெளிக்கொணர்கின்றான். அவளது இசையை இரசித்து கேட்கின்றான். அவளது உள் மன உணர்வுகளை பாராட்டுகின்றான். ஆணாதிக்க சமூகத்தில் திருமணங்கள் ஆண்களின் உடல் மொழியின் ஆதிக்கத்திலேயே உள்ளன. அதன் வெளிப்பாட்டை இப் படம் சிறப்பாக பதிவு செய்துள்ளது. கெய்ரோ ரைம் போன்ற பல படங்கள் இக் கருவின் அடிப்படையை கொண்டிருந்தாலும் இப் படம் வெளிப்படுத்திய விமர்சனம் அப் படங்களில் வெளிப்படவில்லை.

பத்திரகிரியார் சொன்னார் "நான் என்று அறிந்தவனை நான் அறியாக் காலம் எல்லாம் தான் என்று நீ இருந்தனை அறிவது எக்காலம்".

PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

$559,900

Whitby - Country Lane/Rossland
4 Rooms, 3 Washrooms
Basement finished

$569,900

Pickering - Dixie/Finch
4 Rooms, 3 Washrooms

$575,000

Ajax - Taunton/Westney
4 Rooms, 3 Washrooms

$570,000

Pickering - Whites/Finch
4+1 Rooms, 4 Washrooms
Basement finished

$579,900

Ajax - Westney/Lake Driveway
3 Rooms, 3 Washrooms

$595,000

Ajax - Rotherglen/Hwy#2
4+3 Rooms, 5 Washrooms

$599,000

Pickering - Brock/Dellbrock
4+2 Rooms, 4 Washrooms

$599,800

Whitby - Nichol
4+2 Rooms, 4 Washrooms
Basement finished

$599,900

Whitby - Taunton/Garden
4 Rooms, 5 Washrooms
Basement finished

$609,900

Oshawa - Grandview St N/Conlin Rd E
4+1 Rooms, 4 Washrooms

$610,000

Ajax - Westney/Rossland
4 Rooms, 3 Washrooms

$619,000

Pickering - Woodview/Twyn Rivers
3 Rooms, 4 Washrooms
Basement finished

$619,000

Pickering - Brock/Dellbrook
4+1 Rooms, 4 Washrooms

$618,000

Ajax - Salem/Rossland
4 Rooms, 3 Washrooms

$639,900

Ajax - Taunton/Salem
4 Rooms, 4 Washrooms
Basement finished

$640,900


Ajax - Harwood/Taunton
4 Rooms, 4 Washrooms



HomeLife/Future Realty Inc., Brokerage
#205-7 Eastvale Drive, Markham, ON L3S 4N8
Bus : 905 201 9977 / Fax: 905 201 9229
Independently Owned and Operated, REALTOR * Sales Representative

HomeLife HIGHER STANDARDS

Uthayan Sivarajah 416 301 5555
Sugan Sivarajah 905 201 0066
Raj Sivarajah 416 843 3333
SivaKumar Sivarajah 416 453 7777



கண்
சம்பந்தமான பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய முத்திரைகளை பற்றி ஆராய்வோம்

நலம் தரும் முத்திரைகள்

கண் சம்பந்தமான பிரச்சனைகளைத் தீர்க்கக்கூடிய முத்திரைகள் பற்றி ஆராய்வோம்

1. **வாயு முத்திரை** (சாதாரண கண்களுக்கு)



செய்முறை: சுட்டுவிரலை மடித்துப் பெருவிரலின் அடியில் வைத்து பெருவிரலை அதன்மேல் வைத்து மிதமான அழுத்தம் கொடுக்கவும். இரு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவும். மற்றைய மூன்று விரல்களையும் நீட்டி வைத்துக்கொள்ளவும்.

அமரும் முறை: பத்மாசனத்திலோ சுகாசனக்கிலோ அமர்ந்து செய்யலாம். அப்படி அமர முடியாதவர்கள் கதிரையில் அமர்ந்தும் செய்யலாம். கண் சம்பந்தமான பிரச்சனைகளுடன் மூட்டு சம்பந்தமான பிரச்சனைகளும் இருப்பவர்கள் இந்த முத்திரையைச் செய்து பயன்பெறலாம்.

நேர அளவு: ஒரு நாளைக்கு மூன்று தரம் பதினைந்து நிமிடங்கள் உணவுக்கு முன் செய்தால் கூடிய பயன் பெறலாம்.

2. **வாருணி முத்திரை** (கண் எரிச்சலுக்கும் வறட்சியான கண்களுக்கும்)



செய்முறை: உங்களுடைய ஐந்தாவது விரலின் நுனியை (கடைசி விரல்) பெருவிரலின் (முதல் விரல்) நுனியால் தொடவும். மிதமான அழுத்தம் கொடுக்கவும். மற்றைய மூன்று விரல்களையும் நீட்டி வைத்திருக்கவும்.

அமரும் முறை: பத்மாசனத்திலோ சுகாசனக்கிலோ அமர்ந்து செய்யலாம். அப்படி அமர முடியாதவர்கள் கதிரையில் அமர்ந்தும் செய்யலாம். இரத்தம் சம்பந்தமான பிரச்சனைகள் இருப்பவர்களும் வறண்ட சருமம் இருப்பவர்களும் இம் முத்திரையால் பயன்பெறலாம்.

நேர அளவு: 10-15 நிமிடங்களுக்குத் தினமும் செய்யவேண்டும்.

3. **ஜலசமக் முத்திரை** (கண்ணில் அதிகப்படியான நீர் வடிவதைக் குறைப்பதற்கு)



செய்முறை: நடுவிரலை மடித்து உள்ளங்கையைத் தொட்டவாறு வைத்துக் கொள்ளவும். பெருவிரலால் நடுவிரலின் நடுப்பகுதியில் மிதமான அழுத்தம் கொடுக்கவும். மீதம் மூன்று விரல்களையும் நேராக வைத்திருக்கவும். சீராகச் சுவாசிக்கவும். முழுக் கவனமும் செய்யும் முத்திரையில் இருக்கவேண்டும். இரு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவும். இம் முத்திரை கண்களில் அதிகப்படியான நீர்வடிதலைக் குறைப்பதுடன் மூக்கிலிருந்து நீர்வடிவதையும் குறைக்கிறது. இம் முத்திரையைத் தொடர்ந்து முப்பது நிமிடங்களாவது செய்யவேண்டும்.

4. **சூரிய முத்திரை** (கற்றக் பிரச்சனைக்கு)



செய்முறை: மோதிரவிரலின் நுனிப்பகுதியை பெருவிரலின் அடிப்பகுதியில் வைக்கவும். பின்னர் பெருவிரலை மோதிரவிரலின் மேல் வைத்து லேசான அழுத்தம் கொடுக்கவும். மற்றைய மூன்று விரல்களையும் நேராக வைத்திருக்கவும். இரு கைகளிலும் ஒரே நேரத்தில் செய்யவும். தினமும் முப்பது நிமிடங்கள் இம் முத்திரையைச் செய்து அதிக பயன் பெறலாம்.

4. **கயன் முத்திரை**



செய்முறை: பெருவிரலின் நுனிப்பகுதியை சுட்டுவிரலின் நுனிப் பகுதியால் தொடவும். லேசான அழுத்தம் கொடுக்கவும். ஏனைய மூன்று விரல்களும் நேராக இருக்கவேண்டும். சாதாரணமாகச் சுவாசிக்கவும். இம்முத்திரையைச் சுகாசனம், பத்மாசனம் அல்லது வஜ்ராசனம் ஆகியவற்றில் ஒன்றில் அமர்ந்து செய்யலாம். முடியாதவர்கள் கதிரையில் அமர்ந்தும் செய்யலாம்.

இம்முத்திரையை ஒரு நாளில் 48 நிமிடங்கள் தொடர்ந்தோ அல்லது பகுதி பகுதியாகவோ செய்வதன் மூலம் முழுப் பயன்களும் பெறலாம்.



இறுக்கமான ஜீன்ஸ் அணிவது ஆரோக்கியமானதா?

இறுக்கமான ஜீன்ஸ் அணிவதால் ஆண்களின் விதைப்பைகள் பாதிக்கப்பட்டு, விந்தணு உற்பத்தி குறைக்கப்படுவதோடு, நெஞ்செரிச்சல் அதிகரிக்குமென்றும், தொடைத்தசைகளும் தோலும் பாதிக்கப்படுவதோடு, கால் நரம்புகளின் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு தசைகளும் பாதிக்கப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஆஸ்திரேலியாவில் பெண் ஒருவர் இறுக்கமான ஜீன்ஸ் அணிந்ததால் அவரது கால்கள் பெருமளவு உணர்விழந்த சம்பவத்தை அடுத்து, இறுக்கமான ஜீன்ஸ் அணிவதால் நரம்பியல் பாதிப்பு ஏற்படும் என்பதை தாங்கள் கண்டறிந்துள்ளதாக ஆஸ்திரேலிய மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

தனது உறவினர் ஒருவர் வீடு மாற்றுவதற்கு உதவச்சென்ற பெயர் குறிப்பிடப்படாத அந்த பெண், இறுக்கமான ஜீன்ஸ் அணிந்து பல மணி நேரம் முழங்கால்களை மடக்கி உட்கார்ந்திருக்கிறார். அதனால் அவரது கால்களின் கீழ்ப்பகுதியில் உணர்விழந்துபோன நிலையில் அந்த பெண் திடீரென மயங்கி விழுந்துவிட ஆபத்து அதிகமானது. அவரது கால்களின் கீழ்ப்பகுதி பெருமளவு வீங்கியிருந்ததால் அவர் அணிந்திருந்த ஜீன்ஸ் கழற்ற முடியாமல் அதை அவசர அவசரமாக வெட்டி எடுத்துவிட்டு அவருக்கு நான்கு நாட்களுக்கு மருத்துவமனையில் வைத்து நரம்பூசி மூலம் மருந்து செலுத்தப்பட்டு தொடர் சிகிச்சையளிக்கப்பட்டது.

இரத்த ஓட்டத்தை தடுத்து நரம்புகளை பாதிக்கக்கூடும்

அவர் இறுக்கமான ஜீன்ஸ் அணிந்து பல மணிநேரம் அமர்ந்திருந்ததால் அவரது கால்களுக்கான இரத்த ஓட்டம் தடைபட்டு பாதிப்பு ஏற்பட்டதாகவும், அத்துடன் அவரது கால் தசைகள் மற்றும் நரம்புகளுக்கும் சேதம் ஏற்பட்டதாகவும் மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.'ஜர்னல் ஆப் நியூராலஜி, நியூரோசர்ஜரி மற்றும் சைக்கியாட்ரி' என்ற மருத்துவ சஞ்சிகையில் இது குறித்த மருத்துவர்களின் குறிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.



இறுக்கமான ஜீன்ஸ் அணிவது உடலுக்கு நல்லதல்ல என்கிற எச்சரிக்கை விடப்படுவது இது முதல் முறையல்ல. இளம்தலைமுறையினர் மத்தியில் தங்களின் உடல் வனப்பை வெளிப்படுத்தும் நாகரிக உடையாக இறுக்கமான ஜீன்ஸ் பார்க்கப்பட்டாலும், பெரிதும் விரும்பப்பட்டாலும், அது உடல் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல என்கிற எச்சரிக்கைகள் தொடர்ந்தும் மருத்துவர்களால் விடுக்கப்பட்டு வந்திருக்கின்றன.

ஏற்கனவே பல ஆய்வாளர்கள் இறுக்கமான, லொ கட் ஜீன்ஸ்களை அணிபவர்களுக்கு தொடைகளில் வலியும், எரிச்சலும் ஏற்படுவதாக ஆய்வாளர்கள் எச்சரித்திருந்தனர்.

விதைப்பைகள் பாதிக்கப்பட்டு விந்தணு உற்பத்தி குறையும்

அதிலும் ஆண்கள் இப்படியான இறுக்கமான ஜீன்ஸ்களை தொடர்ந்து அணிந்தால் அவர்களின் விதைப்பைகளின் அமைப்பே மாறி, திருகப்பட்ட தோற்றத்தை பெறும் என்று எச்சரிக்கும் மருத்துவர்கள் ஆண்களின் விந்தணு உற்பத்தியும் இதனால் பாதிக்கப்படும் என்றும் தெரிவிக்கிறார்கள்.

அதனால் தான் குழந்தை பெற விரும்பும் ஆண்கள் இறுக்கமில்லாத உள்ளாடைகள் மற்றும் கால் சராய்களை அணியும்படி தாங்கள் பரிந்துரைப்பதாக தெரிவிக்கிறார் மருத்துவர் சாரா ஜார்விஸ்.

காரணம் இறுக்கமான உடைகள் அணியும்போது ஆணின் விதைப்பைகள் தொடர்ந்து உடலோடு அழுத்தி இறுக்கிவைக்கப்படுகின்றன. அது விதைப்பைகளின் வெப்பத்தை அதிகரிக்கச் செய்து விந்தணு உற்பத்தியை பாதிக்கும் என்கிறார் சாரா. எனவே குழந்தை பெற விரும்பும் ஆண்கள் ஆரோக்கியமான விந்தணு உற்பத்திக்கு உதவும் வகையில் இறுக்கமான ஜீன்ஸ் அணியாமல், காற்றோட்டமான ஆடைகளை அணியவேண்டும் என்கிறார் அவர்.

சிறுநீர்ப்பாதைத் தொற்று மற்றும் நெஞ்செரிச்சலை அதிகரிக்கும்

சிறுநீர்ப்பாதையில் தொற்று இருப்பவர்களும் கூட இறுக்கமான ஜீன்ஸ் அணியக்கூடாது என்று மருத்துவர்கள் எச்சரிக்கிறார்கள். காரணம் இறுக்கமான உடைகள் அவர்களின் சிறுநீர்ப்பாதை தொற்றை அதிகரிக்கச் செய்யும் என்றும் மோசமடையச் செய்யும் என்றும் மருத்துவர்கள் அறிவுரை கூறுகிறார்கள்.

அதேபோல, நெஞ்செரிச்சல் பிரச்சனை இருப்பவர்களும் இறுக்கமான ஜீன்ஸ் அணியக்கூடாது என்று மருத்துவர்கள் கூறுகிறார்கள். காரணம் இறுக்கமான ஜீன்ஸ்கள், அடிவயிற்றில் கூடுதலான அழுத்தத்தை செலுத்துவதால், வயிற்றில் சுரக்கும் அமிலங்கள் மேல்நோக்கி உந்தப்பட்டு ஏற்கனவே இருக்கும் நெஞ்செரிச்சல் பிரச்சனையை மேலும் அதிகப்படுத்தும் என்கிறார்கள் மருத்துவர்கள்.

அதேசமயம், இத்தகைய ஆபத்துக்களின் சதவீதத்தை அளவுக்கு அதிகமாக நினைத்து கவலைப்படத் தேவையில்லை என்றும் கூறுகிறார் மருத்துவர் ஜார்விஸ்.

நல்ல ஆரோக்கியத்துடன் இருப்பவர்கள் தங்களின் உடல் வனப்பை காட்ட நாகரிக உடையாக இறுக்கமான ஜீன்ஸ் அணிய விரும்பும்போது அதில் இருக்கும் ஆபத்தையும் உணர்ந்திருப்பது அவசியம் என்பதே மருத்துவர்களின் அறிவுரையாக இருக்கிறது.





பிறந்த நாள் பரிசு

மன்னர் கிருஷ்ண தேவராயருக்குப் பிறந்தநாள் விழா. நகரமெல்லாம் தோரணம் வீடெல்லாம் அலங்காரம் மக்கள் தங்கள் பிறந்தநாள் போல மன்னரின் பிறந்த நாளை மகிழ்ச்சியோடு கொண்டாடினர்.

முதல் நாள் இரவே வீதிகள் தோறும் ஆடல் பாடல் நிகழ்ச்சிகள் வாணவேடிக்கைகள் அரண்மனையில் வெளிநாடுகளில் இருந்து வந்த அரச பிரதானிகளுக்கு விருந்து பரிமாறப்பட்டது. மறுநாள் அரச சபையில் அரசருக்கு மரியாதை செலுத்துதல் நடந்தது.


முதலில் வெளிநாடுகளில் இருந்து வந்த அரச பிரதானிகள் தங்கள் நாட்டு மன்னர்கள் அனுப்பிய பரிசுகளைத் தந்தனர். பிறகு அரச பிரதானிகள் பொதுமக்கள் மன்னருக்குப் பரிசளித்து மரியாதை செலுத்தினார்கள். அதன் பிறகு அரசரின் நெருங்கிய நண்பர்கள் தங்கள் பரிசுகளை அளித்தனர்.

அப்போது பெரியதொரு பொட்டலத்துடன் தெனாலிராமன் உள்ளே நுழைந்தார். அரசர் உட்பட எல்லோரும் வியப்பாகப் பார்த்தனர். மற்றவர்களிடம் பரிசுகளை வாங்கித் தன்னருகே வைத்த மன்னர் தெனாலிராமன் கொண்டு வந்த பரிசுப் பொட்டலம் மிகப் பெரிதாக இருந்ததால் அவையிலுள்ளவர்கள் ஆவலோடு என்ன பரிசு என்று பார்த்ததால் அந்தப் பொட்டலத்தைப் பிரிக்கும்படி தெனாலிராமனிடம் கூறினார் அரசர்.

தெனாலிராமன் தயங்காமல் பொட்டலத்தைப் பிரித்தார். பிரித்துக் கொண்டே இருந்தான் பிரிக்கப் பிரிக்க மடல்கள் காலடியில் சேர்ந்தனவே தவிர பரிசுப் பொருள் என்னவென்று தெரியவில்லை. அதனால் எல்லோரும் ஆவலுடன் கவனித்தனர். கடைசியில் மிகச் சிறிய பொட்டலமாக இருந்ததைப் பிரித்தான். அதற்குள் நன்றாகப் பழுத்துக் காய்ந்த புளியம் பழம் ஒன்றிருந்தது.

அவையினர் கேலியாகச் சிரித்தனர். அரசர் வாயைப் பொத்தி சிரிப்பை அடக்கியதுடன் "தெனாலிராமன் கொடுத்த பரிசு சிறிதாக இருக்கலாம் அதற்கு அவன் கொடுக்கப் போகும் விளக்கம் பெரிதாக இருக்கலாம் அல்லவா?" என்று அவையினரைப் பார்த்துக் கூறிவிட்டு தெனாலிராமன் பக்கம் திரும்பி "ராமா இந்த சிறிய பொருளைத் தேர்ந்தெடுத்ததன் காரணம் என்ன ?" எனக் கேட்டார்.

"அரசே ஒரு நாட்டை ஆளும் மன்னர் எப்படி இருக்க வேண்டும் என்ற தத்துவத்தை விளக்கும் பழம் புளியம்பழம் ஒன்று தான். மன்னராக இருப்பவர் உலகம் என்ற புளிய மரத்தில் காய்க்கும் பழத்தைப் போன்றவர். அவர் பழத்தின் சுவையைப் போல இனிமையானவராக இருக்க வேண்டும். அதே நேரத்தில் ஆசாபாசங்கள் என்ற புளியம்பழ ஓட்டில் ஒட்டாமலும் இருக்க வேண்டும். என்பதை விளக்கவே இந்தப் புளியம்பழத்தைப் பரிசாகக் கொண்டுவந்தேன். புளியம்பழமும் ஓடும் போல இருங்கள்" என்றான்.



அவையினர் கைதட்டி ஆரவாரம் செய்தனர். மன்னர் கண்கள் பனிக்க ஆசனத்தை விட்டு எழுந்து தெனாலிராமனைத் தழுவி "ராமா எனக்குச் சரியான புத்தி புகட்டினாய் ஒரு பிறந்தநாள் விழாவுக்கு இத்தனை ஆடம்பரம் தேவையில்லை. பொக்கிஷப் பணமும் பொதுமக்கள் பணமும் வீணாகும் படி செய்துவிட்டேன். உடனே விசேடங்களை நிறுத்துங்கள். இனி என் பிறந்த நாள் அன்று கோயில்களில் மட்டுமே அர்ச்சனை ஆராதனை செய்யப்பட வேண்டும். அவசியமில்லாமல் பணத்தை ஆடம்பரமாகச் செலவு செய்யக் கூடாது" என உத்தரவிட்டார்.

தெனாலிராமனின் துணிச்சலையும் சாதுரியத்தையும் எல்லோரும் பாராட்டினார்கள். அரசர் தனக்கு வந்த பரிசுப் பொருள்களில் விலை உயர்ந்தவற்றை எடுத்து தெனாலிராமனுக்குப் பரிசாகக் கொடுத்தார்.

திமிங்கிலங்கள் சாதாரணமாக 5 ஆயிரம் கி.மீ தூரம் பயணம் செய்யக் கூடியவை. குட்டியாக இருக்கும் போதே அது தனது நீண்ட தூர பயணத்தை ஆரம்பித்து விடும்.

ஆனால் ஒரு திமிங்கிலம் 9650 கி.மீ தூரம் பயணம் செய்து உலக சாதனையை படைத்தும் உள்ளது என்பது குறிப்பிடத்தது.

இயற்கையான அடையாளங்கள் மற்றும் மரபணு மூலம் அடையாளம் காணப்பட்ட ஒரு பெண் திமிங்கிலம் பிரேசில் நாட்டுக் கடலில் கடந்த 1990 ஆம் ஆண்டு காணப்பட்டது. இந்த திமிங்கிலம் இரு ஆண்டுகளாகக் கண்காணிக்கப்பட்டு அதன் அசைவுகளை படம் பிடித்துள்ளனர் ஆராய்ச்சியாளர்கள். மொத்தமாக 2001 புகைப்படங்கள் எடுத்துள்ளனர்.




2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 21 ஆம் திகதி இந்தத் திமிங்கிலம் மடகாஸ்கர் தீவில் கிழக்குக் கரைப் பகுதியில் காணப்பட்டது. இந்த இரு இடங்களுக்கும் இடையே உள்ள தூரம் 9800 கி.மீரை விட அதிகமாகும்.

இந்தத் திமிங்கிலம் ஏன் இவ்வளவு தூரம் பயணம் செய்தது என்பதை ஆராய்ச்சியாளர்களால் இதுவரை கண்டுபிடிக்க முடியவில்லை.



செயலில் கவனம்



விளையாட்டு



Winsor Spitfires of the Ontario Hockey League ற்குத் தெரிவாகியுள்ள கனடியத் தமிழர் வேலன் நந்தகுமார். இவரது சகோதரர் ராமன் நந்தகுமார் Toronto Patriots கழகத்திற்காக விழையாடிவருகிறார். இவர்கள் இவ்விளையாட்டில் சிறந்து விளங்கி கனடிய தமிழ் சமுகத்திற்குப் பெருமை சேர்க்க எமது வாழ்த்துகள்.

நியுசிலாந்திலிருந்து இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுலாவொன்றை மேற்கொண்டிருக்கும் நியுசிலாந்தின் Black Caps அணிக்கும் இலங்கை Sanath Jayasuriya Cricket Academy அணிக்கும் இடையே இடம்பெற்ற 19 வயதுக்குட்பட்டவர்களுக்கான ஒரு நாள் கிரிக்கெட் போட்டி கொழும்பு சி.சி.சி மைதானத்தில் நடைபெற்றது. Sanath Jayasuriya Cricket Academy அணியின் சார்பில் 3 கனடிய வீர்கள் பங்குபற்றியிருந்தனர். விறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் கனடிய கிரிக்கெட் வீரர்களான காவியன் நரேஸ், ஆனந்தராஜ் சான், அலெக்சாண்டர் ஜொனதன் ஆகிய வீரர்கள் சிறப்பான துடுப்பாட்டத்தினை வெளிப்படுத்தியிருந்தனர்.



செய்திகளுக்காக மட்டுவில் ஞானக்குமாரன்

17வது அரங்காடல் நிகழ்வும் ஐந்து நாடகங்களும்

சில குறிப்புக்கள்.

நாடகங்களின் இரண்டாவது காட்சிக்காக மண்டப வாயிலிற்கு நான் போன போது முதலாவது காட்சிமுடிந்து பார்வையாளர்கள் வெளியே வந்து கொண்டிருந்தார்கள். இன்னமும் நிறைய நேரமிருக்கிறது என்று எண்ணியபடி ஓரமாக ஒதுங்கி நின்றேன். பார்த்துவிட்டு வந்தவர்களில் தெரிந்தவர்களைக் கண்ட, இரண்டாம் காட்சியை பார்க்க வந்தவர்கள் குசலம் விசாரிப்பதையும் "எப்பிடி நாடகங்கள்" என்று கேட்பதையும் அவதானித்தபடி எனக்கும் தெரிந்த யாராவது வருகிறார்களா என்று கண்களால் நோட்டம் விட்டுக்கொண்டிருந்தேன். நாடகத்தில் நடித்த ஓரிரு நடிகர்களும் வெளியே தென்பட்டார்கள். இரண்டாவது காட்சிக்கு வந்தவர்கள் கேட்ட கேள்விகளுக்கு கிடைக்கின்ற பதில்களை நானும் ஆர்வத்துடன் காதுகளைக் கூர்மையாக்கிக் கொண்டு கேட்கமுயன்றேன். கிடைத்த பதில்கள் பலவிதமாக அபிப்பிராயங்களின் கலவையாக அமைந்திருந்தன. "பரவாயில்லை", "நல்லாயிருந்துது", "இந்தமுறை அவ்வளவு வாய்க்கேல்லை", என்ற விதமாக அமைந்திருந்த பதில்கள் எனக்குத் திருப்தியாக இருந்தன. ஒன்றுக்கு மேற்பட்ட நாடகங்கள் நிகழ்த்தப்படும் ஒரு நிகழ்வு பற்றிய உடனடி அபிப்பிராயம் இப்படியாகத் தான் அமைய முடியும் எனபது எனது கருத்து. அதிலும் குறிப்பாக எந்த ஒரு குறிப்பிட்ட ரசனை சார் பிரிவினருக்கு என்றல்லாமல் பொதுவாக அனைவருக்குமான அரங்காக நடாத்தப்படும் ஒரு நாடக நிகழ்வில் இப்படி மாறுபட்ட அபிப்பிராயங்கள் வருவது தவிர்க்க முடியாததும் கூட என்று எனக்குள் எண்ணியபடி நின்றுகொண்டிருந்தேன்.

"ஓ.. நீங்கள் இப்பதான் வாறியளோ..?... நான் நீங்கள் முதல் வந்திருப்பியளெண்டு உங்களைத் தேடினனான்" என்றபடி எனது நண்பர் ஒருவர் என்முன் வந்து நின்றார். கலை, இலக்கியம், நாடகம், இசை என்பவற்றில் ஆர்வமுள்ள நண்பர் அவர். எனக்கு இந்த நேரம் தான் வசதி" என்று சொல்லியபடி "எப்பிடி இருந்தது" என்ற கேள்வியை ஆர்வத்தை அடக்க முடியாமல் அவரிடம் கேட்டுவைத்தேன். சிறிது தயக்கத்தின் பின் " பாக்கத்தானே போறியள்.. பாருங்கோவன்.. உங்களுக்கே தெரியும்" என்று பதில் சொன்னார் பிடிகொடுக்காதவராய். "என்ன உப்பிடிச் சொலலுறியள்... ஏன் நாடகங்கள் சரியில்லையோ" என்று கேட்டுவைத்தேன். "சீச்சீ அப்பிடியில்லை.." என்று இழுத்தார். அவருக்கு உடனடியாகப் பதில் சொல்ல விருப்பமில்லை. நிதானமாக யோசித்துப் பதில் சொல்ல வேண்டிய ஒரு கேள்வி இது என்று அவருக்குத் தோன்றியிருக்கலாம். அவசரப்பட்டுப் பதில் சொல்வது சிலவேளை அவரது ரசனை பற்றி நான் குறைவாக நினைத்தவிடக் காரணமாகிவிடும் என்று அவர் நினைத்திருக்கக் கூடும். வெளியிலே மற்றவர்கள் எப்படியான அபிப்பிராயங்களைக் கொண்டிருக்கிறார்கள் என்று தெரிந்துகொண்டு எப்படிப் பதில் சொல்வது என்று தீர்மானிக்க வேண்டும் என்ற ஜாக்கிதை உணர்வில் அவர் இப்படிப் பதில் சொல்லியிருக்கலாம் என்று தோன்றியது. அதற்குப்பிறகு நான் அவரிடம் அது பற்றிக் கேட்கவில்லை. "எப்பிடி வந்தனிங்கள்","எப்பிடிப் போகப்போறீங்கள்" போன்ற பரஸ்பர விசாரணைகளோடு எங்கள் விசாரணை முடிந்து போயிற்று.

அரவிந்தன்.

மனவெளி அரங்காற்றுகைக் குழுவினரால் அண்மையில் (ஏப்ரல்26,2015) மேடையேற்றப்பட்ட பதினேழாவது அரங்காடல் நிகழ்வின் இரண்டாம் காட்சிக்கான எனது உள்நுளைவு இப்படித்தான் நிகழ்ந்தது. ஏறக்குறைய மணடபம் நிறைந்த



காட்சியாக அமைந்த இந்த நாடக விழாவில் ஐந்து அரங்க நிகழ்வுகள் நடைபெற்றன. யாழினி ஜோதிலிங்கத்தின் நீ.ல.ம், ஔவை விக்னேஸவரனின் காற்றெல்லாம் தென்றலல்ல, ஐஸ்வரியா சந்துருவின் சிருஸ்டி, சபேசனால் நெறிப்படுத்தப்பட்ட சோபாசக்தியின் செரஸ்தேவதை, மெலிஞ்சி முத்தனின் மோகப்பறவை ஆகிய ஐந்து அரங்க நிகழ்வுகள் அன்று மேடையேறின. இந்த ஐந்து நிகழ்வுகளும் ஒன்றிலிருந்து ஒன்று வேறுபட்ட விதத்திலமைந்த தனித்துவமான நிகழ்வுகள் என்பது இந்த விழாவின் சிறப்பு என்று சொல்லலாம். அரங்கில் நிகழ்த்தப்படும் நிகழ்வு என்ற பரந்த அர்த்தத்தில் இவை ஐந்தும் நாடகங்களே என்று சொல்லப்பட முடியுமாயினும், அவற்றின் காடசிப்படுத்தல் முறை, நாடகமாந்தர்கள் தமது நடிப்பை வெளிப்படுத்தும் விதம், அவற்றை வெளிப்படுத்த அவர்கள் கையாண்ட வடிவம் என்பவற்றால் அவற்றின் அவை வெவ்வேறு அரங்க நிகழ்வுகளின் தன்மையையும் தனித்துவங்ளையும் கொண்டிருந்தன. அதேவேளை இந்த ஐந்து நிகழ்வுகளதும் மையப் பொருளாக பெண்ணின் பல்வேறு பரிமாணங்கள் அமைந்திருந்தன என்பதும் கவனத்துக்குரிய ஒன்றாகும். பெண்ணின் வாழ்வில் அவள் குழந்தையாக, சிறுமியாக, இளம் பெண்ணாக, போர்க் கைதியாக, மனைவியாக, தாயாக என்று வாழ்வின் பல்வேறு நிலைகளில் எதிர்கொள்கிற, வெளிப்படுத்துகின்ற வெவ்வேறு வகையான உணர்வுகளையும் கேள்விகளையும் ஏக்கங்களையும் எதோ ஒரு விதத்தில் பதிவு செய்பவையாக இந்த நாடகங்கள் அமைந்திருந்தன. மனவெளி அமைப்பினால் ஒரு திட்டமிட்ட விதத்தில் இந்த நோக்கத்துடன் இது ஒழுங்குபடுத்தப்படவில்லை என்று தெரியவருகிறது. ஆயினும், இந்நாடகங்கள் இன்றைய காலகட்டத்தில் உலகளாவிய ரீதியில் பெண்கள் எதிர்கொள்ளும் சவால்களின் பிரதிபலிப்பாக வந்திருப்பது வெறும் தற்செயல் அல்ல, சூழலின் யதார்த்தத்தின் காரணமாக தவிர்க்க முடியாது எழும் இயல்பான எதிர்வினை என்று தோன்றுகிறது.

நிகழ்ச்சியின் ஆரம்ப நிகழ்வான யாழினியின் நீ.ல.ம். நாடகம் மேடையின் உச்சியிலிருந்து தொங்கும் நீண்ட துணிகளின் அந்தங்கள் கைகளில் பிணைக்கப்பட்ட படி தரையில் படுத்திருக்கும் மனித உருவங்களின் மெல்லிய அசைவுடன் ஆரம்பமாகிறது. அந்த உருவங்கள் மெதுவாக அசைகின்றன. பின்னர் மெதுவாக நீ..ல..ம்..நீ..ல..ம்.. என்று அரற்றுகின்றன. அந்த அரற்றல் பின்னர் கடல் நீ..ல..ம் வான் நீ..ல..ம்.. என்று மாறிமாறி ஒவ்வொருவராலும் உரைக்கப்படுதலாக வளர்கிறது. இந்தக் குரல்களின் ஒலி மாறிமாறி ஒலிப்பதுடன் அந்த உருவங்கள் எழுந்தும் அசைந்தும் இருப்பின் இறுக்கத்திலிருந்து விடுபட முயல்வதும் துவள்வதும் அந்த முயற்சியில் அவை தமக்குள்ளேயே முரண்படுவதும் ஆற்றாமையுடன் அரற்றுவதுமாக நாடகம் விரிகிறது. பூரணமற்ற வார்த்தை ஒலிகள் அல்லது முழுமையற்ற

சிந்தனையின் தெறிப்புக்களாக வரும் வார்த்தைகள், விடுபட முடியாமையாமையால் வரும் அவலத்தின் அழுத்தங்கள். ஆண்களும் பெண்களுமாய் அமைந்த அந்த உருவங்களின் கைகளில் விட்டுவிட்டு ஒளிரும் வெளிச்சம், அவை வெளிப்படுத்தும் உடல் மொழி என்பவற்றினூடாக நாடகம் பார்வையாளர்களுடன் பேச முயல்கிறது. அல்லது இவை எல்லாமாக இணைந்து எழுப்பும் தொனியை பார்வையாளர்கள் தமது அனுபவத்திற்கேற்ப புரிந்துகொள்ளும் விதத்தில் அது தன்னை வெளிப்படுத்திக் கொள்கிறது என்று சொல்லலாம். மேடையிலும் பார்வையாளர்களின் மனதிலும் அது கிளப்பும் அதிர்வுகள் விடுதலை வேட்கைக்கும் அதற்கெதிராக மனித மனதைக் கட்டிப் போடும் தடைகளுக்கும் இடையிலான தொடரும் மௌனமான இழுபறியை குறியீட்டுவடிவில் உணர்த்த முயல்கின்றன. ஆம் முயல்கின்றன என்றுதான் சொல்லவேண்டும். அந்த முயற்சிகள் வெற்றியை நோக்கி நகர்கின்றனவா, தோல்வியில் விழுந்து உழல்கின்றனவா என்பது இங்கே இரண்டாம பட்சமாகிவிடுகிறது. உழல்வின் துயரம் அதன் யதார்த்தம் என்பவை முழு மேடையிலும் நிகழும் உருவ அசைவுகளிலும் குரல்களிலும் உறைவதும் உருகுவதுமாய் மாறிமாறி உருக்கொள்கிறது. ஒரு அழகிய வர்ணக் கோலங்களைக் காட்டுகிற, நெஞ்சில் கனதியை ஏற்படுத்துகிற கனவாய் வெளிப்படும் இந்தக் காட்சிப்படுத்தல் நிகழ்வின் வெற்றிக்கு ஆதாரமாக அமைந்து விடுகிறது. யாழினியின் பிரதான கவனம் குவிக்கப்பட்டிருப்பதும் அதிலேதான். மேடையை முழுமையாக வியாபித்திருத்தல் திட்டமிட்ட வகையிலான முறிவிலா ஓட்டத்தை வழங்கும் அசைவுகள், அவற்றுக்கு ஒத்திசையும் விதத்திலான குரலொலிகள் என்று இந்த நிகழ்வு மனதில் பார்வையாளர்களை ஒன்றிப்போக வைப்பதில் வெற்றிபெற்றுவிடுகிறது. நாடக மாந்தர்களில் ஆண்களும் இருந்தபோதும் நாடகத்தின் தொனிப்பொருளின் மையமாக வெளிப்படத்தப்படும் உணர்வு பெண்ணை மையமாகக் கொண்டிருந்தது தெளிவு.

உரையாடலில் ஆங்கிலமும் கலக்கப்படல், பின்னணியாக வரும் கதையாடல் என்பவை பொருத்தம் தருவதாகப் படவில்லை. அவை பார்வையாளரின் ஒன்றிப்புக்குத் துணைபோவதாக அமைவதில் சற்று கூடுதல் கவனம் செலுத்தப்பட்டிருக்கலாம் என்பதைச் சொல்லவேண்டும். அரங்க நிகழ்வில் உடல் மொழிபோலவே பேச்சு மொழியின் உச்ச சாத்தியங்கள் குறித்தும் கவனம் கொள்ளப்படுவது பரந்து விரிந்த பொருள்தேடலுக்கும், அனுபவத்தை வழங்குவதில் வெற்றி பெறுவதற்கும் மேலும் உதவும். யாழினி உயிர்ப்பு நாடகவிழாவில் நிகழ்த்திய நிகழ்வின் தொடர்ச்சியாகவே இதையும் புரிந்துகொள்ளவதைத் தவிர்க்க முடியவில்லை. இரண்டினது கருப்பொருள்களும் கூட ஒருவிதத்தில் சம்பந்தப்பட்டவையாகவே அமைந்திருந்தமை இப்படித் தோன்றுவதற்குக் காரணமாக இருக்கலாம். அவரிடம் உள்ளார்ந்து இருக்கும் ஆற்றல் பரந்து விகசிக்க இந்த இறுக்கத்துக்கு வெளியில் நின்று பார்க்கும் நெறியாளராக அவர் தன்னை மாற்றிக்கொள்வது அவசியம் என்று சொல்லத் தோன்றுகிறது. இது அவருக்கு முடியும். அப்போது அவரால் நிறைய சாதிக்க முடியும்.

இரண்டாவதாக நடைபெற்றது ஔவையின் காற்றெல்லாம் தென்றலல்ல நாடகம். இந்த நாடகத்திற்கான பிரதி அவரது கவிதை ஒன்றை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்டிருந்தது. பெண்ணுடல் மீதான வன்முறைக்கெதிரான பெண்ணின்குரலையும் காலங்காலமாக தாய்மை இந்த வன்முறைக்கெதிராக கொண்டிருக்கம் அச்சத்தையும் பதிவுசெய்யும் விதத்தில் அமைந்திருந்தது. அண்மைக் காலங்களில் பரவலாக அதிகரித்துவரும் நெஞ்சை உறையவைக்கும் பெண்களுக்கெதிரான பாலியல் வன்முறைகளின் மீதான எதிர்நிலைப் பதிவாக அமைந்த இந்த நாடக முயற்சியின் காலப்பொருத்தம் காரணமாக இது மிகவும் முக்கியத்துவம் பெறுகிறது. தவிரவும் பாலியல் பலத்காரம் மேற்கொள்ளப்படுவது யாரால் என்பது வெளிப்படையாகவோ சூசகமாகவோ உணர்த்தப்படாமல் விடப்பட்டது. அது எவராக இருந்தாலும் அவர்கள் ஆண்களாக இருக்கும்பட்சத்தில் சாத்தியமே என்று காட்டுவதாக அமைந்துள்ளமையும் கவனத்துக்குரிய நாடகத்துக்கு வலுவூட்டுகின்ற நுண்ணிய செய்தி. மிகவும் நேர்படியான கதைசொல்லல் மூலம் பெண்கள மீது சமூகம் விதித்திருக்கும் சமூக கலாசார கட்டுப்பாடுகளின் அபத்தம், சமூகத்தில் அதிகரித்துவரும் பாலியல் ரீதியாக பெண்களுக்கு இளைக்கப்பட்டு வரும் கொடுமைகள், அவற்றை சமூகமும் சமூக நிறுவனங்களும் எதிர்கொள்ளும் விதம் என்பவை பற்றிய ஒரு காட்சிப்படுத்தலாக இந்த நிகழ்வு அமைந்திருந்தது. ஒரு வகையில் இந்த நாடகம் ஒரு சிறிய கதையினூடாக அவரது ஒரு கவிதையின் சாரத்தை நிகழ்த்திக் காட்டிய படைப்பாக்கம் என்று சொல்லலாம். இந்தவகையான நாடக உருக்களில் பொதுவாக பாத்திரங்களின் தெரிவும் அவர்கள் பேசும் உரையாடல்களின் தெரிவும் முழுமையான பாத்திரங்களை உருவாக்குவதை விட கருத்துக்களைப் பேசும் மனிதர்களாகவே பாத்திரங்கள் அமைந்து விடுவதுண்டு. குறுகிய நேரத்தில் நிகழ்த்தப்படும் இத்தகைய நாடகங்களில் இவை ஒருவகையில் தவிர்க்க முடியாதவையும் கூட. ஆயினும் பாத்திரங்கள் தெரிவுசெய்யப்பட்ட விதமும் காட்சிப்படுத்தப்பட்ட விதமும் அவை நடிக்கப்பட்ட விதமும் பெருமளவுக்கு மாறுபட்ட பாத்திரங்களின் குணவியல்புகளை அடையாளம் காணக்கூடியளவுக்கு உருவாக்கப்பட்டிருந்தமை கவனத்திற்குரியது. நாடகத்தில் வரும் எல்லா ஆண்பாத்திரங்களும பழமைவாதக் கருத்துள்ளவர்களாகவே இருந்தாரகள் என்பதும் நீதிமன்றக்காட்சி விதி என்ற தமிழ் திரைப்படக் காட்சியை நினைவூட்டுவதாக அமைந்திருந்தது என்றும் ஒரு சில பார்வையாளர்கள் நாடகம் முடிந்த பின்னர் பேசும்போது அபிப்பிராயப்பட்டிருந்தனர். ஆனால் இது போன்ற ஒரு நாடகத்தின் நோக்கம் மிகவும் தெளிவாகவும் எளிமையாகவும் வெளிப்படுத்த விரும்பிய கருத்தை வெளிப்படுத்தல் என்ற எல்லைக்கு மேல் போவதில்லை. அந்தக்கருத்தை கலாபூர்வமாகவும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடிய விதத்திலும் சொல்வதிலேயே அவை தமது பிரதான கவனத்தைக் குவிக்கின்றன. இங்கே பேசப்படும் வசனங்களும் அவை பேசப்படுகின்ற விதமும் தான் மிகவும் முக்கியமான பங்கை வகிக்கின்றன. இந்தக் கவிதை "சூழவுள்ள உலகம் முழுவதும் விறைத்துப்போன ஆண்குறிகளாய்" ஒரு தாய்க்குத் தெரிவது பற்றிச் சொல்கிறது. அது புள்ளிவிபரம் சார்ந்த பிரச்சினை அல்ல. மாறாக அது சூழலின் யதார்த்தம் எவ்வளவு குரூரமாக உள்ளது என்பதை வெளிப்படுத்துவது என்பதால் இந்த நாடகத்தை "மோசமான ஆண்களை மட்டும் காட்டும்" நாடகமாக விளங்கிக் கொள்ள முற்படுவது பொருத்தமல்ல என்று எனக்குத் தோன்றுகிறது. விதி திரைப்படக் காட்சி போன்றதாக நீதிமன்றக் காட்சி அமைந்திருந்தது என்பது ஒரு வகை நினைவுச்சிறையின் பாதிப்புத்தான். அதற்கும் இதற்கும் நீதிமன்றக்காட்சி என்பதை விட வேறு எந்தத் தொடர்பும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. ஆயினும் நாடகம் மார்க்கம் தியேட்டரின் வளங்களை முழுமையாகப் பயன்படுத்தியிருந்தால் இவை இன்னமும் சிறப்பாக அமைந்திருக்கும் என்பதையும் பாத்திரங்கள் மேடையினைப் பயன்படுத்திய விதத்திலும் இன்னும் மேலதிக கவனம் செலுத்தப்பட்டிருக்கலாம் என்பதையும் சொல்லவேண்டும். ஔவையின் கனடாவில் மேடையேற்றப்பட்ட முதலாவது நாடகம் இது என்ற வகையில் இதன் குறைபாடுகளையும் மீறி அதன் மற்றைய சிறப்புகளுக்காக பாராட்டத்தான் வேண்டும். பிரதான பாத்திரமேற்று நடித்த சுமதியினதும் குழந்தையாக நடித்த அருவியினதும் நடிப்பு சிறப்பாக







அமைந்திருந்தது.

மற்றைய பாத்திரங்களில் நடித்த நடிகர்களும் நன்றாக நடித்திருந்தார்கள். ஆயினும் அவர்களது நடிப்பு பூரணமாக வெளிப்படுத்தும் விதத்தில் மேடை பயன்படுத்தப்படிருந்தால் அவை இன்னமும் சிறப்பாக



அமைந்திருக்கும்.

மூன்றாவது நிகழ்வு சிறுவர்களை வைத்து தயாரிக்கப்பட்ட, ஐஸ்வரியா சந்துருவின் சிருஸ்டி என்ற உடல் மொழியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட ஒரு மேடை நிகழ்வு. சின்னஞ் சிறுவர்களை வைத்துச் செய்யப்பட்ட இந்த முயற்சி உண்மையில் எல்லா விதமான பார்வயாளர்களையும் ஈர்த்த ஒரு அருமையான முயற்சி. குழந்தைகளை வைத்துச் செய்யப்பட்ட போதும் பிறப்பின் பின்னான குழந்தைகளின் வளர்ச்சியில் ஆண்குழந்தைகளும் பெண்குழந்தைகளும் எவ்வாறாக வித்தியாசமான விதத்தில் நடந்துகொள்கிறார்கள் என்பதை நுணுக்கமான அசைவுகள் மூலம் வெளிப்படுத்திய விதம் பாராட்டுதற்குரியது. குழந்தைகள் மேடையில் வந்த விதமும் அவர்கள் நடித்த விதமும் மனதை நிறைப்பனவாக அமைந்திருந்தன. அந்தக் குழந்தைகளையும் ஐஸ்வரியா சந்துருவையும் மனநிறைவோடு பாராட்டலாம்.

நான்காவது நாடகம் சோபாசகதியின் செரஷ்தேவதை. நீண்ட இறுக்கமான வசனங்கள் அடங்கிய இரண்டு பாத்திரங்களைக் கொண்ட பிரதி. இதில் வரும் மூன்றாவது பாத்திரமான செரஸ் தேவதை பெரும்பாலும் எதுவும் பேசாது மேடையில் வீற்றிருக்கும் ஒரு பாத்திரம். குற்றம், தண்டனை, குற்றம் செய்தவருக்கு ஏற்படும் குற்ற உணர்வு, அதிகாரம், அதற்கு நியாயம் கற்பிக்கும் மதம், இவற்றுக்குப் பலியாகும் மக்கள், சமூகம் எதிர்கொள்ளும் அவலம், அதை ஒரு பெண்ணைக் குறியீடாகக் கொண்டு கதை வளர்க்கப்பட்டிருக்கும் விதம் என்று இந்த நாடகப்பிரதி பல விடயங்களை சர்ச்சைக்குள்ளாக்குவதன் மூலம் ஒரு தீவிர நாடகத்திற்குரிய தன்மைகளைக் கொண்ட பிரதியாக வளர்த்தெடுக்கப்பட்டிருக்கிறது. ஆயினும். நாடக வடிவில் எழுதப்பட்ட இப்பிரதி மேடையில் நடிப்பதற்காக எழுதப்பட்டதென்பதை விட வாசிப்புக்கான ஒரு பிரதியாகவே எனக்குத் தோன்றியது. இதை மேடை ஏற்றுவதற்கு ஏற்றவிதத்தில் சற்று மாற்றியமைத்திருக்கலாம் என்றுபட்டது.

நாடகத்தில் நடித்த தர்சன், பிரசாத் இருவரும் மிகவும் உணர்வு பூர்வமாக நாடகத்தில் ஒன்றிப்போய் நடித்திருந்தார்கள். பிரதியில் வரும் வசனங்களை, அவை பேசப்படும் சந்தர்ப்பம் என்பவற்றையும் அவற்றின வீச்சையும் பார்வையாளரிடத்தில் தொற்றவைப்பதில் இருவரது அக்கறையும் தெளிவாகத் தெரிந்தது. அவ்வார்த்தைகளுக்கேற்ற அழுத்தங்களையும் அதற்கேற்ற முகபாவங்களையும் வெளிப்படுத்திய நடிப்பு விதந்துரைக்கப்படவேண்டியது. செரஸ் தேவதையாக நடித்த தர்சினிக்கு அவரது ஆற்றலை வெளிப்படுத்தும் சந்தர்ப்பங்களை நாடகம் வழங்காவிட்டாலும், கிடைத்த சந்தரப்பத்தை அவர் சிறப்பாக பயன்படுத்தித் தன் திறமையைக் காட்டியிருந்தார்.




அதேவேளை செரஸ் தேவதையின் மேடையின் பின்னணியில் காட்டப்பட்ட உடல் மொழியும், மேடையில் பிரதான பாத்திரங்கள் தம் உடையை மாற்றுவதாக காட்டியதும் நாடகத்தின் போக்குக்கு வலுவூட்டுவதாகவோ பார்வயாளர்களுக்கு எந்தப் புது விடயத்தையும் நேரடியாகவோ குறியீடாகவோ உணர்த்துவதாகவோ அமையவில்லை. மாறாக நேரத்தை வீணே விழுங்கியதாகவே தோன்றியது. தவிரவும் தேவாலயத்தின் மதகுருவிடம் தண்டனையைக் கோருவதும், மதகுரு பேசும் மொழியின் தொனி வெளிப்படையாகவே வஞ்சகம் நிறைந்ததாக தெரியும் விதத்தில் காட்டப்பட்டதும் தர்க்கப் பொருத்தம் அற்றவையாகவே எனக்குத் தோன்றின. மேடைக்கெனச் செப்பனிடப்படாததால் மிக நீண்ட உரையாடல்களும் திரும்பத்திரும்ப ஒரே விடயங்கள் பேசப்படுவதும் ஒரு சில இடங்களில் சலிப்பூட்டும் தன்மையை ஏற்படுத்தின என்பதை மறுப்பதற்கில்லை.

குற்ற உணர்வும் தண்டனை கோரலும் நீண்ட உணர்வெழுச்சியுடன் வெளிப்படுத்தப்பட்ட பின், அதுவரை மக்களை, உண்மையை, நியாயத்தை யெல்லாம் காட்டும் குறியீடாக அமைந்த செரஸ்தேவதை, அதிகாரத்தின் கையில் கொல்லப்படுவதும் அதிகார அமைப்புக்கள் ஒன்று சேர்வதுமாக அமையும் இறுதிக் காட்சி அறைந்து சொல்லும் அரசியல் ஒருவகை அதிர்ச்சியூட்டலாக முன்வைக்கப்படுகிறது. இதுதான் நாடகத்தின் முக்கியமான மையமாகவும் அமைகின்றது. ஆயினும், யுத்தத்திற்கான காரணங்களோ அதற்கான நியாயங்களோ பேசப்படாத ஒரு நிலையில் பொத்தாம் பொதுவான யுத்தம் எப்போதுமே அரசியலிலிருந்து வேறாகப்பிரிக்கப்பட்ட மக்களுக்கு எதிரான ஒன்று என்று காட்டும் நுண்ணிய அரசியல் இதனூடாக வெளிப்படுவதை மறுப்பதற்கில்லை. குற்ற உணர்வின் மையமாகப் பேசப்படும் ஒரு பெண்பற்றிய உரையாடல்கள் இந்த விடயத்தை உணர்வு பூர்வமாக காட்டுவதன் மூலமாக இது வளர்க்கப்படுகிறது. இந்த நுண்ணரசியலின் அடிப்படையாக அமைவது ஒருவகைக் கற்பனாரீதியிலான அமைதி அல்லது சமாதானம் பற்றிய கோட்பாடு என்பது வெளிப்படை. அது ஒடுக்குமுறைக்கும் ஒடுக்கப்படலுக்குமிடையில் அவற்றில் எந்த மாற்றங்களுமில்லாமலே சமாதானமாக இருப்பது பற்றிய அபத்தக்கதையாடலின் சாரமாக அமைவது. தீவிர விவாதத்திற்கு உட்படுத்தப்பட வேண்டிய இந்தக்கருத்து உள்ளடங்கியிருந்தபோதும் ஒரு கலைப்படைப்பு என்றவிதத்தில் இந்த நாடகம் கவனிப்புக்குரியது என்பதில் சந்தேகமில்லை.

இறுதியானதும் பார்வையாளர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுமான நாடகம் மெலிஞ்சி முத்தனின் தென்மோடிக் கூத்தின் அம்சங்களை இணைத்து நிகழ்த்தப்பட்ட மோகப்பறவை. இனிய பாடல்கள், அழகான நடனங்கள், சிறப்பான நடிப்பு என்று எல்லாவகையிலும் பார்வையாளர்களைக் கவர்ந்ததாக இந்த நாடகம் அமைந்திருந்தது. நாடகத்தின் கதை சொல்லல் ஒரு கனவும் அந்தக் கனவுக்குள் நடக்கும் இன்னொரு கனவுமாக வளர்கிறது. சொர்ப்பனத் தீவை நோக்கிச் செல்லும் கப்பல் ஒன்றில் பயணிக்கும் ஒரு வயோதிபரின் கனவில் உருவான அவரது கற்பனைக் காதலி தான் மோகப் பறவை. இந்த மோகப்பறவை நாடகாசிரியரின் கனவையும் கனவுக்குள் வரும் வயோதிபரின் கனவையும் இணைத்து ஒரு சமூகக் கதையை முடித்து வைப்பதாக அமைகிறது இந்த நாடகம். ஈழத்தமிழரின் பாரம்பரியக் கலைகளில்

ஒன்றான தென்மோடிக் கூத்தின் அழகிய ஆட்டங் களையும் பாடல் மெட்டுக் களையும் சமகால கதை யொன்றோடு பொருத்தவதற் காகவே நாடகாசிரியர இதை ஒரு கனவில் விரியும் கதையாக உருவாக்கியிருக்கலாம். கனவில் விரியும் கதை என்பதால் அதன் எல்லைகளுக்கு எந்த மட்டுப்படுத்தல்களும் கிடையாது. கதை வல்வெட்டித் துறையிலிருந்து புறப்பட்டு உலகைச் சுற்றிவந்த தமிழர்களின் வரலாற்றுப் புகழ்பெற்ற அன்னபூரணி என்ற பாய்க்கப்பலிலிருந்து, ஈழப்போராட்ட காலத்தில் தமிழ்ப்பிரதேசத்தில் குவிக்கப்பட்ட சிங்கள ஆக்கரமிப்பு இராணுவத்தைச் சேர்ந்த இராணுவ வீரனொருவனை காதலித்து மணம் செய்து பின் விட்டுப்பிரிந்த பெண் சொல்லும் கதை வரை விரிய முடிகிறது. கூத்துக்கே உரித்தான காவியப்பாங்கிலமைந்த பேச்சு மொழியும் சாதாரண கிராமத்து நடுத்தர வர்க்கத்தின் இன்றைய வகை உரையாடலையும் இணைத்துப் பேசவும் முடிகிறது. இந்த இரண்டு அந்தங்களதும் இணைவைச் சாத்தியப்படுத்தும் விதத்தில் அமைந்த மெலிஞ்சியின் கனவு முயற்சி பாராட்டுக்குரியது. அவரது பாடல்களும் அவை பாடப்பட்ட விதமும் நடனாங்களை இணைத்திருந்த பொருத்தப்பாடும் அருமை. நாடகத்தில் பங்கேற்ற கலைஞர்கள் எல்லோரும் மிகச் சிறப்பாக நடித்திருந்தார்கள். குறிப்பாக சோக்கெல்லோ, பவானி, றொனாட், ஐஸ வரியா, அரசி ஆகியோரது ஆற்றுகைகள் இன்னமும் மனதில் நிற்கின்றன.

இந்தப் பிரதி காதல் தொடர்பாகவும் அது வயது, இனம் பண்பாடு என்பவற்றின் எல்லைகளைத் தாண்டியும் வரக்கூடிய ஒன்று என்பதையும், குடும்ப உறவு, நீண்டகால குடும்ப வாழ்க்கையில் இருவர் ஒன்றிணைந்து வாழ்வதென்பது அவர்களிடையே காதல் உறவு நிலைத்திருப்பதற்கான ஒரு அடையாளம் அல்ல என்பதையும் பேசும் ஒரு பிரதியாக அமைந்துள்ளது. இத்தகைய நுண்ணிய, மரபினை கேள்விக்குள்ளாக்கும் விடயங்களை, அது பேசுகின்ற அதே வேளை காதலுக்கும் உடல்சார்ந்த உறவுக்கும் இடையில் ஒரு கோடு போடுதல் போல வருகின்ற மரபார்ந்த கருத்தை வெளிப்படுத்தும் உரையாடல் சற்று இடறுவதாக அமைந்திருந்ததை குறிப்பிட வேண்டும். தனது மகன் மீதுள்ள பாசம் தனது காதலனுடனான உடல்சார்ந்த உறவை தவிர்க்க வைத்தது என்பது இந்தக்கதையின் கருப்பொருளுக்குப் பொருந்தாத ஒரு உரையாடலாக அமைந்திருந்தது. சிங்கள இராணுவ வீரனிடம் அவன் தன்னை ஒரு பெண்ணாகவே பார்த்து காதல் கொண்டிருந்தான் என்றும், (அவன் தனது இனத்தை அடக்கவென வந்த கருவியான அரச இராணுவத்தைச் சேர்ந்தவன் என்ற போதும்) இந்த ஒரு காரணத்திற்காகவே அவனுடன் தனக்கும் காதல் வந்தது என்றும் சொல்கிறது ஒரு பெண்பாத்திரம். இந்தப் பாத்திரத்தின் மூலம் சமூகப் புறநடையான பாத்திரத்தையும் துணிச்சலுடன் உருவாக்கமுடியும் என காட்டிய மெலிஞ்சி முத்தனுக்கு அவர்களது உறவு முறிந்ததற்காகவும் அவள் அவனிடமிருந்து பிரிந்ததற்காகவும் சமூக யதார்த்தத்திலிருந்து விடுபட முடியாத ஒரு காரணத்தைச் சொல்ல வேண்டிய தேவை ஏற்படுவது இந்தப்பிரதியில் வரும் இன்னொரு முரண். வயோதிப வயதிலும் தனது மனைவிக்கு வேறொரு ஆணுடன் காதல் இருந்ததை மனத்துயரோடேனும் ஏற்றுக்கொண்டு அவளை இன்னமும் நல்லவள்தானென்று வயோதிபர் பாத்திரம் சொல்வதற்கு இந்த உடல்சார்ந்த உறவு நிகளாமை ஒரு காரணமாக இருக்கலாமோ என்ற எண்ணம் எழுவது அந்தப்பாத்திரத்தின் வலுவைக் குறைக்கிறது. இந்த இடத்தில் செம்பருத்தி என்ற தனது நாவலில் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஜானகிராமன் எழுதிய ஒரு வரி ஞாபகத்துக்கு வருவதைத் தவிர்க்க முடியவில்லை. மனதுக்குள் கட்டிலை வைத்துவிட்டபின் நிஜத்தில் அப்படி இருப்பதில் எ்னன இருக்கிறது என்று கேட்பார் அவர். நாடகத்தில் வரும் இந்தப்பாத்திரம் தனது உறவு பற்றி அப்படி ஒரு வசனத்தைப் பேசாமலே இருந்திருக்க முடியுமான சூழல் ஏன் தவிர்க்கப்பட்டது என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.



இந்தக் கேள்விகள் எழுகின்ற போதும் மோகப்பறவை ஒரு அருமையான கலைப்படைப்பாக வெற்றிபெற்றுள்ளது என்பதில் ஐயமில்லை. மெலிஞ்சி முத்தன் மிகவும் நம்பிக்கையூட்டும் ஒரு கவனத்திற்குரிய கலைஞர் என்ற முத்திரையைப் பதித்துவிட்டிருக்கிறார். அவருக்கு இந்த நாடகத்திற்காக நிறையப் பாராட்டுக்கள் கிடைத்திருந்தன என்பதை நான் அறிவேன். ஆம் இவர் இந்தப்பாராட்டுகளுக்கெல்லாம் தகுதியான ஒரு கலைஞன் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை என்று துணிந்து கூறலாம்!



கனடாவின் அவசரம் நிறைந்த வாழக்கைச் சூழலில் ஓயாமல் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு சமூகத்தின் மூன்று தலைமுறையைச் சேர்ந்த கலைஞர்களை ஒன்றுபடுத்தி இத்தகைய ஒரு நிகழ்வை நடாத்தியுள்ள மனவெளி அரங்காற்றுகைக் குழுவினர் பாராட்டுக்குரியவர்கள். பதினேழு வருடங்களாக தொடர்ச்சியாக இப்படி ஒரு நாடக நிகழ்வை நடாத்திவருவது என்பது ஒன்றும் சாதாரணவிடயமல்ல. அவர்களது இந்த இடையறாத முயற்சிக்காக இவர்களை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!



வாடகைக் கார் ஓட்டுனர்களை உறுத்தும் UBER

UBER என்கிற App ஐ பதிவிறக்கம் செய்துகொண்டால் இதன் மூலம் உங்களுக்குத் தேவையான வாடகைக் காரை அழைக்கமுடியும். முதலில் உங்கள் தனிப்பட்ட விபரங்கள் உட்பட கடனட்டை போன்ற விபரங்களைப் பதிவுசெய்து கணக்கு ஆரம்பிக்கக் கேட்கப்படுவீர்கள். இதற்கு எந்தக் கட்டணமும் இல்லை. இது சட்டத்திற்கு அமைவாகப் பாதுகாப்பாக அமைக்கப்பட்டுள்ளதாக ஊபர் தெரிவிக்கின்றது. சாதாரண வாடகைக் காரை விட இதன் சேவை விரைவாகக் கிட்டுவதாகப் பயனாளர்கள் தெரிவிக்கிறார்கள். இச் சேவையைப் பல இளம் பராயத்தினர் குழுக்களாகச் செல்லும் போது உபயோகிப்பதன் மர்மம் என்வென்றால் ஒருவரின் கணக்கிலிருந்து 20 டொலர் வரையான முதல் சவாரி இலவசமாகக் கிடைக்கிறது. இந்த விதிக்கமைய அவர்கள் தங்கள் முதலழைப்பை மாறிமாறிப் பயன்படுத்துகின்றனர்.



ரொரண்டோவில் நடைபெறுகின்ற பான் ஆம் விளையாட்டுப் போட்டிகளுக்குத் தேவையான போக்குவரத்துச் சேவையை இதன் மூலம் தீர்த்துக்கொள்ள முடியுமென்றாலும் இது சாதாரண வாடகைக் கார் ஓட்டுனர்களில் வருவாயில் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை. இதனால் ஊபர் சேவையை ரொரண்டோவிலுள்ள வாடகைக் கார் ஓட்டுனர்களின் சங்கங்கள் எதிர்த்துவந்தன. அண்மயில் ஒண்டாரியோ நீதிமன்றத் தீர்ப்பொன்று ஊபரைத் தடைசெய்ய சட்டத்தில் இடமில்லை என்று கூறியுள்ளது சாதாரண ஓட்டுணர்களைச் சங்கடத்தில் ஆழித்தியுள்ளது.

WINNERS

Insurance And Investment Services

ஆயுள் காப்புறுதி ஏன் அவசியம்?

நாம் வாழும் காலத்திற்கும், இதற்கு பின் நாட்களிற்கும் எமது வாழ்விற்கான நதித் தேவைகளை உறுதி செய்வது ஆயுள் காப்புறுதிகள் ஆகும். இதற்கான சிறந்த காப்புறுதிகளை வழங்குவதில் முதன்மையானவர்கள் நாங்களே.



கடந்த 20 வருடங்களாக இதற்கான ஆலோசனைகளை வழங்குவதில்
என்றென்றும் நாங்கள் உங்களுடன் இருக்கின்றோம்,
நீங்களும் எங்களுடனேயே அழையுங்கள் எங்களை
உங்கள் இலவச காப்புறுதி ஆலோசனைகளுக்கு

உங்கள் வாழ்க்கைக்கும், வாழ்க்கைக்கு பிறகும் நாங்கள் இருக்கின்றோம்.

NO BODY CAN BEAT OUR RATES ON LIFE & MORTGAGE INSURANCE

உங்கள் முதலீட்டு திட்டங்களுக்கும் (RRSP. PENSION PLANS, TFSA), குழந்தைகளுக்கான முதலீட்டு திட்டங்களுக்கும் (RESP) மேலும் உங்களது தற்போதைய காப்புறுதி, PENSION PLAN போன்றவை உங்களுக்கு போதுமானதா! சிறந்ததா! என்பனபற்றி ஆலோசனைகளுக்கு



மருத்துவ பரிசோதனையற்ற காப்புறுதி (85 வயது மட்டும்) CRITICAL ILLNESS, DISABILITY, MEDICAL, மற்றும் பிரயாணத்துக்கான காப்புறுதிகளும் எம்மிடம் மிகவும் குறைந்த கட்டணத்தில் பெற்றுக்கொள்ள முடியும்

INSURANCE RATES

MORTGAGE க்கான காப்புறுதிகள் வங்கிகளிலும் பார்க்க மிகவும் குறைந்த கட்டணத்தில் எம்மிடம் பெற்றுக்கொள்ள முடியும்



TERM INSURANCE

FOR $250,000/=

AGE	TERM 10 NON-SMOKER		TERM 20 NON-SMOKER	
	MALE	FEMALE	MALE	FEMALE
25	9.99	6.93	13.50	10.44
35	8.73	6.66	14.22	10.62
45	19.26	12.69	31.77	23.31

FOR $500,000/=

TERM 10 NON-SMOKER		TERM 20 NON-SMOKER	
MALE	FEMALE	MALE	FEMALE
18.45	12.15	26.90	18.45
18.00	14.40	28.80	21.60
33.30	22.50	61.20	46.31



FOR $1,000,000/=

TERM 10 NON-SMOKER		TERM 20 NON-SMOKER	
MALE	FEMALE	MALE	FEMALE
29.70	16.20	45.90	28.80
31.50	23.40	51.93	37.89
60.84	39.60	115.02	87.30



20 PAY WHOLE LIFE NON SMOKER					
$100,000/=		$250,000/=		$500,000/=	
MALE	FEMALE	MALE	FEMALE	MALE	FEMALE
56.63	48.47	125.21	106.93	222.79	168.12
66.24	56.21	148.81	128.83	268.71	215.56
78.91	69.30	181.76	158.80	332.06	282.74
95.15	79.74	221.94	188.35	416.67	351.45
114.03	94.86	265.80	227.03	517.50	420.30
137.50	115.74	325.06	279.23		
171.27	140.58	417.58	337.00		

AGE	WHOLE LIFE NON SMOKER $100,000/=		$250,000/=		$500,000/=	
	MALE	FEMALE	MALE	FEMALE	MALE	FEMALE
20	36.67	31.67	68.54	55.42	124.58	98.75
25	41.67	35.42	82.29	67.50	151.25	123.33
30	47.64	40.76	98.54	86.86	184.17	157.81
35	57.78	48.24	126.46	109.87	241.25	206.40
40	73.26	60.57	163.96	132.66	313.75	254.13
45	92.61	78.66	213.75	180.10	413.75	350.83
50	110.42	96.32	257.28	220.46	504.58	440.92


CONTACT

RUBAN 4169538036

E:mail : winnersinsurance@bell·net
Web : winnersinsurance·com


15 YEARS IN CANADIAN INSURANCE & INVESTMENT INDUSTRY

ONE MILLION DOLLAR COVERAGE AS LOW AS $16.20 (10 YEAR TERM FOR A FEMALE NON SMOKER)



Canada Life · SSQ Financial Group · Manulife Financial For your future · Sun Life Financial · Desjardins · Industrial Alliance Insurance and Financial Services Inc. · Empire Life


Represent over 30 insurance investment companies including the companies shown in this advertisement
*** SOME CONDITIONS APPLY· ALL RATES ARE NON SMOKER RATES & SUBJECT*
To change without notice rates are quoted as of 23rd oct 2014



CAPS
முன்பள்ளி ஆங்கில ஆசிரியர்,
தாதியர் பயிற்சிகள்
வெளிநாட்டுக் கல்வியையும்
வேலைவாய்ப்பையும் இலக்காகக்
கொண்ட பாடத்திட்டங்கள்.
இமிகிறேசன் உதவிகள்.
IELTS
NURSING
Etc.
யாழ்
திருநெல்வேலி
சந்திக்கருகில்
தொடர்பு...
077-386-7458
021-205-2240
Canadian Academy of Professional Studies
52, Palaly Road, Thirunelvely, Jaffna.


Oorbook.com
யாதும் ஊரே...
ஊருக்கும் உறவுகளுக்குமான சமூகவலைத் தளம்


"Make Your Dream Home Come True"
416-230-1107
RIGHT AT HOME REALTY INC BROKERAGE
RIGHT AT HOME REALTY INC., BROKERAGE
PARAM GNANASWARAN
REAL ESTATE BROKER
HOME OFFICE:
401-7045 EDWARDS BLVD
MISSISSAUGA, ONT.L5S 1X2
PH# 905-565-9200
MAIN OFFICE:
202-895 DON MILLS ROAD
TORONTO, ONT.M3C 1W3
PH# 416-391-3232


ONTARIO FINANCIAL CENTRE
உங்கள் அனைத் துவிதமான மோட்கேஜ்
தேவைகளுக்கும் எம்மை நாடுங்கள்
Rohan Rajah
Financial Advisor Agent
Cell: 416 457 2050
Office: 416 410 4633
Fax:416 410 3063
1825, Markham Road, Scarborough On. M1B 4Z9


HomeLife Today Realty Ltd., Brokerage
Independently Owned and operated
Higer Standard Agents,, Higher Results
HOMELIFE
HIGHER STANDARDS
Parathan Navaratnam
Sales Representative
Business: 416-298-3200 Direct: 647-524-7655
210- 31 Progress Ave., Toronto ON. M1P 4S6


அடமானக்
என் பணி கடன் செய்து கொடுப்பதே!
GTA Square
EXECUTIVE
MORTGAGE
VERICO
MORTGAGE BROKERS NETWORK
Dir : 416-543-6614
Tel : 416-299-0003 Fax: 416-299-0043
dasn@executivemortgagecanada.com
http://das.executivemortgagebroker.com
FSCO LICENCE # M08007147/12286
DAS NARAYANASAMY
MORTGAGE BROKER


கனவு மெய்ப்பட வேண்டும்!
கைவசமாவது விரைவில் வேண்டும்!
NATHAN SIVAGNANAM
Direct:- 416 888 7038
Office:- 905 454 4000
homelifemiracle.nathan@yahoo.ca
HomeLife/Miracle
Realty Ltd.- Brokerage
Independently Owned & Operated


Buy,Sell or Invest
We Offer, Not 1 but 2 Professionals Working
Together To GET YOUR HOME SOLD!!!
"TOP 5% SALES REPRESENTATIVE IN CANADA"
HELEN & FRANCIS ANTHONIPILLAI
SALES REPRESENTATIVES | HOMELIFE/FUTURE REALTY INC., BROKERAGE* 7 EASTVALE DR #205, MARKHAM, ON L3S 4N8
INFO@HELEN-HOMES.CA
416.830.5724
WWW.HELEN-HOMES .CA
INFO@AGENTFRANCIS.CA
416.854.4183
WWW.AGENTFRANCIS .CA
*INDEPENDENTLY OWNED AND OPERATED.


BUYING / SELLING REAL ESTATE
ஒரு அழகான வீட்டை வாங்க, விற்க...
NANDA KANDASAMY
Sales Representative
Dir: 416-457-4509
*Independently Owned and operated
Higher Standard Agents... Higher Results
HomeLife Today
Realty Ltd., Brokerage*
Off: 416-457-4509


CANAM.V.FINANCIAL SERVICES.
GTA Square
For All Your Mortgage Needs, Call
Vyra Karunananthan
Financial Advisor
Tel : 416-410-7373
Fax : 866-243-2410
416-261-0070
416-264-9647
Cell: 416-277-3818
email : vyrakaru@rogers.com
5215 Finch Ave. E, Suite 217, Scarborough, ON. M1S 0C2


Your House Comfort in your mind...
Air Conditioner from $1450
Gas Line from $180.00
All our technicians are TSSA certified
24/7 Service
FREE HOME ESTIMATES CALL:
416 986 9554
GREENI
HEATING&COOLING
Sales, Installation, Annual Maintenance & Repair


His Master's Legal Services
Professional Corporation
Rajan Mahavalirajan B.A
Commissioner of Oaths • Licensed Paralegal
Law Society of Upper Canada
Traffic Tickets- Provincial Offences | Small Claims Court | Employment Law |
Criminal Law- Summary Conviction | Human Rights Law | Landlord Tenant Board |
Immigration Law |
Tel:416-757-2525 Fax:905-430-1627
info@masterslegal.com www.masterslegal.com
1193 A Brimley Road, Suite 5, Toronto, ON. M1P 3G5
GET UP AND CALL US, DON'T GIVE UP YOUR RIGHTS !